www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூன்.19-25,1994
ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 55



## அஸ்ரப்பின் ராஜினாமாவும் அடுத்... தேர்தலும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

1994 ஒரு கண்ணோட்டம் உதை பந்தாட்டம்

யுத்தக் கெடுபிடியும் வடக்கு-கிழக்கு சுற்றுப்புற சூழலும்

அரசியல் அலசல்



ரசிகன் தரும் இலக்கிய நயம்

லேடீஸ் ஸ்பெசல் அழகுக் குறிப்புகள்

## உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் உள்ளங்கை ரேகைகளில் அறிவது எப்படி?

பக்கம் 14 ல்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்ட

## சொல்லிலும் செயலிலும்

"நான் உங்களுக்குச் சொல்கிறேன்- உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." (மத் 5:44ல்) என்று நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.

தாம் சொல்லியதை செயலில் காட்டினாரா? எம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். சொல்வதை நாம் செயலில் காட்டுகிறோமா? சொல்லுவது ஒன்று, செய்வதோ மற்றொன்று. இது மனிதராகிய எமது சுபாவம். நான் அப்படி செய்வேன், இப்படிச் செய்வேன் இவையெல்லாம் சொல்லிலன்றி, செயலிலில்லை. எல்லாம் சொல்வீச்சுக்களேயன்றி, செயல்வீச்சுக்களல்ல. மனுஷகுமாரனும் இப்படித்தான் செய்தாரோ? அதுதான் இல்லை...அவரது பாடுகளின் பாதையை இந்த வெந்து நாட்களில் சற்று நோக்குவோம்.

சத்துருக்களை சிநேகியுங்கள் என்று சொன்ன மனுஷகுமாரன் கெத்சமனேத் தோட்டத்தில் என்ன செய்தார் என்பதை நோக்குவோம். அவரின் சீடர்களில் ஒருவன் அவரைக்காட்டிக்கொடுப்பான் என்பதை அவர் முன்னமே அறிந்திருந்தார். (லூக்-22:22) கெத்சமனே தோட்டத்தில் போய் வியாகுலப்பட்டு ஜெபித்தார். யூதாஸ்காரியோத்து என்ற சீடன் அவரை முத்தம் செய்து காட்டிக்கொடுக்கிறான். அவன் இயேசுவோடு கூட இருந்தவன். அவருடைய சீடன்-அவருடைய நண்பன். கடைசியில் அவரையே காட்டிக் கொடுத்த பகைவன். (மத்-26:50ல்) சிநேகிதனே என்று அவனை அழைக்கிறார். காது வெட்டப்பட்ட பிரதான ஆசாரியனின் வேலைக்காரனை சொஸ்தமாக்கினார். தான் அன்று சொன்னதை செயலில் காட்டினார். சத்துருக்களை சிநேகித்தார்.

நண்பர்கள் பகைவர்களாகி எம்மையே தாக்கிடும் சந்தர்ப்பங்கள் உலக வாழ்வில் அதிகம். கூடயிருந்தே குழி பறிப்பவர்களும் அதிகம். இவற்றுக்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் நாமும் இப்படிப் பட்டவர்களாய் மாறாதிருக்க இறைவனிடம் கேட்க வேண்டும். எமது சொல்லும், செயலும் ஒன்றாய் இருக்க இன்றே இறைவனின் துணையை நாடுவோம். தேவன் தாமே ஒவ்வொருவரையும் அசிர்வதிப்பாராக.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



## நபியவர்களின் 'ரவ்ளா'வைத் தரிசிப்பதின் மாண்பு

"எனது அடக்கஸ்தலத்தைத் தரிசிப்பவருக்கு மறுமையில் எனது 'ஷபாஅத்' (மன்றாட்டம்) கடமையாகிவிட்டது" என்றும், "யாராவது எனது மறைவுக்குப் பின்னர் ஹஜ்ஜு, உம்ரா செய்துவிட்டு எனது அடக்கஸ்தலத்தை தரிசிக்கிறாரோ அவர் நான் உயிருடன் இருக்கும் போதே என்னைத் தரிசித்தவரைப் போன்றவராவார்" எனவும் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

நபிகள் பெருமானாரின் பூவுடலைத் தாங்கி நிற்கும் புனித ரவ்ளாவை 'ஸியாரத்' செய்வது ஆண்-பெண் இரு பாலாருக்கும் முக்கிய ஸுன்னத் ஆகும். ஒரு முஸ்லிம் தனது வாழ்நாளில் ஒரு தடவையாவது திரு நபி (ஸல்)அவர்களின் புனித ரவ்ளாவைத் தரிசிக்க வேண்டியது கட்டாயக் கடமையாகும் என இஸ்லாமிய சன்மார்க்க சட்ட நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மாமதீனாவில் மா நபி (ஸல்) அவர்களின் மாசற்ற பூவுடல் கஸ்தூரி வாசம் கமழ, இலங்கும் பேரொளிமயமாய் அழியாமல் இலங்கிக்கொண்டேயிருக்கின்றது. எனவே ஹஜ்ஜு-உம்ரா கடமைகளை நிறைவேற்றச் செல்லும் நாம் மாமதீனா ரவ்ளாவுக்குச் சென்று மாண்புறு நபிகளாருக்கு ஸலாம் கூறி- ஸலவாத் மொழிந்து தரிசிப்போமாக. இறையருள் பெறுவோமாக.

திஹாரிய-ஹாரித்.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
முரசின் ஓராண்டு நிறைவையிட்டு
இத்தனை பூரிப்பா...?!
இன்னமும்-வந்துகொண்டேயிருக்கின்றன
வாழ்த்துச் சொல்லும் மடல்கள்!

கவிதைப் போட்டி-
குடும்பத் தலைவிகளையும்-
குறுங் கவிதை எழுதத் தூண்டியிருக்கிறது.
ஆர்வத்தோடும்- அதிவேகத்தோடும்
களம் காண வரும் கவிதைகள்
வெளியுலக நடப்புக்களில்
பெண்கள் காட்டிவரும் அக்கறையையும்
ஆழ்ந்த கண்ணோட்டத்தையும்
வெளிப்படுத்துவது வரவேற்கத்தக்கதல்லவா?

அயலூர் அரசியல் நிலவரம்கூட
பெண்களுக்கு தெரியாது என்று
நினைத்துக்கொண்டிருந்தது ஒரு காலம்.
தென்னாபிரிக்காவின் மாற்றம் உட்பட
வெளியுலக அரசியல் நிலவரங்கள்
அனைத்தையும்
அறிந்தும், அறிந்து கொள்ளவும்
பெண்கள் இப்போது
விரிந்த கண்ணோட்டம் செலுத்துகிறார்கள்.

இருந்தும்-இப்போதும்
தமக்குள் சிலர்.
'பெண்களுக்கு சிறகு எதற்கு?
பேதைத்தனமே போதும்' என்று
பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
எனினும்-
காலமாற்றத்திற்கு ஏற்றதான
நியாயமான மாற்றங்களை
எவராலும் நிறுத்திவிட முடியாது.

■

சுவிட்ஸர்லாந்தில் வைத்து
இலங்கைத் தமிழர் ஒருவர்
துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் சிலரை
அங்குள்ள பொலிசார் கைதுசெய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்
புலிகளின் முக்கிய தலைவராக இருந்த
கிட்டுவிற்கு நெருக்கமாக இருந்தவர்.

ஏற்கனவே-
சுவிட்ஸர்லாந்தில் உள்ள
இலங்கை அகதிகள் கலங்கிக்கொண்டிருக்கிறார்கள்.
திருப்பி அனுப்பவேண்டாம் என்று
தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

புலிகள் அமைப்பினர் உட்பட
சகல தமிழர் அமைப்புக்களும்
அகதிகளை திருப்பியனுப்ப வேண்டாம்
என்றுதான் சொல்லி வருகின்றன.

அப்படியிருக்கும்போது-
எரிகிற நெருப்பில்
எண்ணெய் ஊற்றுகின்ற செயலாக
எம்மவர் மோதல் எதற்காக?
பொறுப்பேயில்லாத
வெறுப்பூட்டும் செயல்கள் தேவைதானா?

கைது செய்யப்பட்டவர்-
புலிகள் அமைப்பின் கட்டளைப்படியல்ல-
சொந்த விருப்பின்படியே-தனிப்பட்ட ரீதியில்
அத்துமீறலில் பங்குகொண்டிருக்கக்கூடும்.

ஆனால்-
புலிகள் ஏன் கண்டிக்கவில்லை.
கைது செய்யப்பட்டவர் பற்றியும்
அவருக்கும் தமக்கும் உள்ள
தற்போதைய உறவு நிலை என்னவென்றும்
ஏன் விளக்கமளிக்கத் தயங்குகிறார்கள்?

இவ்வாறான செயல்களை கண்டிப்பதும்,
தொடர்ந்து நடக்காமல் தடுப்பதும்
வெளியுலக வெறுப்பினை தவிர்க்கும்
மிக முக்கிய பணியல்லவா?

ரஜினிகாந்தின் நட்சத்திர விழாவை
கண்டித்த வேகத்தை
வெளியுலகில் நம்மவர்களுக்குள் நடக்கும்
கொலை விழாக்களை கண்டிப்பதில்
காட்டலாம் அல்லவா?

நட்சத்திர விழாக்களால்
நமக்குப் பெரிய நஷ்டம் வராது.
ஆனால்-கொலை விழாக்களால்
நம்மீது வெளிநாட்டார்
விருப்புக்கொள்ளாத
உலக அனுதாப நஷ்டமன்றோ
ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.
யோசிக்க வேண்டியவர்கள்
தயவுசெய்து யோசிக்கவேண்டும்.
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-52

களம்தேடி வந்து விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**பொன்னுலகு**

நெருப்பைச் சுமந்து
கறுப்பைக் காத்த
கம்பீரம்; நீ
புரியும் புன்னகையில்
தெரியுதொரு பொன்னுலகு.

திருமதி. விஜயலக்ஷ்மி முத்துக்குமார்
கொழும்பு-13.

### வியக்கப்பட்டவை

**மண்டேலாவின் கேள்வி..**

'எங்கும் பிரச்சனைதான்
இங்குமட்டுமில்லை' என்ற
சங்கை இனி ஊதாதீர்..
எங்கள் பிரச்சனை தீர்ந்தாச்சு.
உங்கள் பிரச்சினை தீர்வதெப்போ?

ஜி.ஸ்ரீநேசன்-மட்/இந்துக்கல்லூரி.

**விடுதலை**

கறுப்பின 'பேனா'வினால்
வெள்ளையின தாளில்
சரித்திரமாக்கப்பட்டதே
மண்டேலா எனும் நூல்.

என்.இந்திரானி-கொழும்பு-12.

**சுதந்திரம்**

அகிம்சை
அழிவதுமில்லை.
அடக்குமுறை.
தொடர்வதுமில்லை.
நிமிர்ந்து நில்
நீயும் சிரிக்கலாம்.

சோ.மகேஷ்வரன்
கந்தப்பளை.

**அகிம்சையும்-அமைதியும்**

அன்றைய காந்தி
அகிம்சையின் சின்னம்!
இன்றைய காந்தி
அமைதியின் சின்னம்!

சகீலா அனஸ்-வவுனியா.

**நேரம்**

ஒரு லட்சியவாதி
அரசியல்வாதியாக
மாறும் நேரமிது.

ஜெரி ஜேசுதாசன்
திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல-55



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 25.06.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 55
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.



**மாறும் தடங்கள்**

தோற்றுப்போன
தோல் வெறியா
வாக்குச்சீட்டாய்
வளைந்து நிற்பது?

நிருஷினி யுவேந்திரா
திருக்கோவில்.

**பரிசு**

சனநாயகத்தின்
ஜனன விழாவிற்கு
மன்டேலாவின்
முதற் பரிசு.

தம்பி
திருகோணமலை.

**நம்பமுடியவில்லை**

ஆபிரிக்கத் தலைமகனே!
ஆனாலும் நம்பமுடியவில்லை-உன்
மாபெரும் தேடலின்
மகத்தான 'பெறுதல்' இதுவென்று!

திருமதி யோ.யோகேந்திரன்-திருக்கோவில்.

**அரசியல்**

இன்னும் கொஞ்சம்
தாமதித்திருந்தால்!
உங்கள் பெயருக்கு
நேரேகூட
'டிக்' மார்க் விழுந்திருக்கும்.

ராமசாமி ரமேஸ்குமாரி
நானுஓயா.

**பாடம் சொன்னவன்**

நீ
அணுத் தேசத்திற்கு
அஹிம்சையால்
பாடம் கற்பித்தவன்
உன் வெற்றி
உன் மக்களுக்கு
மட்டுமல்ல
உலகத்தோருக்கும்தான்.

க.பூர்ணிமா-தெஹிவளை.

**புதிய உதயம்**

இருண்ட தேசத்தின்
உதய சூரியன் மலர்கிறது
வாக்குப் பெட்டியின் வாயினில்
ஜனநாயகம் புலர்கிறது.

ஷர்மி-கண்டி.

**யார் தெரியுமா?**

'ஜனநாயகத்தை
ஜனனமாக்கிய
கறுப்பு இனத்து
காந்தி மகான்!'

விஜிதா ஆசீர்வாதம்
கல்முனை-02.

**ஜனநாயகம்**

தலை குனியும்
எங்கள்
ஜனநாயகம்;
உன்
தேசம் கண்டு!

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**உண்மை**


நீங்கள் சிரித்துக்
கொள்கின்றீர்கள்
எனது தேசம்
அழுது
கொண்டிருக்கிறது.

இறால்குழி
சி.விஜயகுமார்.

**தீர்வு**

வேட்டுக்களால் தீர்க்கப்படாதது
வோட்டுக்களால் தீர்க்கப்படுகிறது.

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.




இராஜதந்திரியின் அரசியல் அலசலும், நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும் பாராட்டக்கூடியதாக உள்ளன. அத்துடன் வியக்க வைக்கும் தகவல்பெட்டி, மகாபாரத கதை வசனம், தேன் கிண்ணம் என்பவை வெகுஜோர். இடைவிடாது உன் பணியைத் தொடர வாழ்த்தும் வாசகன்.

ஏ.எச்.ராசீன் மொகமட்-ஏத்தாலை.

▫▫

எனதன்பின் தினமுரசே! வானிலே மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் போன்று வெள்ளி தோறும் எங்கள் கரங்களில் மின்னிக்கொண்டிருக்கின்றாய். கொலை விழும் நேரம் தொடர் கதையும், இலக்கிய நயமும் எழுதும் பெயரில்லா ரசிகனுக்கு எமது நல்வாழ்த்துக்கள் பல கோடி..

கே.சுபாஷினி,கே.கோகிலா, ஆர்.சுமதி, ஆர்.சுமித்ரா, ஆர்.ரம்யா-நிந்தவூர்-06.

▫▫

தினமுரசே! நீ கவர்ந்த எல்லோரிலும் உன்னைக் கவர்ந்த எல்லோரிலும் நானும் ஒருவன். 54வது முரசுவரை என் கையில் கிடைத்துவிட்டாய். இனிமேலும் வாசகர்களால் பொறுக்கமுடியாது. உடனே ரசிகனை அறிமுகப்படுத்திவிடு- இல்லையோ இத்தோடு நிறுத்திடுவேன் உன் தொடர்பை.

ஜெ.நவபுத்திரன்-கல்முனை.

▫▫

குறுகிய காலப்பகுதியில் உந்தன் அளப்பரிய சேவையால் ஆயிரமாயிரம் இதயங்களில் இடம் பிடித்துவிட்ட முரசே, நீ தரும் தகவல்பெட்டி தகவல்கள் புதுமையானதே. அதற்கு நிகர்காண முடியாது.

நமீலா,நிஸான், நஸீபா-பள்ளிவாசல்துறை முகாம்.

▫▫

தினமுரசின் ஓராண்டு பூர்த்தியை நினைத்து என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும் தன் மனதில் சரி என்று பட்டதை எடுத்துரைக்கும் த(எ)ங்களின் தினமுரசை மனம் திறந்து பாராட்டுகிறேன். வாழ்க வளமுடன் என்றென்றும்!

செல்வன். ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.

▫▫

செல்வி.சர்மிளா உதுமான்-வாழைச்சேனை, ஆர்.உதயச்சந்திரன்-அவிசாவளை, ம.கலா-உக்குவளை, எஸ்.என்.சுந்தா-மன்ராசி, எஸ்.மகேந்திரன்-கொழும்பு-10, பி.சிவா-கொட்டாஞ்சேனை, ஷியானி நளிர்-அக்குறணை, என்.ரத்னகுமார்-தலவாக்கெலை, செல்வி.பாத்திமா அஹமத்-குருத்தலாவை, எம்.நஜாத்-மூதூர்-06, எஸ்.பிரேமானந்-செங்கலடி, எம்.எஸ்.எம்.நவாஸ்-வேவுட, கே.வாணி-வத்தளை, செல்வி.கே.கோபியாமணி-பலாங்கொடை, கே.மாரன்-அக்கரைப்பற்று-09, ஏ.பஸ்மினா, ஹிதாயா, நிஹாரா, பொன்மலர், நலவாணி, நிசாந்தினி, லூட்ஸ்- அட்டன், ஞா.அருணா-கிண்ணியா, முகம்மட் ஹமீஸ்-அக்குறணை, எம் நிஷா முஸம்மில்- தியத்தலாவை, முகம்மட் ..பளீல்-ஏத்தாலை, செல்வி. ஆர்.பவானி-கோட்லோஜ் எஸ்டேட், வி.புண்ணியமூர்த்தி-பதுளை, எஸ்.ரிஸ்வான் முஹம்மட்- குருத்தலாவை, அ.டெனிஸ்- புங்குடுதீவு-1.




தித்திக்கும் தினமுரசே! உன்னை வெள்ளி அன்று காணாவிட்டால் எங்களுக்கு சோகம்தான்.

சேகுமுகைனதீன், கயறு நிஸா, பரீதா, ஜமால்தீன், பானு, ஜனுபா, அஸீஸ், நிபாஸா-காங்கயனோடை.

வித்தியாசமான செய்திகளை விறுவிறுப்பாய் தரும் முரசுக்கு வாழ்த்துக்கள். தொடரட்டும் உன் பணிகள்.

எஸ். பௌசுனா நசாக்-சீனக்குடா.

முரசின் முதலாண்டு நிறைவு கண்டு மனதிலும் மகிழ்ச்சியின் நிறைவு. பக்கங்களின் அதிகரிப்பு எமக்கொரு 'போனஸ்'. வரும் காலங்ளில் முரசின் வளர்ச்சி மேலும் அதிகரிக்க வேண்டுமென்பதே இந்தச் சின்ன இதயத்தின் பெரிய பிரார்த்தனை. நூறாண்டுகாலம் வாழ்க!

செல்வி.நிஸ்வாஸலாம்-தர்கா நகர்.

▫▫

இனிய காதலி முரசே!

நீ வாரா வாரம் சுமந்துவரும் அம்சங்கள் சொல்லில் அடங்காதவை. இன்னும் நீ சீர்விட்டு சுடராய் விளங்க என் இனிய காதலிக்கு வாழ்த்துகிறேன். வாழ்க வளர்க!

சி.சீத்தாராமன்-இங்கிரிய.

▫▫

ஆண்டு நிறைவையொட்டி உன் அழகிய இதழ்களால் அதிக இரு பக்கங்களுடன் நீ சுமந்து வந்த அரிய ஆக்கங்கள் அனைத்தும் எமக்கு மனநிறைவை தந்தன. ரசிகன் படைக்கும் இலக்கிய நயம், நில் கவனி முன்னேறு என்பன எமது சிந்தைக்கு விருந்தளிக்கின்றன. புது பொலிவுடன் என் கரம் வந்த உன்னை பூரிப்புடன் வாழ்த்துகிறேன்.

ராமசாமி ரமேஸ்வரி-நானுஓயா.

▫▫

என் இனிய முரசே!

சிந்திக்க வைக்கும் தேன் சுவை அம்சங்களை ஏந்தி வாராவாரம் வெளிவரும் தினமுரசே! குறிப்பாக ரசிகன் எழுதும் இலக்கிய நயம், ஆன்மீகம், உலக ரவுண்டப், லேடீஸ் ஸ்பெசல், தேன் கிண்ணம் போன்ற உலக அதிசயங்களை வாராவாரம் வெளியாக்கும் தினமுரசே, உன்னில் உண்மையுண்டு. எனவே எங்களைப் போல மாணவ சமுதாயத்தினருக்கு வெற்றியுண்டு. மேலும் உன் சேவை எங்களுக்குத் தேவை! இன்னும் பிரகாசிக்க நல் வாழ்த்துக்கள்! வாழ்க.

எஸ்.பளீள்தீன்-அநுராதபுரம்.

▫▫

புத்தம்புது முரசே,

புதுமைகள் பல தரும் முரசே, நித்தம் உன் அரசே, என் நினைவெல்லாம் நீதான் முரசே, தித்திக்கும் தீந்தமிழில் திகட்டாமல் வரும் முரசே, நீ தினந்தோறும் வந்திட்டாலும் உன் வரவுக்கு நிகரேது முரசே,

எஸ்.அலெக்சாந்தர்-கொட்டகலை.

▫▫

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# யாழ்குடா இராணுவ நடவடிக்கையை தடுக்கத் திட்டம்

# இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் புலிகள் தாக்குதல்!

## விமானத் தாக்குதல்கள் வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள் பார்வையில்!

- கிழக்கில் மட்டக்களப்பிலும் திருமலையிலும் புலிகள் அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளனர்.
- யாழ்குடாநாட்டில் காரைநகர் பகுதிக்குள் ஊடுருவி கடற்படையினர் மீது தொடர் தாக்குதல்.
- படையினர் புலிகளுக்கு பதிலடியாக ஷெல் தாக்குதல்கள் நடத்துகின்றனர். குடியிருப்புக்கள்மீதும் ஷெல்கள் விழுந்து பொதுமக்களது அதிருப்திகள் வளருகின்றன. குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையை நிறுத்தி மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்த 4வது ஆண்டு நிறைவை சமீபத்தில் நினைவுகூர்ந்த புலிகள் அமைப்பினர் தமது பரவலான தாக்குதல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.

யாழ்குடாநாட்டின் மீது அரசாங்கம் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டுள்ளதாக கூறிவந்த புலிகள் அமைப்பினர் படையினர் மீது தாக்குதல்களை பரவலாக்கியுள்ளனர்.

கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி படையினர் சென்றவேளையில் புலிகள் கிழக்கில் உள்ள படையினர்மீது தாக்குதல் நடத்திருக்கிறார்கள். வடக்கு நோக்கி படைகள் நகர்வதை தடுக்கவே இவ்வாறான உத்திகள் கையாளப்படுவதாக கருதலாம்.

யாழ் குடாநாட்டில் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள காரைநகர் பகுதிக்குள்ளும் புலிகளது அணி ஒன்று ஊடுருவியுள்ளது. ஏற்கனவே கண்ணிவெடி தாக்குதல் ஒன்றை அங்கு மேற்கொண்ட புலிகள் மீண்டும் ஒரு தாக்குதலை நடத்தி கடற்படையினர் தரப்பில் இழப்பை ஏற்படுத்தி உள்ளனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தாக்குதல் நடத்துவதன்மூலம் மேலும் முன்னேறி புதிய பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் படையினரின் எண்ணம் பாதிக்கப்படும் என்று புலிகள் நம்புவதாகத் தெரிகிறது.

ஏற்கனவே 'கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை பாதுகாப்பதே பெரும் சிரமம் என்றானபின்னர் புதிய பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர படையினர் முன்வரமாட்டார்கள் என்பதே புலிகளது இராணுவரீதியான கணிப்பாக இருக்கலாம்.

காரைநகரிலும், யாழ் தீவுப் பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன. படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் யாழ்குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மண்டை தீவில் இருந்தும் யாழ் நகரின் கரையோரப் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றதாகவும், அதில் 2 பேர் பலியானதுடன் 14 பேர் காயமடைந்தனர் என்றும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன. பலியானவர்களில் ஒருவர் அளவெட்டியைச்சேர்ந்த மீன் வியாபாரியான முத்து தேவநாயகம் (வயது 35) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ஷெல் வீச்சுக்கள் நடைபெற்ற இடங்களை யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியுள்ள இலண்டன் பி.பி.சி. செய்தியாளரும், ராய்டர் செய்தி நிறுவன நிருபரும் பார்வையிட்டு படம்பிடித்துள்ளனர்.

தாக்குதல் நடவடிக்கைகளை விரைவு படுத்த தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள புலிகள் அமைப்பின் யாழ்பகுதி முகாம்கள் இரண்டில் வெடி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. நிரேஜா என்னும் பெண் உறுப்பினரும், தியாகன் என்னும் ஆண் உறுப்பினரும் பலியாகியுள்ளனர். வேறு சிலர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதிகளிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கூட்டணி மீது 'புளொட்' பாய்ச்சல்!

## கிழக்கின் ஒற்றுமைக்கு தடை என்று கண்டனம்!!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பில் உள்ள 'புளொட்' இயக்கத்தினர் ஒரு கண்டனப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப் பட்டுவரும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

சிறுகச் சிறுக அழிக்கப்பட்டுவருகிறது கிழக்குத் தமிழ் மண். எமது முன்னோர் கோலோச்சிய மட்டக்களப்புப் பிரதேசத்தில், இன்று நாம் வக்கற்றவர்களாகிப் போய்க் கொண்டிருக்கிறோம். திட்டமிட்ட வகையில் நாம் எமது அன்னை பூமியிலேயே சிறுபான்மையினராக்கப்பட்டு வருகிறோம். எமது பொருளாதாரம் நசுக்கப்படுகிறது.

தனியாகவே அரசியல் செய்வோம் மட்டக்களப்பில் என்கின்றனர் அவர்கள்.

இதற்கு அவர்கள் கூறும் காரணம்- ஆயுதமேந்தியவர்களுடன் சேர்ந்தால் தமக்கு மாசு உண்டாகுமாம். தாங்கள் உண்மையான ஜனநாயகவாதிகள் ஆதலால் ஆயுதத்தைத் தொட்டவர்களுடன் ஐக்கியப்படுவது ஜனநாயகத்திற்கு இழுக்காகுமாம். சிறு குழந்தைக்கும் புரியும் இந்தக் கூற்றில் பொதிந்திருக்கும் கபடத்தனம்.

கூட்டணியின் தலைமை இந்தியாவில் பாதுகாப்பாக இருந்தபோது அவர்கள் பட்ட துயர் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று நாம் அறிவோமாயினும், கூட்டணியினரின் மனச்சாட்சிதான் எங்கே போய்விட்டது என்று கேட்கிறோம்.

கூட்டணியினர் இன்று தமிழின விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்களின் உன்னதமான தியாகங்களைக் கொச்சைப் படுத்துவதானது, வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தையும் அம் மாநாட்டை முன்னின்று நடத்திய தந்தை செல்வாவையும் கொச்சைப்படுத்தும் வேலையல்லவா?

உயிர் தமிழுக்கு உடல் தமிழ் மண்ணுக்கு எனப் போராடித் தம் இன்னுயிர் நீத்தோரின் அர்ப்பணிப்பின் மேல் ஏறி நின்றுதான் ஆயுதம் ஏந்தியோருடன் எமக்கு பேச்சில்லை, ஐக்கியமும் இல்லை என மட்டக்களப்பு மக்களுக்கு இவர்கள் கூறப்போகின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

மட்டக்களப்பில் தமிழரின் ஒன்றுபட்ட அரசியல் பலத்தை கூட்டணியினர் சிதைப்பது இதுமுதல் தடவையல்ல. 1977 பாராளுமன்றத் தேர்தலில் கட்சியின் மூத்த உறுப்பினர் இராசதுரைக்கு எதிராக காசி ஆனந்தனை ஏவிவிட்டு மட்டக்களப்புத் தமிழரின் அரசியல் ஐக்கியத்தைத் துண்டாடியதை இங்கு யாரும் மறந்துவிடவில்லை.

இந்தியத் தூதுவர் தீக்சித் சொன்னார் என்ற ஒரே காரணத்துக்காக இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் நடந்த 1989 தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ ஆகியோருடன் கூட்டு வைத்தபோது அவர்களது கையில் இருந்த ஆயுதங்கள் கூட்டணியினரின் கண்களுக்குத் தெரியவில்லையா? இன்று மட்டும் ஏன் ஐக்கியம் எனில் கசக்கிறது இவர்களுக்கு?

என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் அஷ்ரப் போட்டியிடலாம்?

## பொன்னம்பலமும் போட்டிக்கு தயார்!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் போட்டியிடலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து அஷ்ரப் முன்வைத்துள்ள தீர்வு திட்டம் குறிப்பிட்ட அங்கீகாரம் பெறுமானால் அஷ்ரப் போட்டியிட சாதகமான நிலை ஏற்படும். தொண்டா-அஷ்ரப் தீர்வுத்திட்டம் பற்றி யாழ்ப்பாணத்தில் புலிகள் எவ்வித கருத்தும் இதுவரை வெளியிடவில்லை.

அவர்களது செய்திகளிலும் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் (ஜுனியர்) ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது.

எம்.எச்.எம்.அஷ்ரப் போட்டியிட்டாலும் கூட ஜி.ஜி.பொன்னம்பலமும் போட்டியிடுவார் என்று தெரிகிறது.இந்நிலையில் அஷ்ரப் போட்டியிடாமல் தவிர்க்கக்கூடும்.

கிழக்கில் தனக்கு ஆதரவு தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள திரு.பொன்னம்பலம் தான் இலவசமாக வழக்காடி விடுதலை வாங்கிக்கொடுத்த இளைஞர்களை தனக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய வைக்க நினைப்பதாக தெரிகிறது. எனினும் அவரது முயற்சிக்கு எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும் என்று தெரியவில்லை.

பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பில் போட்டியிட அவர் வேட்பாளர்களை தேடி வருவதாகவும், அவரது கட்சியின் சார்பில் போட்டியிட எவரும் இதுவரை விரும்ப வில்லை என்றும் தெரிகிறது.

திரு.தொண்டமானும் அஷ்ரப்பும் தம்மோடு திரு.பொன்னம்பலத்தையும் சேர்த்துக்கொள்ளாமல் தள்ளிவைத்து விட்டார்கள். சமீபகாலத்தில் தன்னை ஒரு புலி ஆதரவாளராக அவர் காட்டிக்கொண்டாலும்கூட புலிகளோ ஏனைய தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளோ அவர்மீது நம்பிக்கை கொள்ள தயங்குவதையே அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் தனக்குரிய ஆதரவை தேடுவது சிரமமானதாகவே இருக்கும்.

எனினும் 1977ல் தமிழீழக் கோரிக்கைக்கான வாக்கெடுப்பையே எதிர்த்து போட்டியிட்டவரான திருவாளர் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடத் தயங்கமாட்டார் என்றே தெரிகிறது.

# துரை மறைவுக்கு புலிகள் துக்கம்!

## யாழ் குடாநாடெங்கும் சோக மயம்!!

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்கள் கடந்த சனிக்கிழமை கொழும்பில் காலமானார். யாழ்ப்பாணத்தில் இச்செய்தியை அறிந்த புலிகள் இயக்கத்தினர் மூன்று நாட்கள் துக்க தினம் அனுஷ்டிக்குமாறு யாழ்ப்பாணத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர். புலிகள் இயக்கக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது. யாழ் பல்கலைக்கழகம், பாடசாலைகள், அலுவலகங்கள், கடைகள், புலிகள் இயக்க அலுவலகங்கள், புலிகள் இயக்க முகாம்கள் போன்ற இடங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு இருந்தன. 15ம் திகதி புதன் கிழமை சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியர் துரைராஜாவின் மறைவை முன்னிட்டு புலிகள் விடுத்திருந்த அனுதாபச் செய்தியில், "1994 ஏப்ரல் 2ம் திகதி பிரபாகரனால் பேராசிரியர் துரைராஜா விருது



துரைராசா

வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். சிறந்த தேசப்பற்றாளர் என்று புகழப்பட்டவர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் துணிந்து செயலாற்றினார்", என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் க.குணரட்ணம் தனது அனுதாபச் செய்தியில் "மனித நேயம் மிக்க சமூக சேவையாளர் ஒருவரை இழந்துவிட்டோம்" என்று தெரிவித்துள்ளார்.

யாழ் ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் தனது அனுதாபச் செய்தியில், "தொலைநோக்குப் பார்வையோடு பணிபுரிந்த பேராசான் ஒருவரை இழந்து நிற்கிறோம்" என்று தெரிவித்தார்.

நல்லை குருமகா சந்நிதானம் தனது அனுதாபச் செய்தியில், "மக்களைக் கவர்ந்த மாமனிதர் மறைந்துவிட்டார்" என்று கவலை தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் துரைராஜாவின் இறுதிக் கிரிகைகளைக் கவனிப்பதற்காக விசேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இறுதிக் கிரிகைகள் முடியும் வரை யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரைகள் அனைத்தும் நிறுத்தப் பட்டிருந்தன. யாழ் குடாநாட்டில் உள்ள அரச அலுவலகங்களில் பணிபுரிவோர் உட்பட கடமைகளுக்கு செல்வோர்12ம் திகதி முதல் 15ம் திகதி வரை கறுப்புப்பட்டி அணிந்து செல்லுமாறு புலிகள் இயக்கத்தினர் அறிவித்திருந்தனர்.

# "உயிராக நேசிக்கிறேன் தமிழர்களை! பணம் திரட்டுவது எனது நோக்கமல்ல!!"

## கனடா கலை நிகழ்ச்சியின் பின் ரஜினி பேட்டி

சுவிற்ஸர்லாந்திலும், ஜேர்மனியிலும் ரஜினிகாந்தின் 'சுப்பர் ஸ்டார் நைட்' நிகழ்ச்சிகளுக்கு இலங்கைத் தமிழர்கள் சிலரால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனை அடுத்து கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுப்பர் ஸ்டார் நைட் நிகழ்ச்சியையும் இரத்துச் செய்யுமாறு ரஜினிகாந்த் கூறிவிட்டார். ஆனால் கனடாவில் ரஜினிகாந்த் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் அவரை அங்கு வருமாறு வேண்டுகோள் விடுத்ததோடு அங்கு எவ்வித இடையூறும் ஏற்படாதென்றும் உறுதி அளித்தனர். ஆயினும் முன்னர் அறிவித்தபடி மூன்று நிகழ்ச்சிகள் வேண்டாம் என்று கூறிய ரஜினிகாந்த் ஒரே ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

இதே சமயத்தில் கனடா ரொரன்ரோ நகரில் விநியோகிக்கப்பட்ட பிரசுரம் ஒன்றில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனது புகைப்படமும், ரஜினிகாந்த்தின் புகைப்படமும் பிரசுரிக்கப்பட்டு புலிகளின் போராட்ட நிதிக்கே ரஜினியின் கலை நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து கனடாவில் உலகத் தமிழர் என்னும் பெயரில் இயங்கி வரும் புலிகள் இயக்கத்தினர் ரஜினிகாந்தின் கலை நிகழ்ச்சிக்கும், தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் நடைபெற்ற ரஜினிகாந்த்தின் சுப்பர் ஸ்டார் நைட் நிகழ்ச்சியில் பெருந்திரளான இரசிகர்கள் கலந்துகொண்டனர். அந்த நிகழ்ச்சியை அடுத்து பத்திரிகையாளர் ஒருவரோடு பேசிய ரஜினிகாந்த், தமது நிகழ்ச்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணத்தின் நோக்கம் வெளிநாடுகளில் உள்ள தமிழ் இரசிகர்களைச் சந்திப்பதுதான் என்று கூறினார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கும் போது,

"கலை நிகழ்ச்சியின்போது கிடைக்கும் பணத்தை என் மனைவி நடத்தும் பள்ளிக்கூடத்திற்குச் செலவிடத் திட்டமிட்டிருக்கிறேன். எனினும் பணம் திரட்டுவது எனது முக்கிய நோக்கமல்ல. அப்படிச் செய்வதாக இருந்தால் தமிழ்நாட்டிலேயே அதைச் செய்யமுடியும். வெளிநாட்டு இரசிகர்களைச் சந்திக்கும் கலைப்பயணமாகவே நான் இதைக் கருதுகிறேன்.

இப்போதுகூட எல்லோரும் ஒற்றுமையாகக் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தால் நான் என் சொந்தப் பணத்தைச் செலவழித்து வருவேன். கலைநிகழ்ச்சிகளின் மூலம் வெளிநாடுகளில் சம்பாதிக்கும் பணத்தை வெளிநாட்டுத் தமிழர்களின் சமூக நலனுக்கே தந்து விடுவேன். ஒரு ரூபாய்கூட இந்தியாவுக்குக் கொண்டுபோக மாட்டேன். எல்லாத் தமிழ் மக்களையும் என் உயிருக்குச் சமமாக நேசிக்கிறேன்," என்று கனடாவில் ரஜினிகாந்த் தனது பேட்டியில் கூறியுள்ளார்.

# வவுனியாவில் பலத்த வரவேற்பு!

## கூட்டணி வட்டாரத்தில் உற்சாகம்!!

சமீபத்தில் வவுனியா நகருக்கு சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு உற்சாகமான வரவேற்புக் கிடைத்திருந்தது.

கூட்டணியின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் நீண்டகாலத்தின் பின் உற்சாகமான முகங்களோடு காணப்பட்டனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வவுனியாவிலும் தனது வேட்பாளரை கூட்டணி நிறுத்தும் என்று கூறப்படுகிறது.

ஏனைய தமிழ் கட்சிகளோடு உறவும் இல்லை பகையும் இல்லை என்னும் நிலை எடுத்துள்ள கூட்டணியினர் அக்கட்சிகள் சிலவற்றின் கடுமையான விமர்சனங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

ஏனைய தமிழ் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் என்றும் அதனால் தமக்கு செல்வாக்கு ஏற்பட்டுள்ளது எனவும் கூட்டணித் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

புலிகளை இதுவரை கூட்டணியினர் பகிரங்கமாக விமர்சிக்காத போதும், "தமிழர்களுக்கு சரியான பிரதிநிதி யார் என்று நாம் நிரூபித்துக் காட்டுவோம்" என்று கூட்டணித் தலைவர் திரு.தங்கத்துரை பேசியுள்ளமை புலிகளுக்கும் மறைமுகமான ஒரு அடியாகவே இருக்கிறது.

# 3000 பேர் தொழும் வசதி!

(கண்டி நிருபர்)

கண்டி உடுநுவரை வெலம்பொட என்னும் இடத்தில் சுமார் ஒருகோடி 25 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய ஜும்மா பள்ளிவாசல் கட்டிடத் திறப்பு விழா இம்மாதம் 24ம்திகதி நடைபெற உள்ளது.

திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை இதன் பொருட்டு விழாக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். சுமார் 3000 பேர் ஒரே முறையில் தொழக்கூடிய இப்பளிள்ளிவாசலின் முதற் கட்டப் பணிகள் பூர்த்தியாகி இருப்பதுடன் மத்திய மாகாணத்திலேயே இது மிக விசாலமான கட்டிடமாகும். மத்தியமாகாண சபை உறுப்பினர் அல்லாஜ் எம்.டி.எம்.றவுப் இதன் பிரதம தர்மகர்த்தா ஆவார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.



கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகா விகாரை, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

[illegible] எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.

**தலைமைப்பீடம்**

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பில்- இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 078-71592, 078-71243

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093




### கிஹாந்

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

வெள்ளவத்தை, கொழும்பு-06ஐச் சேர்ந்த நந்திவர்மன்-சந்திரகலா தம்பதியின் செல்வப் புதல்வன் கிஹாந் தனது முதலாவது பிறந்தநாளை 08.06.94 அன்று தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்புப் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.


## தங்க நகை சேமிப்புத் திட்டம்

அன்பார்ந்த தங்க நகைப் பிரியர்களே!
உங்கள் மனம் கவர் தங்கநகைகள் வாங்கிட இலகுவான வழி. எமது திட்டத்தில் சேருங்கள். மாதாந்தம் ரூபா 150/= ரூபா 300/= ரூபா 500/= மட்டும் செலுத்தக் கூடியதாகவிருந்தால் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். மாதாந்தம் சிறப்புப் பரிசு ரூபா 12,000/=, ரூபா 7,200/= மற்றும் ரூபா 3,600/= பெறும் அதிர்ஷ்டம் உங்களுக்கே.
கடந்த மாதங்களில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் பெயர்கள் வருமாறு:

ரூபா 150/= திட்டம்

| 15.3.94 | 15.04.94 | 15.05.94 |
|---|---|---|
| MR.R.P.Jayantha | MR.R.Ramasamy | MR.S.Ravichandran |
| Seetha Eliya, | Main Street, | 30/05, Jayathilaka Mawatha, |
| Nuwara Eliya. | Kandapola. | Nuwara Eliya. |

விபரங்களுக்கு:-
SURESH COMBINE
AMUTHA JEWELLERS
20, DAILY FAIR COMPLEX
NUWARA ELIYA

கிளை-
AMUTHA GOLD HOUSE
15, BUS STAND
RAGALA, HALGARANOYA.
T.P. 052-5305
Advt



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 420/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 220/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி தெரிவித்துக் கொள்கிறோம்.


# தமிழக தினசரியின் கண்ணோட்டம்




இலங்கையில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழக தினசரியான 'தினகரன்' வெளியிட்டுள்ள கருத்துப் படம்தான் இது. (தமிழக நிருபர் ஏழுமலை)

## அக்குறணையில் பெருமழை பாதைகள் எல்லாம் சீரழிவு

(அக்குறணை நிருபர்)

தற்பொழுது ஒரு வாரத்துக்கும் மேலாக அக்குறணைப் பகுதியில் கடும் மழை பெய்து வருகிறது.

ஏற்கனவே குண்டும், குழியுமாக இருக்கும் அக்குறணைப் பகுதியின் பிரதான மற்றும் கிளைப் பாதைகள் எல்லாம் மழைநீர் வேகமாக அரித்தோடியதால் மேலும் சீரழிந்துள்ளன. பொதுவாக இப்பாதைகளுக்கு மேலாகவே தண்ணீர் ஓடுகிறது. தண்ணீரை வழிந்தோடச் செய்யும் பாதையோரக் கால்வாய்கள் இல்லாததனாலேயே மேற்படி பாதைகள் அடிக்கடி நீர் அரிப்புக்கு காரணமாகின்றன.

பெரு மழை வருவதும் பாதைகள் எல்லாம் அரித்துச் செல்வதும், பின்னர் அதனைச் சீர் செய்வதும் வழமையான முறைமையாக இருந்து வருகின்றது. ஆனால் கழிவு வாய்க்கால்கள் இல்லாமல் தொடர்ந்து என்னதான் செய்தாலும், "பழைய குருடி கதவைத் திறவடி" நிலைதான்.

இம்முறை புளுகொஹதன்னை-கஸாவத்தை, ஆறாம்கட்டை - தெலும்புகஹவத்தை, ஆறாம்கடை-புளுகொஸதன்ன, ஆறாம்கட்டை- பங்கொள்ளாமட ஆகிய கிளைப் பாதைகளோடு பிரதான வீதியும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் பாதைசாரிகளுக்கும், வாகனக் காரார்களுக்கும் பெரும் சிரமமாக பாதைகள் ஆகிவிட்டிருக்கின்றன. பாதைகளில் பயணம் செய்யவே முடியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்கும்படி பொதுமக்கள் அவர்களை அன்பாய்க் கேட்டுக்கொள்கின்றனர்.

## பந்தா காட்டும் சபைகள்

(காரைதீவு நிருபர்)

சமீபத்தில் நடந்தேறிய பிரதேசசபைத் தேர்தலில் தெரிவானோர் பலர் சபை அமர்வுகளின்போது தங்களை மீறிய அதிகார விடயத்திலும் தலையிடுவதாக நிர்வாக அதிகாரிகள் குறைபட்டுக்கொள்கின்றனர்.

சில பிரதேச சபைகளின் அமர்வுகள் பாராளு மன்றத்தைவிட களை கட்டுகின்றன. இத்தனைக்கும் அங்கு ஆனெதான்றுமில்லை. வெறும் பேச்சுக்கள் தொடருகின்றன. தேர்தல் முடிந்து 02 மாதங்களான பின்னும் கட்சி விரோதங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

பிரதேச சபைகள் பிரச்சனைகளைத் தீர்க்க வந்ததோ, வளர்க்க வந்ததோ! காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

## கடத்தப்பட்டோர் விடுவிப்பு-மக்களின் கவலை நீங்கியது

(ஏறாவூர் நிருபர்)

சந்தனமடு ஆற்றில் வைத்து மணல் ஏற்றிக் கொண்டிருந்த வேளையில் புலிகள் அமைப்பினரால் கடத்தப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் ஏழைத் தொழிலாளிகளையும் புலிகள் விடுவித்துள்ளனர். இதனையடுத்து இப்பகுதியில் தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் நிலவிவந்த கவலை நீங்கியுள்ளது.

இவர்களை விடுவிக்கக் கோரி ஏறாவூரைச் சேர்ந்த பிரபல பிரமுகரும், பிரதேச சபை உறுப்பினருமான ஒருவர் புலிகளைக் கேட்டிருந்தார்.

இது பற்றி தினமுரசு ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மாணவர்களின் கதி!

(மன்னார் நிருபர்)

அண்மையில் வெளியான 1992/93ஆம் கல்வி ஆண்டின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியில் மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, கலை, விஞ்ஞான, கணித பிரிவுகளில் இம்முறை மிகவும் குறைந்தளவு மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவப் பிரிவுக்கு 272, வர்த்தக பிரிவுக்கு 254 பொறியியல் 1 பிரிவுக்கு 198, மருத்துவப் பிரிவுக்கு 222 என்ற அளவில் வெட்டுப்புள்ளி வெளியாகியுள்ளது.

மன்னார் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இங்குள்ள பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

தொழில்நுட்ப கல்லூரிகள், கனணி வகுப்புக்கள், மேலதிக வகுப்புகள், திறமையான ஆசிரியர்கள், [illegible]யான பாடசாலைகள் என்று கூறுவதற்கு [illegible] எதுவுமே இல்லை.

பொறியியல்-1ம் பிரிவுக்கு தகுதிபெற்ற ஒரு மாணவரேனும் இம்முறை இல்லாததும் குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டத்திலிருந்து வருடந்தோறும் 70ற்குட்பட்ட மாணவர்களே பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் 180 புள்ளிகளுக்கு கூடுதலான புள்ளிகள் எடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, கூடுதலான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக வெட்டுப்புள்ளிகள் சில பிரிவுகளுக்கு குறைக்கப்படவேண்டும் என்று மன்னார் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# புகார் பெட்டி

## நியமனம் இழுத்தடிப்பு

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்பேசும் மக்கள் வாழும் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம சேவையாளருக்கான வெற்றிடங்களும் கடந்த ஏப்ரல் மாதம் நிரப்பப்பட்டுள்ளன. ஆயினும் தனித் தமிழ் மக்கள் வாழும் ஆலையடி வேம்பு, திருக்கோயில் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வெற்றிடங்கள் போதியளவு இருந்தும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதன் காரணம் கேட்டால் புலனாய்வு அறிக்கைகள் பற்றிய சாட்டுக்கள் கூறப்படுகின்றன. மற்றய பிரிவுகளில் வசிப்போருக்கு மாத்திரம் உரிய நேரத்தில் புலனாய்வு அறிக்கைகள், நியமனங்கள் என்பன கிடைத்துள்ளன. ஆனால் இவ்விரு பிரதேச செயலகங்களுக்கான நியமனம் இழுத்தடிக்கப்படுவது ஏன்? உரிய வட-கிழக்கு மாகாண அதிகாரிகள் இது விடயத்தில் துரித நடவடிக்கை எடுப்பார்களா?

ஆர். நவரட்ணம்-திருக்கோயில்.

## பொது நூலகத்தில் தமிழ் நூல்கள் இல்லை

அனுராதபுரம் புதிய நகரிலுள்ள பொது நூலகத்தில் பல வருடங்களாக தமிழ் மொழி நூல்கள் பற்றாக்குறையாக உள்ளன. நூலகத்தின் தமிழ் பிரிவில் பழைய புத்தகங்கள் சிலவற்றையே இப்பொழுதும் காணமுடிகிறது. ஏனைய இரு மொழி நூல்களும் ஏராளமாக உள்ளன. ஸாஹிறா மகா வித்தியாலய மாணாக்கர்களும், விவேகானந்தா கல்லூரி மாணாக்கர்களும், ஏனைய வாசகர்களும் இந்நூல் நிலையத்தால் பயன்பெற முடியாமல் உள்ளனர். ஆகவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இக்குறையை தீர்க்குமாறு தமிழ் பேசும் மக்கள் சார்பாக வேண்டுகிறேன்.

முஹம்மட் பௌமி-அனுராதபுரம்.

## வசதியாக மறந்துவிடும் ரூபவாஹினி

பிரதி ஞாயிறு தோறும் ரூபவாஹினியில் காலையில் ஒளிபரப்பாகும் 'நுக செவன' என்ற நிகழ்ச்சி வாராவாரம் ஒரு விடயத்தை எடுத்து அதே ஒரே அறிவிப்பாளர் நடத்தும் விதம் பிரமாதம்.

அதில் இடம்பெறும் அம்சங்கள் மூலம் அறியாத எவ்வளவோ விடயங்களை அறிய முடிகிறது. ஆனால் ஒன்று சிங்கள மொழி தெரிந்தவர்களால் மட்டுமே இதை இரசிக்கவும் புரியவும் முடிகிறது. சிங்கள மொழி தெரியாதவர்களுக்கோ உப்பில்லா பண்டம்தான். ஏன் மாதத்தில் ஒரு வாரத்தை தமிழ் மொழிக்கு தந்தால் என்ன?

வானொலியில் தான் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்று ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனி சேவை உள்ளது. ஆனால் தொலைக்காட்சியில் அப்படி இல்லையே. எல்லா மொழி இரசிகர்களையும் மகிழ்விக்க வேண்டும் அல்லவா? அதனால் மாதத்தில் ஒரே ஒரு வாரம் மட்டும் இந்த 'நுக செவன' தமிழில் ஒளிபரப்பினால் என்ன?

தமிழ் இரசிகர்கள் மட்டும் தங்களுக்கு தேவையான நிகழ்ச்சிகளைக் கேட்டு கேட்டு எழுதவேண்டி உள்ளது! தமிழ் இரசிகர்களான எங்களுக்கும் சுவைத்தல், இரசித்தல், மகிழ்தல் போன்ற இன்னும் பல உணர்ச்சிகள் உண்டு என்பதை ஏன் ரூபவாஹினி மறந்து விடுகிறது?

சரவணேஸ் டெய்சி-கலவான.


## "தனலக்ஷ்மி" அதிர்ஷ்ட சீட்டுத் திட்டம்

REGD. NO. A.A 4203

* மொத்த மாதங்கள் 24
* மாதாந்தம் ரூபா 500/=, ரூபா 1000/= மட்டும்.
* மாதாந்தம் நடைபெறும் குலுக்கலில் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு ரூபா 12,000/= மற்றும் ரூபா 24,000/= பணப்பரிசுகள்.
* வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை.
* வெற்றிபெறாத ஏனையோருக்கு செலுத்திய தொகையுடன் 24ம் மாதமுடிவில் ரூ.12,500/=ம் மற்றும் ரூபா 25,000/= பணமாக வழங்கப்படும்.
* இத்திட்டத்தில் இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் சேரலாம்.
* வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு கடிதமூலம் அறியத்தரப்படும். மேலும் பத்திரிகை வாயிலாகவும் அறியலாம்.
* குறிப்பிட்ட உறுப்பினர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படும்.

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 5,64,000/=
விரையுங்கள் பரிசுகளைத் தட்டிச் செல்ல.

* வெகுவிரைவில் முதலாவது குலுக்கல் திகதி அறிவிக்கப்படும்.

விபரங்களுக்கு:-
SURESH COMBINE
AMUTHA JEWELLERS
20, DAILY.FAIR COMPLEX
NUWARA ELIYA

கிளை:
AMUTHA GOLD HOUSE
15, BUS STAND
RAGALA, HALGARANOYA.
T.P. 052-5305
Advt

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அஷ்ரப்பின் ராஜினாமாவும் அடுத்துவரும் தேர்தலும்

நாரதர்

உண்மையில் அவசியமில்லைத்தான். ஆயினும் அவர் இராஜிமானா செய்து விட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பைத்தான் சொல்லுகிறோம்.

கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது சொன்னதை அவர் செய்துமுடித்துவிட்டார்.

அடுத்து வரப்போகும் தேர்தல்களுக்கான ஒரு தந்திரம்தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தமை என்று அவரது எதிர் முகாம்களில் சொல்லுகிறார்கள்.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களது பதவிக்காலம் முடிவடைய குறுகிய காலமே இருக்கிறது.

ஆகவே, அஷ்ரப்பின் பதவி துறப்பு பெரிய தியாகம் அல்ல. 'சின்ன மீனைப்போட்டு பெரிய மீனைப் பிடிக்கும் தேர்தல் தந்திரம்' என்று எதிர்தரப்பு விமர்சனங்கள் சொல்லுகின்றன.

அஷ்ரப் சொல்வதைச் செய்வார். வழங்கிய வாக்குறுதியை மறக்கமாட்டார். அதன் வெளிப்பாடுதான் பதவி துறப்பு என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

எது எப்படியிருந்தபோதும் இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்கவொரு சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் மாறியிருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது.

'அஷ்ரப்பின் செல்வாக்கு சரிந்து விட்டது. கிழக்கில் இனி முஸ்லிம் காங்கிரஸ் எழுந்துகொள்ள முடியாது.' என்றெல்லாம் ஆசை தீரப் பேசிக் கொண்டிருந்த தனது எதிராளிகளின் முகத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கரி பூசியிருக்கிறது.

கிழக்கு மாகாணத்திற்கு வெளியே முஸ்லிம் காங்கிரஸ் தனது செல்வாக்கை நிரூபிக்க முடியவில்லை.

அஷ்ரப்பை கிழக்கு மாகாண அரசியல் வாதியாகவே ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் நோக்குகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வெற்றி தோல்வியை தனிப்பட்ட ரீதியிலும் ஒரு சவாலாக எடுத்துக்கொண்டதும், பதவி துறந்ததும் கிழக்கில்தான் அஷ்ரப்பும் தனது அரசியலை மையப்படுத்துகிறார் என்று நினைக்க வைத்துள்ளது.

எனினும் எதிர்வரும் தேர்தலில் கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் செல்வாக்கு பொருந்திய தலைமைத்துவமாக தன்னை வெளிப்படுத்தக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

ஆளும் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியில் இருக்கும் முஸ்லிம் அங்கத்தவர்களும், முக்கிய பிரமுகர்களும் தமது தலைமையின் நாடித்துடிப்பறிந்து பேசுகிறவர்களாகவே இருக்கின்றனர்.

தாங்கள் அதிகம் வாய் திறந்தால் தமது சமூகத்துக்காக பேசுகிறார் என்று தலைமை முத்திரை குத்திவிடுமோ என்று பயப்படுகிறார்கள்.

அதனால்தான் ஆளும்கட்சியில் உள்ள சில முஸ்லிம் பிரமுகர்கள் கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்று உரத்தகுரலில் தமது தலைமையின் காதில் விழுமளவுக்கு பேசவேண்டியிருக்கிறது.

பெரும்பான்மை இனத்தவர்களது தலைமைத்துவத்தை கொண்ட கட்சிகளில் இருக்கும் தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களுக்கு இனப்பிரச்சனை உள்ளவரை சங்கடமான நிலைமைதான்.

ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சி வழங்கினால் என்னவென்று கேட்கலாம்.

ஆனால், திருமதி ராஜமனோகரி புலேந்திரன் கேட்கமுடியாது. இனப்பற்றாளர் என்று முத்திரை குத்தப்படுவது இருக்கும் இடத்திற்கு பாதகமாகிவிடும். எனவே வாய் திறப்பது கிடையாது.



எம்.எச்.எம். அஷ்ரப்

தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களது நிலை இதுதான். அதனால் ஏற்கனவே இருந்த ஆதரவினைக்கூட அவர்கள் இழக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அஷ்ரப்பும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் அவருக்கு நெருக்கமானவராகத்தான் இருந்தார். அதனால் ஆளும் கட்சியில் இருந்த முஸ்லிம் பிரமுகர்கள் சிலர்கூட பொறாமைப் பட்டதும் உண்டு.

அஷ்ரப்புக்கு எதிராக கடுமையாக பேசிவந்த கிழக்கின் அமைச்சர் ஒருவரை அழைத்துப் பேசிய பிரேமதாசா அஷ்ரப்பை அதிகமாகத் தாக்க வேண்டாம் என்று கூறியதாகவும் ஒரு செய்தி வந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டை ஆரம்பித்துவைத்து அஷ்ரப்பை பிரேமதாசா போற்றிப் பேசியதும் நினைவில் இருக்கும் நிகழ்வுதான். அஷ்ரபுக்கு அமைச்சர் பதவி ஒன்றை பிரேமா கொடுக்கப்போகிறார் என்றும் செய்திகள் அடிபட்டன.

பிரேமதாசா உயிருடன் இருந்தவரை முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சி மீதோ அல்லது அரசாங்கத்தின் மீதோ கடுமையான அரசியல் தாக்குதலை நடத்தவில்லை.

பிரேமாவின் மறைவோடு முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியோடு தனது அரசியல் மோதலை ஆரம்பித்தது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஆளும் கட்சியை ஒரு பிடி பிடித்து பூரண விரோத நிலைப்பாடு எடுத்தது.

தமது கட்சி மாநாட்டுக்கு திருமதி சந்திரிக்காவுக்கு அழைப்பு விடுத்ததின் மூலமாக எதிரணிகளது வரிசைக்கு தான் சென்றுவிட்டதுபோலவே... அஷ்ரப் காட்டிக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு உறவை அறுத்துக்கொண்டதாக கிழக்கு மாகாண வாக்காளர்களுக்கு தெரிவிக்க கட்சி மாநாடும் ஒரு களமாக இருந்தது.

தற்போதைய அரசாங்கத் தலைமையின் பேச்சுக்களால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்திகள் தமிழ் கட்சிகளைப் போலவே முஸ்லிம் காங்கிரசையும் அரசாங்கத்தோடு ஒட்டில்லை என்று விலகி நின்று பேசவைத்துள்ளன.

> "மன்னிப்பு கேட்கவேண்டும் என்று— அஷ்ரப் கூறியது பிரபாவுக்கு பிடித்தமான கூற்றல்ல."

கிழக்கில் முஸ்லிம்களுக்கு சிங்களக் குடியேற்றங்களால் பிரச்சனைகள் இருக்கின்றன.

1921ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் நான்கு சதவீதமாக இருந்த சிங்கள மக்களது சனத்தொகை 1981ம் ஆண்டு கணக்கெடுப்பைப் பார்த்தபோது 24 சதவீதமாக அதிகரித்து மலைக்க வைத்தது.

இதனால் தமிழர்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம்களும் தமது பாரம்பரிய பகுதிகளை மெல்ல மெல்ல குடியேற்ற வெள்ளத்தில் இழுந்து வருகின்றனர்.

சனத்தொகை ரீதியாக ஒப்பிடும்போது கிழக்கில் உள்ள சிங்கள மக்கள் முஸ்லிம்களைவிட பலமடங்கு கூடுதலான காணிகளைப் பெற்றுள்ளனர்.

முன்பு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த 472 சதுரமைல்கொண்ட பாணமைப்பற்று டி.ஆர்.ஓ. பிரிவு சிங்களவர்களை அதிகப்படியாகக் கொண்ட லஹுகலை உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும், முஸ்லிம்கள் அதிகப்படியாக உள்ள பொத்துவில் உதவி அரச அதிபர் பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

19,831 சனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் உ.அ.அதிபர் பிரிவுக்கு 103.9 சதுரமைல் நிலப்பரப்பும், 7085 சனத்தொகையைக் கொண்ட சிங்கள உ.அ.அதிபர் பிரிவுக்கு 368.2 சதுரமைல் நிலப்பரப்பும் என்றளவில் நிலப்பிரிப்பு நடந்துள்ளது.

இது அப்பட்டமான நிலப்பறிப்பு. சம்மாந்துறை டி.ஆர்.ஓ.பிரிவிலும் காணி அபகரிப்பு நடந்திருக்கிறது.

நிலப்பிரிப்பு விடயத்தில் திட்டமிட்டே சூழ்ச்சிவலை விரிக்கப்பட்டு வந்திருக்கிறது.

சிறுபான்மை இன நலன்கள் கண்டு கொள்ளப்படவில்லை. ஆளும் கட்சிகளில் இருந்த சிறுபான்மை இனப் பிரமுகர்களும் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை.

கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள புள்ளி விபரப்படி தமிழர்கள் 40.8 வீதமும், முஸ்லிம்கள் 31.8 வீதமும் இருக்கின்றனர். சிங்களவர்கள் 26.8 வீதத்தினராக உள்ளனர். சிங்கள மக்களது சதவீதம் மேலும் அதிகரிக்கும் நிச்சயம்.

கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு குடியேற்றப் பிரச்சனை ஒரு பாரிய பிரச்சனையாக உள்ளபோதும் இதுவரை அதற்கெதிரான பாரிய போராட்டம் எதுவும் நடைபெறவில்லை.

தேர்தல்காலங்களில் முஸ்லிம்களது



பிரபா

வாக்குகளை கவருவதற்காக குடியேற்ற பாதிப்புக்கள் பற்றி நினைவூட்டுவதோடு அரசியல்வாதிகள் நின்றுகொள்கிறார்கள். ஆனால் குடியேற்றமும் நிலப்பறிப்பும் நின்றுவிடாமல் தொடரவே செய்கின்றன.

இத்தகைய நிலையில் சிங்கள அரசியல் கட்சிகள் மீது முஸ்லிம்கள் நம்பிக்கையிழப்பதை எந்தவொரு முஸ்லிம் பிரமுகரது தனிப்பட்ட செல்வாக்கும் தடுத்துவிட முடியாது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமைச்சர் அப்துல் மஜீத்தினால் உருவாக்கப்பட்ட வீடமைப்பு திட்ட பகுதிகளில்கூட அஷ்ரப்பின் படம் பகிரங்கமாக காணப்பட்டது.

கிழக்கில் புலிகளால் முஸ்லிம்கள் கொல்லப்பட்டபோது முஸ்லிம் தலைவர்களுக்குள், அதனைக் கண்டிக்க முன்வந்ததும், கண்டித்ததும், ஹர்த்தால் நடத்தியதும் அஷ்ரப்பின் அரசியல் துணிச்சலை வெளிப்படுத்திய நிகழ்வுகளாகும்.

அரசியல் இலாபம் கருதியே அஷ்ரப் ஹர்த்தால் நடத்துவதாக கூறி அதனைக் கண்டித்து முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் விலகி நின்றனர்.

அதே சமயத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலை நடவடிக்கைகளை கண்டிக்காமல் அவர்கள் மௌனமாகவும் இருந்துவிட்டார்கள்.

இவற்றின் மூலமாக அஷ்ரப் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தி, மு. காங்கிரசை கிழக்கில் நிலை நிறுத்த முடிந்திருக்கிறது.

அஷ்ரப்பின் பதவி துறப்பு அரசியல் கோரிக்கை எதனையும் முன்வைத்து செய்யப்பட்டதல்ல.

'ஆயினும், அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலில் அஷ்ரப்பின் தனிப்பட்ட செல்வாக்கை ஒருபடி மேலே உயர்த்த பதவி துறப்பு நிச்சயம் கைகொடுக்கும்.

அஷ்ரப்புக்கு எதிராக பேசுவோர் வெறுமனே அவரைக் கண்டிப்பவர்களாக இருக்கிறார்களே தவிர முஸ்லிம்களது பிரச்சனைகள் தொடர்பாக அவர்களிடமும் காத்திரமான திட்டங்கள் எதுவும் கிடையாது. அதனால் அவர்களது பேச்சுக்கள் பெரியளவில் எடுபடப் போவதில்லை.

இறுதியான நிலவரப்படி திரு. தொண்டமானுடன் சேர்ந்து அஷ்ரப் இனப்பிரச்சனைக்கான ஒரு திட்டத்தை ஜனாதிபதியின் பார்வைக்கு கொடுத்திருக்கிறார்.

புலிகளுக்கு சமீபத்தில் அஷ்ரப் ஒரு கடிதமும் எழுதியிருந்தார்.

ஆனால், முன்னர் திரு.தொண்டமானின் கடிதத்துக்கு தமது அப்போதைய பிரதித் தலைவர் மூலமாகவேனும் பதில் அனுப்பிய பிரபாகரன் அஷ்ரப்பின் கடிதத்தை கண்டுகொள்ளவில்லை.

வடக்கேயிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதை புலிகள் இதுவரை தவறான செயல் என்று ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் மன்னிப்புக் கேட்குமாறு அஷ்ரப் கூறியிருந்தார். அது நிச்சயம் பிரபாகரனுக்கு பிடித்தமான ஒரு கூற்றல்ல.

தம்மோடு முன்கூட்டியே கலாந்தாலோசிக்கப்படாத தீர்வு திட்டத்துக்கு புலிகள் முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள் என்பதும் புலிகளது கடந்தகால போக்குகள் உணர்த்தும் உண்மையாகும்.

எனவே தொண்டா-அஷ்ரப் தீர்வுத் திட்டம் அரசியல் தீர்வு முயற்சியில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்திவிடப் போவதில்லை.

எனினும், முஸ்லிம் பிரச்சனை என்ற வட்டத்திற்குள் நிற்காமல் இனப் பிரச்சனை என்ற பரந்த தளத்தில் தனது அரசியலை கொண்டுவர அஷ்ரப் முயல்வது தெரிகிறது.

கிழக்கு மாகாண தமிழ் வாக்காளர்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்ட கருத்துக்களும், தமக்கெதிரான வாக்குகள் அனைத்தும் தமிழர்களது வாக்குகள் என்பதுபோல பேசத் தலைப்பட்டதும் மிகத் தவறான அணுகுமுறைகளாகும்.

கிழக்கின் உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு தமிழர்கள் ஆதரவு தெரிவித்துவிட்டார்கள் என்று மிக முக்கிய அரசியல் பிரச்சனையில் முஸ்லிம் காங்கிரஸ் அவசரப்பட்டு விடுத்த அறிக்கையில் அரசியல் விவேகம் தெரியவில்லை. விரக்தியான மனோபாவமே வெளிப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு எதிராக உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அஷ்ரப் பேசியதை வரவேற்று வாக்களித்த தமிழர்களுக்கும் முகத்தில் அறைந்தது போல அந்த அறிக்கை அமைந்துவிட்டது. சிறந்த அரசியல் விவேகியான அஷ்ரப் அவ்வாறான ஒரு அறிக்கை வர எப்படி அனுமதித்தார் என்று தெரியவில்லை.

தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைதான் இனப்பிரச்சனையின் நியாயமான தீர்வுக்கு திறவுகோல் என்பதை பிரபாவுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ள அஷ்ரப், தனது கட்சியில் இருந்தே பிரிப்புக்கு சாதகமான வாதங்களை எடுத்து எதிர்தரப்புக்கு கொடுக்காத வகையில் கவனித்துக்கொள்ள வேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



அரச பத்திரிகை நிறுவனத்திலை குறைந்த விலையிலை மதிய சாப்பாடு. புதிய தலைவரின் ஏற்பாடாம். அடிச்சது சான்ஸ் எண்டு சாப்பாட்டை வாங்கி வீட்டுக்கு கொண்டுபோக வெளிக்கிட்டவையாம் சிலர். உடனடியா புது உத்தரவு! பிளேட்டிலை மட்டும்தான் சாப்பாடு கொடுக்க வேணும். சலுகையை துஷ்பிரயோகம் செய்ய வெளிக்கிட்ட சிலராலை நாங்களும் இப்ப கியூவிலை பிளேட்டும் கையுமா நிக்க வேண்டிக்கிடக்கெண்டு சிலர் முணுமுணுக்கினமாம். ஒரு மதிய சாப்பாடு விலை 2 ரூபா 50 சதம். ஒரு முட்டையும் உண்டு. வீட்டுக்கும் கொண்டுபோனா லாபம்தானே?

இன்னொரு சாப்பாட்டு விசயம்- தெற்கு ஆசியாவிலேயே பெரிய சமையல்கூடம் எங்கை இருக்குது எண்டா, அது எங்கடை கொழும்பு துறைமுகத்திலைதானாம். துறைமுக ஊழியர்களுக்கும் மலிவுச் சாப்பாடுதான். அதை வாங்கி வெளியிலை கூட விலை வைச்சு விக்கிறதிலையே சிலர் தனி வருமானம் தேடிக் கொள்ளுகினம்.

திருவான மலையின் முன்னாள் பிரதிநிதிக்கு சொந்தமான காணியள் பரந்துகிடக்க, அதிலை சனம் குடியேறிப்போட்டுது. இப்ப முன்னாள் பிரதிநிதி கடிதம் போட்டிருக்கிறாராம். "காசு தாருங்கோ அல்லது இடத்தைக் காலி பண்ணுங்கோ. இரண்டும் இல்லையெண்டா வழக்குத்தான்" எண்டு போட்டாராம். இதே நேரம் அவற்றை காணியிலை பெரும்பான்மை இனத்தாரும் இருக்கினம். அவைக்கு கடிதம் கிடிதம் ஒண்டும் போடவே இல்லையாம். அவையோடை 'சம்பந்த'மும் வேண்டாம். சண்டையும் வேண்டாம் எண்டு நினைக்கிறாராக்கும்.

கொழும்பிலை உடம்பு பிடிச்சுவிடும் இடங்களை ரவுண்டப்பண்ணிய விவகாரத்திலை பெரிய புள்ளிகள் பெயரும் அடிபட்டுப் போச்சுது. வருமானம் வரும் எண்டா எந்தமாதிரி வியாபாரத்திற்கும் ரெடி எண்டு கௌரவமான சிலரே கசமுசாவிலை இறங்கேக்கை சாதாரண ஆட்கள் என்ன செய்யிறது?

வெளிநாட்டு நிகழ்ச்சிகளுக்கு ரஜினியாரை முதலில் கூப்பிட்டது ரெண்டு எழுத்தார்தானாம். அந்த நேரத்திலை அவர் தட்டிக்கழிச்சுப் போட்டாராம். பிறகு வேறை ஒரு தனியார் ஏற்பாட்டிலை போயிருக்கிறார். அந்தக் கோபத்திலை ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டுதான் ரெண்டு எழுத்தார் பின்னாலை நிண்டு அவற்றை வெளிநாட்டு நிகழ்ச்சிகளை ஒரு வழிபண்ணிப் போட்டினமாம். ரஜனி இதை எதிர்பார்க்கேலையாம். ஆடித்தான் போனார். சிங்காரிகள் வந்து அரைகுறையா ஆடேக்கை பார்க்கலாம். ரஜனிவந்தா மட்டும்தான் பாயவேணுமாக்கும் எண்டு ரஜனி ரசிகர் வட்டாரம் முணுமுணுக்குதாம். இதிலையும் கொஞ்சம் நியாயம் இருக்கிறமாதிரித் தெரியுதல்லோ?

எதிர் முகாமிலை அம்மாவைவிட மகள்தான் வாக்குவாங்க முடியும். அதாலை அவவே நேரடியா முக்கிய பதவிக்கு போட்டி போடவேணும் எண்டதுதான் அபிப்பிராயமாம். உடம்பு நிலவரத்தை அறிஞ்சபிறகுதான் அம்மா தானோ மகளோ எண்டு தீர்மானிக்கப் போறார். ஆஸ்பத்திரி கட்டிலில் இருந்துதான் அடுத்த கட்டத்தை முடிவு செய்யப்போறார் அம்மா.

மேல் மாகாண முக்கிய பதவி மாற்றத்துக்கு அரசியல்தான் காரணமாம். சந்திரமான தலைவி சொன்னதைக்கேட்டு அமைச்சர் விலக்கலை அங்கீகரித்துப்போட்டாராம். பெரிய இடம் சொன்னதையும் கேட்கேல்லையாம். அதுதான் அவரை வீட்டுக்கு போங்கோ எண்டு சொல்லப்பட்ட சங்கதியாம்.

உண்மையைச் சொன்னா உதைக்க நினைப்பதும் துவக்கை நினைப்பதும் தமிழரின் பண்பே இல்லை. இதை நான் சொன்னா வம்பு. பாரதிதாசன் சொல்லுறார் கேளுங்கோ!

"பொதுமக்கள் நலம்நாடிப் பொதுக்கருத்தைச் சொல்க!
புன் கருத்தை சொல்லுவதில் ஆயிரம் வந் தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந் தமிழர் மேன்மை
அழிப்பாரை போற்றுதற்கும் ஏடு பல வாழ்ந்தால்
எதிர்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை!
ஏற்ற செயல் செய்வதற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?"

காலத்துக்கு ஏற்ற கருத்து. நடு நிலமை எண்டு சொல்லி நடிக்கிற ஆட்களுக்கும் அடி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்




பிரட்மன்

**பதினைந்தாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் அமெரிக்காவில் ஆரம்பமாகியுள்ளன.**

**உலகம் முழுவதையும் காந்த சக்தியாகக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டதாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் காணப்படுகின்றன.**

**இருபத்திநான்கு நாடுகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் அமெரிக்காவில் இடம்பெறும் இத்தடவை பங்குபற்றுகின்றன.**

இம்மாதம் (ஜூன்) 17ந் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்தமாதம் (ஜூலை) 17ந் திகதிவரை இடம்பெறவுள்ளன.

பிராந்திய ரீதியாக உலகக் கிண்ண இறுதிப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான பூர்வாங்கப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. இப்போட்டிகளில் உதைபந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்ட பல்வேறு நாடுகளும் குதித்திருந்தன.

ஆனால் 24 நாடுகள் மட்டுமே அமெரிக்காவில் இடம்பெறும் இறுதிப் போட்டிகளில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளன.

உலகக் கிண்ண உதைபந்தாட்டம் 60 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டதாகும். 1930ம் ஆண்டிலேயே முதலாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றிருந்தது. அதற்கு முன்னர் ஒலிம்பிக் போட்டிகளில் ஓர் அம்சமாகவே உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம் பெற்றிருந்தன.

ஆனால் 1930ம் ஆண்டிலிருந்து ஒலிம்பிக் பந்தயத்திலிருந்தும் வேறாக்கப்பட்டு தனியொரு பிரமாண்டமான போட்டியாக உலகக் கிண்ண உதைபந்தாட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

1930ம் ஆண்டு உருகுவே நாட்டில் முதலாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன. தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை என்ற ரீதியில் இப்போட்டிகள் இடம்பெற்றுவந்தன.

ஆனால் 1938ம் ஆண்டுக்குப் பின்னர் 1950ம் ஆண்டு வரை உலக யுத்தம் காரணமாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவில்லை.

1950ம் ஆண்டில் மீண்டும் ஆரம்பித்த உலகக் கிண்ண போட்டிகள், நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை என்ற ரீதியில் எதுவித இடையூறுகளும் இன்றி இடம்பெற்று வந்திருப்பதுடன், இந்த ஆண்டில் பதினைந்தாவது உலகக் கிண்ண போட்டிகள் பிரமாண்டமான முறையில் அமெரிக்காவில் ஆரம்பமாகியுள்ளன.

1930ம் ஆண்டு முதலாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் உருகுவே உலக சாம்பியனாக வெற்றி பெற்றிருந்தது. இறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனாவை 4-2 கோல்கள் என்ற ரீதியில் உருகுவே வென்றிருந்தது.

1934ம் ஆண்டு இரண்டாவது உலகக் கிண்ண போட்டிகள் இத்தாலியில் இடம் பெற்றன. இதில் இத்தாலி செக்கோஸ்லாவாக்கியாவை 2-1 என்ற ரீதியில் வெற்றி பெற்று உலக சாம்பியனானது.

1938ம் ஆண்டில் இடம்பெற்ற உலகக் கிண்ண போட்டியிலும் இத்தாலியே சாம்பியனானது. பிரான்ஸில் போட்டிகள் இடம்பெற்றன. இறுதிப்போட்டியில் ஹங்கேரி நாட்டை 4-2 என்ற ரீதியில் பிரான்ஸ் தோற்கடித்திருந்தது.

1950ம் ஆண்டு பன்னிரெண்டு வருடங்களுக்குப் பின்னர் தென் அமெரிக்காவின் பிரேஸில் நாட்டில் நான்காவது உலகக் கிண்ண போட்டிகள் இடம்பெற்றன. இதில் உருகுவே இரண்டாவது தடவையாக உலக சாம்பியனானது.

பிரேஸில் நாட்டை 2-1 என்ற வித்தியாசத்தில் உருகுவே இறுதிப் போட்டியில் தோற்கடித்திருந்தது.

1954ம் ஆண்டு ஐந்தாவது உலக உலகக் கிண்ணப்போட்டிகள் சுவிற்ஸர்லாந்தில் இடம்பெற்றன. இறுதிப்போட்டியில் ஜேர்மனி, ஹங்கேரியை 3-2 என்ற அடிப்படையில் வென்றிருந்தது.

சுவீடன் நாட்டில் 1958ம் ஆண்டு ஆறாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டம் இடம்பெற்றிருந்தது. பிரேஸில், சுவீடன் ஆகியன இறுதிப்போட்டியில் குதித்திருந்தன. முடிவில் பிரேஸில், சுவீடனை 5-2 என்ற ரீதியில் வென்று உலக சாம்பியனானது.

தென் அமெரிக்காவின் சிலி நாட்டில் 1962ம் ஆண்டு இடம்பெற்ற ஏழாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பிரேஸில் இரண்டாவது தடவையாக உலக சாம்பியனாகியிருந்தது. செக்கோஸ்லாவாக்கியாவை 3-1 என்ற அடிப்படையில் பிரேஸில் வென்றிருந்தது.

1966ம் ஆண்டில் எட்டாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டம் இங்கிலாந்தில் இடம்பெற்றிருந்தது. இதில் இங்கிலாந்து, ஜெர்மனியை 4-2 என்ற ரீதியில் வென்று உலக சாம்பியனாகியிருந்தது.

1970ம் ஆண்டு ஒன்பதாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிரேஸில் மூன்றாவது தடவையாக உலக சாம்பியனானது. மெக்ஸிக்கோவில் போட்டிகள் இடம்பெற்றன. இத்தாலியை 4-1 என்ற ரீதியில் பிரேஸில் தோற்கடித்திருந்தது.

ஜெர்மனியில் 1974ம் ஆண்டு இடம்பெற்ற பத்தாவது உலகக் கிண்ண போட்டியில் ஜெர்மனி உலக சாம்பியனானது. ஹாலந்து இறுதிப்போட்டியில் 2-1 என்ற ரீதியில் தோல்வி கண்டிருந்தது.

ஆர்ஜன்டீனா 1978ம் ஆண்டு பதினோராவது உலகக் கிண்ண போட்டிகளில் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது. இறுதிப்போட்டியில் ஹாலந்து இரண்டாவது தடவையாகவும் 3-1 என்ற அடிப்படையில் தோல்வியைத் தழுவியிருந்தது.

ஸ்பெயின் நாட்டில் 1982ம் ஆண்டு 12-வது உலகக் கிண்ண உதைபந்தாட்டம் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் இத்தாலி சாம்பியனானது. ஜெர்மனி 3-1 என்ற ரீதியில் தோல்வி கண்டிருந்தது.

1986ம் ஆண்டு மெக்ஸிக்கோ நாட்டில் உலகக் கிண்ண போட்டிகள் இரண்டாவது தடவையாக இடம்பெற்றன. இப் 13-வது உலகக் கிண்ண போட்டியில் ஜெர்மனியை ஆர்ஜன்டீனா 3-2 என்ற வித்தியாசத்தில் வென்று உலக சாம்பியனாகியிருந்தது.

1990ம் ஆண்டு இத்தாலியிலும் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ண போட்டிகள் இடம்பெற்றன. இதில் ஆர்ஜன்டீனாவும், ஜெர்மனியும் இறுதிப் போட்டியில் பங்குபற்றின. ஜெர்மனி கடும்போட்டியின் பின்னர் ஆர்ஜன்டீனாவை ஒருகோல் போட்டு வென்றிருந்தது. ஆர்ஜன்டீனா கோல் எதனையும் போடவில்லை.

இத்தடவை அமெரிக்காவில் இடம்பெறும் 15வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் 24 நாடுகள் பங்குபற்றுகின்றன. அவற்றின் விபரம் வருமாறு: ஜெர்மனி, மொரோக்கோ, ஆர்ஜன்டீனா, நைஜீரியா, நோர்வே, பெல்ஜியம், பொலிவியா, அயர்லாந்து குடியரசு, பிரேஸில், ரோமானியா, பல்கேரியா, ரஷ்யா, கமரூன், சவுதி அரேபியா, கொலம்பியா, தென் கொரியா, கிரேக்கம், ஸ்பெயின், ஹாலந்து, சுவீடன், இத்தாலி, சுவிற்ஸர்லாந்து, மெக்ஸிக்கோ, ஐக்கிய அமெரிக்கா.

அமெரிக்காவின் ஒன்பது நகரங்களில் உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இடம்பெறும். இறுதிப்போட்டி ஜூலை 17ந் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ரோஸ்போல் (Rose Bowl) விளையாட்டரங்கில் இடம்பெறும்.

இந்த அரங்கு மிகவும் பிரமாண்டமானதாகும். ஒரு இலட்சத்துக்கும் அதிகமான (1,02,083) பார்வையாளர்களைக் கொண்டிருக்கக் கூடிய வசதிகளை இந்த அரங்கு கொண்டுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலேயே 1930ம் ஆண்டிலும், பின்னர் 1984ம் ஆண்டிலும் இரு தடவைகள் ஒலிம்பிக் பந்தயங்கள் இடம்பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு திருத்தம்

### அவர் மேற்கிந்திய வீரர்

முரசு 53ல் கிரிக்கெட் வீரர் சேர் காரிச் .:பீல்ட் சோபர்ஸ் இங்கிலாந்து அணியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டிருந்தது. அவர் மேற்கிந்தியதீவு அணியைச் சேர்ந்தவர் என்பதே சரியாகும். 1958ல் ஜமெய்க்காவின் கிங்ஸ்ரன் மைதானத்தில் பாகிஸ்தான்-மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியின்போது தான் சோபர்ஸ் 365 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

# கிளின்ரனின் 'ஸ்ரைல்' என்ன?



அமெரிக்காவில் எந்தப் பெரிய இடத்தில் இருந்தாலும் வம்புகளில் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்.

அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்கு எதிராக தற்போது கிளம்பியுள்ள 'செக்ஸ்' புகார் சுவாரசியமானது.

27 வயதான பால் ஜோன்ஸ் என்னும் அழகி பில் கிளின்ரன் முன்னர் கவர்னராக இருந்தபோது தன்னை உடலுறவு கொள்ள அழைத்ததாக பத்திரிகையாளர்களை கூட்டிவைத்து அறிவித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல கிளின்ரன் தன்னோடு எப்படியெல்லாம் நடந்துகொண்டார் என்றும் விலாவாரியாக விபரித்துமிருக்கிறார்.

தொலைக்காட்சிகள் அழகியின் புகாருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஒரு நிமிடப் பேட்டியை மட்டும் வெளியிட்டன.

இப்போது பால் ஜோன்ஸ் கிளின்ரன்மீது வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இதேவேளையில் கிளின்ரனின் சட்டத்தரணி அளித்துள்ள விளக்கம்தான் வேடிக்கையானது.

"பால் ஜோன்ஸ் சொல்லும் முறையில் கிளின்ரன் நடந்துகொள்ளமாட்டார். அவர் பாணியே வேறு. எனவே பால் ஜோன்ஸ் பொய் சொல்கிறார்"

சட்டத்தரணி இப்படிச் சொன்ன பின்னர் அமெரிக்கர்கள் ஒருவருக்கொருவர் கேட்கும் கேள்வி இதுதான், "அப்படியானால் கிளின்ரனின் ஸ்ரைல் என்ன?"

# ஏறிய போதையில் மோதிய கார்!



நியூயோர்க் நகரத் தெருக்களில் அனுமதிக்கப்பட்ட வேக வரம்பினை மீறி மோட்டார் ஓட்டிச்சென்ற 55 வயதான ஆபிரகாம் மேயேர்ஸ் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மிதமிஞ்சிய போதையில் 113 கிலோமீட்டர் வேகத்தில், வண்டியின் முன் விளக்குகளையும் ஏற்றாமல் சென்றிருக்கிறார். வேடிக்கை என்ன வென்றால் இவருடைய முரட்டுத்தனமான வண்டியோட்டத்தின் பயனாக இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப் பட்டுள்ளனர்.

இத்துயரமான சம்பவத்தை பொலிசார் ஆபிரகாமிடம் கூறியபோது அதனைப் புரிந்து கொள்ளும் நிலையில் அவர் இருக்கவில்லை. இவரைப் பரிசேதனை செய்தபோது இவருடைய இரத்த மதுசார அளவு 23 சத வீதமிருந்தது. அத்துடன் 1967ம் ஆண்டிலேயே காலாவதியாகிவிட்ட சாரதிக்கான அனுமதிப் பத்திரமே இவரிடம் இருந்திருக்கிறது.

நியூயோர்க் நகரப் பொலிசார் இவ்வளவு அசிரத்தையாக இருந்திருக்கிறார்களேஎன்று மக்கள் குறைபட்டுக்கொள்கின்றனர். இவருடைய சராசரி அனுமதிப்பத்திரம் 20 தடவைகள் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.



# அஞ்சலிக்கு எதிர்ப்பு ஏன்?



ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் ஜேர்மனியில் யூத இனமக்கள் இனக் கொலைக்குள்ளாக்கப்பட்டனர். இலட்சக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக இஸ்ரேலில் பிரார்த்தனைக் கூட்டங்கள், நினைவு விழாக்கள் வருடா வருடம் நடத்தப்படுவதுண்டு. இந்த வருடம் இடம்பெற்ற அஞ்சலியில் ஒரு பிரிவினர், ஹிட்லரால் கொல்லப்பட்ட தன்னினச் சேர்க்கையாளர்களை நினைவு கூருமுகமாக தனியானதோர் ஏற்பாட்டைச் செய்திருந்தனர். இதனை வலதுசாரி யூதர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேலிலுள்ள யூத இனக்கொலை பற்றிய கண்காட்சிக் கூடத்தில் வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களிலிருந்து இதற்காகவே சிறப்பாக 150 யூதர்கள் வந்திருந்தனர். இவர்களுடைய அஞ்சலிக் கூட்டம் நடந்துகொண்டிருந்த போது, எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பொலிசார் மோதலைத் தவிர்த்தனர். எனினும் நாடு பூராவும் இதனால் கருத்து மோதல்களும் விவாதங்களும் ஆரம்பித்துள்ளன.

"யூத இனத்தின்மீது நடத்தப்பட்ட கொடுமைகளையிட்டு பரம்பரை பரம்பரையாக பேணிப்பாதுகாக்கும் பவித்திரமான நினைவு கூர்தலுக்கு மாசு கற்பிப்பதாகவும் இழப் பினை ஏற்படுத்துவதாகவும், தன் இனச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கை உள்ளது" என்று வலது சாரியினர் கூறுகின்றனர். இதேவேளை சட்டமன்ற உறுப்பினர் சிலர் இவர்களுக்கு ஆதரவு அளிக்க முன் வந்துள்ளனர்.

# ஊரடங்குபோல வெப்ப வீதிகள்!

இந்தியத் தலைநகர் புது தில்லியில் இவ்வருடம் உஷ்ண நிலை மிக மோசமடைந்திருக்கிறது. கடந்த 50 வருடங்களில் இல்லாத அளவு 46 பாகை சென்றிகிரேட் வரை சூடு அதிகரித்திருக்கிறது. இதனால் நண்பகல் நேரம் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருப்பது



போன்று மக்கள் நடமாட்டமற்று தெருக்கள் வெறிச்சோடித் தென்படுகின்றன.

ராஜஸ்தான் மாநில்த்தில் சூடு 49பாகை சென்.வரை அதிகரித்திருக்கிறது. மே மாதம் கடைசி வாரத்திலிருந்து வட மற்றும் மத்திய பிரதேசங்களில் 160 பேர்வரை வெய்யிலின் வேகத்துக்குப் பலியாகியுள்ளனர். பல்லாயிரக் கணக்கான மிருகங்களும் பறவைகளும் இறந்துள்ளன. இதே காலகட்டத்தில் தமிழ் நாட்டிலும் தென் மாநிலங்களிலும் மே 27ம் திகதி முதல் மழை பெய்தது. இருப்பினும் சூடு போதுமான அளவு தனியவில்லை.

# 'நறுக்' பெண் வேடம்!

## அகினோ மகள் மறுப்பு!



பிலிப்பைன்சில் அதிபராக இருந்தவர் அகினோ. அவரது மகள் கிறிஸ் இப்போது பிலிப்பைன்சில் நம்பர் வன் நடிகை.

சமீபத்தில் ஒரு தயாரிப்பாளர் அவரிடம் போய் அமெரிக்காவில் கணவனது ஆண் உறுப்பை 'நறுக்' பண்ணி பரபரப்பு ஏற்படுத்திய 'பாப்பிட்' என்னும் பெண்ணின் வேடத்தில் நடிக்க அழைத்தார். அந்த வேடத்தில் நடிக்க வேண்டாம் என்று முன்னாள் அதிபர் அகினோ மகளைத் தடுத்துவிட்டார்.

(நறுக் செய்தி ஏற்கனவே முரசில் வந்ததுதான்)

# இரட்டையர் வாழ்வில் அதிசயம்! ஒரே நேரத்தில் வந்த இடுப்புவலி!!

இலண்டனில் உள்ள பெண் இரட்டையருக்கு ஒரே நேரத்தில் குழந்தை பிறந்துள்ளது.

இரு பெண்களுக்கும் வயது 29. இரட்டையர்கள் இருவரும் ஒரே முகூர்த்தத்தில் திருமணம் செய்துகொண்டனர். திருமணத்திற்கு பின்னர் தனித்தனியே தமது கணவர்மாருடன் சென்றுவிட்டனர்.

எனினும் இருவருக்கும் ஒரே சமயத்தில் இடுப்புவலி ஏற்பட்டுவிட ஒரே ஆஸ்பத்திரியில் இருவரும் சேர்க்கப்பட்டனர்.

ஆஸ்பத்திரியில் உள்ளவர்களுக்கு ஒரே குழப்பம். இரட்டையர் இருவரும் அச்சில் வார்த்ததுபோல ஒரே மாதிரியாக இருந்தனர். அடையாளம் காண்பது கட்டில் இலக்கத்தை வைத்துத்தான்.

ஒரே நேரத்தில் இருவருக்கும் பிரசவம் நடந்தது. குழந்தைகள் பிறந்ததும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு நிம்மதி. காரணம், குழந்தைகள் இரண்டும் தங்கள் தந்தையர் ஜாடையில் பிறந்திருந்தன. குழந்தைகளை வைத்து இனித் தாய்மாரை அடையாளம் கண்டுவிடலாமே. அதுதான் நிம்மதி.

"எப்பவும் நாங்கள் இரண்டுபேரும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியாகவே செயல்படுவோம். எங்கள் திருமணம்கூட ஒரே முகூர்த்தத்தில்தான் நடந்தது. இவையெல்லாம் நாம் திட்டமிட்டு செய்தவை. ஆனால் எங்கள் இருவருக்கும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் குழந்தை பிறந்தது எங்களுக்கே ஆச்சரியமாக உள்ளது" என்றனர் இரட்டையர் இருவரும் ஒரே குரலில்.

# காதல் கடித விலை 8 கோடி!

வின்ஸ்டன் சேர்ச்சிலின் 7 காதல் கடிதங்கள் அதிக மதிப்பில் ஏலம் போயின. மொத்தம் 8 கோடி ரூபாய் வரை ஏலம் போயின.

பிரிட்டன் பிரதமராக இருந்த பழம் பெரும் தலைவர் வின்ஸ்டன் சேர்ச்சில் இவர் மரியல் வில்சன் என்ற பெண்ணைக் காதலித்தார். ஆனால் திருமணம் செய்ய முடியவில்லை. இவர் பிரபல கப்பல் கட்டும் தொழிலில் உள்ளவரின் மகள்.

இவருக்கு சேர்ச்சில் எழுதிய 7 கடிதங்கள் ஏலம் விடப்பட்டன. அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் இவற்றை 8 கோடி ரூபாய் கொடுத்து வாங்கினார்.

சேர்ச்சிலின் சுயசரிதையை அவரது மகன் ரான்டால்ப் எழுதியுள்ளார். அதில் எனது தந்தைக்கு இன்னொரு பெண் பார்க்கப்பட்டாள். ஆனால் அவர் மறுத்து விட்டார். பின்னர் கிளெமன்டைன் ஹாசியர் என்ற பெண்ணை மணந்துகொண்டார். எனினும் மரியலுடன் வாழ்நாள் முழுக்க் நண்பனாக இருந்தார் என்று எழுதியுள்ளார்.

# மாமியார் மீது குண்டுவீச்சு!

வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்த மருமகன் வேலைக்குப் போவதில்லை. அதனால் மாமியாருக்கு கோபம். மருமகனை மரியாதையின்றி நடத்தினாராம். அதனால் ஆத்திரம் அடைந்த மருமகன் மாமியார்மீது குண்டு வீசினார். இந்த சம்பவம் தமிழ்நாட்டில் உள்ள அறந்தாங்கி பகுதியில் நடந்துள்ளது. மாமியார் பலத்த காயமடைந்துள்ளார். அவரது மருமகன் ஆபிரகாமை தேடி பொலிசார் வலைவீசியுள்ளனர்.

# மற்றொரு வழக்கு

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன்மீது ஏற்கனவே சிறுவன்மீது பலாத்காரம் செய்த வழக்கு பதிவுசெய்யப்பட்டு பரபரப்பு ஏற்பட்டது. இப்போது மற்றொரு வழக்கு. இது மைக்கல்மீதல்ல. அவரது மெய் பாதுகாவலர்கள்மீது. மைக்கல் ஜாக்சனை படம் எடுத்த படப்பிடிப்பாளர் ஒருவரை தாக்கி படச் சுருளை பறித்ததாக வழக்கு. தாக்கப்பட்டவர் 5 கோடி ரூபாய்கள் வரை நஷ்டஈடாக கோரியுள்ளார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது – இராஜதந்திரி


## நாட்டின் ஏகோபித்த வளர்ச்சியை நிர்ணயிக்கும் வடக்கு-கிழக்கு சர்ச்சை!

# யுத்தக் கெடுபிடியினால் வடக்கு-கிழக்கின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு!

உலக சுற்றாடல் தினம் இலங்கையிலும் அண்மையில் கொண்டாடப்பட்டிருந்தது.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது, இயற்கை வளங்களைப் பேணுவது, வான் மண்டலம், நீர்ப்பிரதேசம் ஆகியவற்றை மாசடைவதிலிருந்தும் தடுப்பது போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க முதற்கொண்டு பல்வேறு பிரமுகர்களும் விரிவான கருத்துக்களை வழங்கியிருந்தனர்.
உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்ட வேளையிலேயே, சர்வாதிகாரி ஹிட்லரின் நாஸிஸப்படைகளை நாசஞ்செய்த பாரிய படையெடுப்பின் 50வது ஆண்டுப் பூர்த்தியும் ஐரோப்பாவில் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.
ஹிட்லரின் நாஸிஸப்படைகளுக்கெதிராக ஒன்று திரண்டு போரிட்ட நேசநாடுகளின் இன்றைய தலைவர்கள் கடந்தவாரம் பிரான்ஸில் கூடியிருந்தனர்.
சர்வாதிகாரி ஹிட்லரின் பலம்மிக்க நாஸிஸப்படைகளைத் துவம்சம் செய்வதற்கென பிரிட்டனிலிருந்து பாரிய படையெடுப்பொன்று பிரான்ஸின் வடபகுதிக் கரையோரங்கள்மீது மேற்கொள்ளப்பட்டிருந்தது.
'ஒப்பரேஷன் ஓவர்லோர்ட்' (Operation overload) என்ற பெயரில் இப் பாரிய படையெடுப்பு சுமார் ஒன்றரை இலட்சம் படைவீரர்கள், மற்றும் பெருந்தொகையான இராணுவ சாதனங்களுடன் இடம்பெற்றிருந்தது.
இப்படையெடுப்பு இடம்பெற்ற 1944ம் ஆண்டு ஜூன் 6ம் திகதி, உலக வரலாற்றில் டி-டே, (D-DAY) என்ற பெயரில் சிறப்பிடம் பெறலாயிற்று.
ஐரோப்பாவில் இன்று கைத்தொழில் வளர்ச்சி, மற்றும் பொருளாதார ரீதியிலான அபிவிருத்தி, அரசியல் சுதந்திரம் என்பன உன்னதமான நிலையில் இருப்பதற்கு, 50 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த டி-டே (D-DAY) இராணுவ நடவடிக்கையே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.
இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஐரோப்பா தனது பொலிவை முற்றிலுமாக இழந்திருந்தது.
குடிமனைகள், தொழிற்சாலைகள், மற்றும் அழகிய பிரமாண்டமான கட்டிடங்கள் பலவும் விமானக் குண்டுவீச்சுக்கள், மற்றும் கனரக இராணுவ சாதனங்களின் தாக்குதல்களால் நாசமாகியிருந்தன.
இலட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்திருந்தனர். மேலும் இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாக நிர்க்கதிக்குள்ளாகியிருந்தனர்.
இன்று 50 வருடங்களின் பின்னர் யுத்தக் கெடுபிடியின் தழும்புகள் எதனையும் காணமுடியாதவாறு எங்கும், எதிலும் ஐரோப்பா புது மெருகுடன் இருக்கக்காணப்படுகின்றது.
நாஸிப்படைகளின் பிடியிலிருந்து ஐரோப்பாவை மீட்பதற்கு நேசநாட்டுப்படைகள் பிரிட்டனிலிருந்து பிரான்ஸுக்கு கப்பல்கள் மார்க்கமாக வந்த கடல் பிராந்தியம், வேறொரு விதத்திலும் இந்த ஆண்டில் வரலாறு படைத்துள்ளது.
பிரிட்டனையும், பிரான்ஸையும் பிரிக்கும் ஆங்கிலக் கால்வாய்க்குக் கீழாக கடல் படுக்கையைக் குடைந்து பிரிட்டனும், பிரான்ஸும் சுரங்கப் பாதையொன்றை அமைத்துள்ளன.
'கால்வாய்ச் சுரங்கம் (Channel tunnel) என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இச் சுரங்கத்தை பிரிட்டனின் எலிசபெத் மகாராணியார் கடந்த மாதம் திறந்து வைத்திருந்தார்.
இக்'கால்வாய்ச் சுரங்கம்' பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தொழில் நுட்ப வளர்ச்சியைப் பறைசாற்றுவதுடன் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகளையும் மேம்படுத்துவதாக இருக்கக் காணப்படுகின்றது.
இரண்டாம் உலக யுத்த கெடுபிடிகளிலிருந்து விடுதலை பெற்று, கைத்தொழில், பொருளாதார ரீதியாக ஐரோப்பா வளர்ச்சியடைந்துள்ளதைப் போலவே, ஜப்பானும் பல்வேறு துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றது.
ஜப்பான்மீது இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்கா அணுகுண்டுகளைப் போட்டிருந்தது.
இதனால் ஜப்பான் மாபெரும் அழிவைக் கண்டிருந்தது.
ஆனால் இன்று தன்மீது அணுகுண்டை வீசிய அமெரிக்காவை பொருளாதார, கைத்தொழில் ரீதியாக அடிபணிய வைக்கும் ஒரு நாடாகவே ஜப்பான் நிமிர்ந்து நிற்கின்றது.



எனவே உலகில் பாரிய யுத்த அழிவுகளுக்குட்பட்டிருந்த நாடுகள் இன்று அபரிமிதமான முறையில் வளர்ச்சியடைந்திருக்கக் காணப்படுகின்றன.
இந்நாடுகளின் விஞ்ஞான வளர்ச்சி, அதனோடிணைந்த கைத்தொழில் வளர்ச்சி என்பன உலகில் இன்று வியத்தகு சாதனைகளுக்கு வழி வகுத்துள்ளன.
இருந்தபோதிலும் இந்த வளர்ச்சிகளின் அனுகூலங்கள் இயற்கையோடு மோதுவதாகவும் இருக்கக் காணப்படுகின்றன.
நிலம்,நீர், காற்று, ஆகாயம் என்பன விஞ்ஞான வளர்ச்சியினால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.
தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் புகை, மற்றும் இராணுவ ரீதியிலான பரிசோதனைகள் காரணமாக வெளியேறும் புகைமண்டலம், மோட்டார் வாகனங்களின் அதிகரிப்பினால் உருவாகும் புகைமண்டலம் என்பன புவியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.
இதன் காரணமாகவே உலகில் இன்று சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு முனைப்படைந்து வரக்காணப்படுகின்றது.
1992ம் அண்டு பிரேஸில் நாட்டின் தலைநகரான ரியோ டி ஜெனோரியோவில் 'புவி உச்சி மகாநாடு' என்ற பெயரில் சுற்றுப்புறச் சூழல் குறித்த மாபெரும் சர்வதேச மகாநாடு ஒன்று இடம்பெற்றிருந்தது.
இம் மகாநாடு பூகோளரீதியாக சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்து உலக சமூகத்தை விழிப்படையச் செய்வதாக விளங்கியிருந்தது.
உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த இம் மகாநாட்டில் இலங்கையின் சார்பில் திரு.டி.பி.விஜேதுங்கவும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
திரு.டி.பி.விஜேதுங்க 1992ம் ஆண்டு பிரேஸில் 'புவி உச்சி மகாநாடு' நடைபெற்ற சமயம் இலங்கையின் பிரதமமந்திரியாகப் பதவி வகித்திருந்தார்.
இன்று இலங்கையின் ஜனாதிபதியாக இருக்கும் திரு.டி.பி.விஜேதுங்க கடந்தவாரங்களில் கொண்டாடப்பட்ட உலக சுற்றாடல் தினத்தையொட்டிய வைபவமொன்றில் பேசியபோது இலங்கையில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்கள் பற்றி எச்சரித்திருந்தார்.
இலங்கையைப் பொறுத்தவரை இன்று சுற்றுப்புறச் சூழல் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.
காடுகள் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டுவருகின்றன.
தொழிற்சாலைகளின் கழிவுகள், மற்றும் அத்துமீறிய குடியேற்றங்களால் சுத்தமான நீர் நிலைகள் மாசுபடுத்தப்பட்டுவருகின்றன.



ஹிட்லர்

தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கிலும் யுத்த நிலவரம், சுற்றுப்புறச் சூழலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் நாளுக்கு நாள் மனித உயிர்களை விரைந்து பலியெடுத்து வருவதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.
கடந்த பத்து வருடகாலத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் யுத்தக் கெடுபிடிகளினால் பலத்த இழப்புகளுக்குள்ளாகியுள்ளன.
வடக்கே இடம்பெறும் இடைவிடாத விமானக் குண்டு வீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்கள் என்பன குடிமனைப் பிரதேசங்களை நாசஞ் செய்துள்ளதுடன், இலட்சக்கணக்கானவர்களை அகதிகளாகவும் மாற்றிவிட்டுள்ளன.
அகதிகள் பிரச்னை, மற்றும் மக்களின் இடம்பெயர்வுகள் என்பனவும் சூழல், சுகாதார ரீதியாக பல்வேறு சிக்கல்களை உருவாக்கியுள்ளன.
எங்கும்,எதிலும் கொடிய குண்டுகளின் 'கந்தக வாடை' வீசுகின்றது.
யாழ்குடாநாட்டில் இன்று புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கக் காணப்படுகின்றது.
உணவுத் தட்டுப்பாடு, மருத்துவ வசதியீனங்கள் காரணமாக போஷாக்கின்மை உட்பட பல்வேறு தரத்திலுமான உடல்-உளவியல் பாதிப்புக்களால் மக்கள் பாதிப்படைந்திருக்கக் காணப்படுகின்றனர்.



ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இலங்கையில் வாகனங்களினாலும், தொழிற்சாலைகள், காடழிப்பு என்பவற்றினாலுமே சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று உலக சுற்றாடல் தினத்தையொட்டிய வைபவமொன்றில் கடந்தவாரம் உரை நிகழ்த்தியிருந்தார்.
ஆனால் வடக்கு-கிழக்கில் போரழிவுகளால் ஏற்பட்டுவரும் சூழல் பாதிப்புக்கள் குறித்தும் அக்கறைகாட்ட வேண்டியவராகவே ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க காணப்படுகின்றார்.
வடக்கு-கிழக்கில் ஓர் அமைதி நிலையை ஏற்படுத்துவதன் மூலமே இலங்கையை அடுத்த நூற்றாண்டின் சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்ளச் செய்ய முடியும்.
இலங்கையில் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்த போதிலும் அவற்றின் பலாபலன்களை முழு அளவில் அறுவடை செய்ய முடியாத நிலையை வடக்கு-கிழக்கு யுத்தம் உருவாக்கிவிட்டுள்ளது.
வருடந்தோறும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை வடக்கு-கிழக்கு யுத்தம் ஏப்பம்விட்டு வருகின்றது.
திரு.டி.பி.விஜேதுங்க நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்குமுன்னர் நிதியமைச்சராகவுமிருந்ததுடன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார்.
இந்நிலையில் இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் அரசியல், பொருளாதார ரீதியாக ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை தெட்டத் தெளிவாக அறியும் சந்தர்ப்பங்களை ஜனாதிபதி விஜேதுங்க பெருமளவில் கொண்டிருந்தார்.
அமைதியான, பாதுகாப்பான சூழ்நிலைகளிலேயே நாட்டின் பொருளாதாரம், மற்றும் சுற்றுச் சூழல் குறித்து ஆரோக்கியமான திட்டங்களை அமுல்படுத்த முடியும்.
ஒருபுறம் அபிவிருத்தி வேலைகளும், மறுபுறம் கொடிய யுத்தமும் ஏககாலத்தில் இடம்பெறும்போது ஒரு நாட்டில் எந்த விதத்திலும் ஆரோக்கியமான வளர்ச்சியை எந்தவொரு துறையிலும் கண்டுவிட முடியாது.
உலகில் இன்று வளர்ச்சியடைந்துள்ள நாடுகள், காத்திரமான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதன் மூலமே தாம் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட சவால்களையும் துணிவுடன் எதிர்கொண்டுவருகின்றன.
இது தவிர பாரிய பிரச்னைகளைக் கொண்டிருந்த தேசங்கள் அரசியல் ரீதியாகவே தமது பிரச்னைகளை அணுகுவதில் ஆர்வங்காட்டி வருகின்றன. கூடவே அரசியல் அணுகுமுறைகள் மூலமாக குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றன.
இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றப் பொதுத் தேர்தல் போன்ற இரு பெரும் தேர்தல்கள் இடம்பெறுவதற்கு இன்னும் சுமார் ஆறு மாதங்களே இருக்கின்ற தறுவாயில், இன்றைய ஆட்சியாளர்களால் இந்த ஆண்டில் நாட்டின் பிரதான பிரச்னையான வடக்கு-கிழக்குப் பிரச்னையை வெற்றிகரமாக அணுக முடியுமென்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் வடக்கு-கிழக்குப் பிரச்னை பற்றிச் சிந்திப்பதைவிட தம்மை எதிர்வரும் தேர்தல்களில் தப்ப வைத்துக் கொள்வது பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதிலேயே ஆளுங்கட்சியினரும், எதிரணியினரும் முனைப்பாக இருப்பார்கள்.
அரசாங்கம் தகுந்த தீர்வுத் திட்டங்களை முன்வைக்காமையால் தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவ ரீதியாகவே தம்மைப் பலப்படுத்துவதில் ஆர்வங்காட்டுகின்றனர்.
இந்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை அதற்கேயுரிய பாணியில் தொடர்ந்து செல்லும் என்றே எதிர்பார்க்க முடிகின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 'கைவீசம்மா கைவீசு கடைக்குப் போகலாம் கைவீசு!'

# பெண்களின் ஆரோக்கியத்துக்கு ஒரு யோசனை

அடிக்கடி சந்தைக்கும்- கடைகளுக்கும் பலதரப்பட்ட பண்டங்களையும் வாங்குவதற்காக செல்லும் பெண்கள் நல்ல சுகதேகிகளாகவும் நீண்ட ஆயுளுடையவர்களாகவும் வாழ்கின்றனர். சமூகவியல் ஆய்வாளரான டாக்டர் றெக்ஸ் மெல்ற்ஸ்லர் நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் இம்முடிவினைக் கூறுகிறார்.

டாக்டர் றெக்ஸ் தனது ஆய்வுக்கு [illegible] பெண்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர்களில் ஆகக் கூடுதலாக வாரத்துக்கு சராசரி 17 மணி நேரம் அங்காடிகளில் அலைந்து தமது திருப்திக்கேற்ற பொருட்களை தெரிவுசெய்யும் பெண்கள் தங்கள் வாழ்நாளையொத்த ஏனையோரைவிட திடகாத்திரமுள்ளவர்களாகவும் நீண்டகாலம் உயிர் வாழக்கூடிய நிலையிலும் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எந்த விடயத்திலும் திருப்தியடைவது, பொதுவாகவே மனிதனுக்கு இன்றியமையாத அவசியம் என்று பரபலாக நம்பப்படுகிறது.

பெண்கள் தங்களுக்கு வேண்டிய துணிமணிகளை, அன்றாட உணவுப் பொருட்களை, வீட்டுக்கு வேண்டிய தட்டு முட்டுச்சாமான்களை நேரடியாகச் சென்று, தங்கள் மனத் திருப்திக்கேற்ப தேர்ந்தெடுத்து வாங்குவதால் அவர்களுடைய மனம் சோர்வில்லாமல் மகிழ்ச்சி அடைகிறது.



இத்தகைய திருப்தியும் மகிழ்வும் அவர்களுடைய தோற்றத்தில் இளமை மங்காத தன்மையினையும் சாந்தமான உணர்வினையும் தருகின்றன. இவ்வாறு டாக்டர் றெக்ஸ் கருதுகிறார்.

தாங்கள் சந்தைக்குச் செல்லாமல் வேறு எவராவது வாங்கி வரும் பொருட்களில், பெரும்பாலான வீட்டுப் பெண்கள் திருப்திப் படுவதில்லை. தாமே நேரடியாகச் சென்று பார்த்து வாங்குவதில் இருக்கும் திருப்தியே தனிதான்.

அவ்வாறு திருப்தியடையாத பெண்களின் முகத்திலும் ஏனைய உடலுறுப்புகளிலும் சுருக்கங்கள் அதிகம் ஏற்படுகின்றன. விரைவில் முதுமையைத் தழுவுவதுடன் மரணவாயிலையும் வேகமாகச் சென்றடைந்து விடுகின்றனர்.

இத்தகையதோர் ஆய்வினை சுவிடன் நாட்டின் ஸ்ரொக்ஹோம் நகரைச் சேர்ந்த டாக்டர் ஸ்வென் விக் என்ற உளவள ஆய்வாளர் 1987ல் மேற்கொண்டார். அவர் கடைப்பிடித்த முறையினையே டாக்டர் றெக்சும் பின்பற்றி நியூயோர்க்-புரூக்லினில் இத்தகைய ஆய்வினை நடத்தியிருக்கிறார்.

பெண்களுக்குமட்டும் இத்தகைய ஆய்வினை மேற்கொண்ட டாக்டர் றெக்ஸ் மெல்ற்ஸ்லர் அடுத்து ஆண்களை வைத்து ஆராய்ச்சியினை மேற்கொள்ளவிருப்பதாக அறிவித்துள்ளார்.

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. வாசகர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### மில்க் ரொபி

**தேவையான பொருட்கள்:**
பால்மா– 120 கிராம்
சீனி– 150 கிராம்
வெண்ணெய்– 50 கிராம்
கொக்கோ பவுடர்–3 தேக்கரண்டி.
தண்ணீர்– 50 மில்லிலீற்றர்


**செய்முறை:**
1. சீனியையும், தண்ணீரையும் கலந்து ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொதிக்க விடவும். உபயோகிக்கும் பாத்திரத்தின் அடிப்பகுதி கனமாக அல்லது அலுமீனியப் பாத்திரமாக இருக்க வேண்டும். ஒரு தட்டில் ஒரு சொட்டு சீனிப்பாகை விட்டால் அது உருண்டு ஓடாமல் முத்துப்போன்று இருந்தால் அந்தச் சீனிப்பாகை அடுப்பிலிருந்து இறக்கவும்.
2. கொக்கோ பவுடரையும், பால்மாவையும் ஒன்றாகக் கலந்து சலித்து வைத்துக் கொள்ளவும்.
3. சீனிப்பாகை அடுப்பிலிருந்து இறக்கியவுடன் வெண்ணெய் சேர்க்கவும்.
4. வெண்ணெய் உருகியவுடன் ஒவ்வொரு கரண்டியாக சலித்த பால்மா, கொக்கோ பவுடர் கலவையைச் சேர்த்துக் கலக்கவும்.
5. கலவை பாத்திரத்தில் ஒட்டாமல் வந்தவுடன் நெய் தடவிய பலகையில் 1/2 அங்குல பருமனுக்குச் சமமாகத் தட்டி சதுரங்களாக வெட்டவும்.

## லேடீஸ் ஸ்பெசல்

**பின் குறிப்பு:**
1. தேவையானால் கஜு, பாதாம்பருப்பு போன்றவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்த்துக்கொள்ளலாம்.
2. பாகு முதிர்ந்து ரொபி பொடிப் பொடியாக ஆகிவிட்டால் சிறிது பாலைத் தெளித்து மறுபடியும் அடுப்பில் வைத்து இளக வைத்துப் பாகு பதமாக வருமாறு கிளறிக்கொள்ளவும்.

## கைவேலைப் பகுதி — எஸ்.எஸ்.

### மெடோனா (பூ)




**தேவையான பொருட்கள்:**
தங்கநிறக் கம்பி 1 டசின்
பிளவர் சென்ற் (மகரந்தம்) 1 கட்டு
வெளிரிய மஞ்சள் ஸ்ரொக்கிநெற்.
1/2 நூல் கட்டுக்கம்பி
ஹம்ரேப் (Gum Tape)
நூல் (தையல்)
பச்சை நிற ஸ்ரொக்கிநெற்:

**அளவுகள்:**
பெரிய பூ தங்கநிறக் கம்பி 8" 5 துண்டுகள்
சிறிய பூ தங்கநிற கம்பி 6" 5 துண்டுகள்
மொட்டு தங்கநிறக் கம்பி 4" 2 துண்டுகள்
இலை தங்கநிற கம்பி 8 அங் 3 துண்டுகள்
சிறிய இலை தங்கநிறக் கம்பி 5 அங் 1 துண்டு

**செய்முறை:**
தங்கநிறக் கம்பியை 8 அங்குல அளவில் 5 துண்டுகளை வெட்டி கம்பியின் இரு நுனிகளையும் குறட்டினால் முறுக்கவும். முறுக்கியதும் நீள்வளைவாக உள்ள முன் பகுதியை ஒரளவு கூம்புவடிவமாக்கி அதன்மேல் வெளிரிய மஞ்சள் ஸ்ரொக்கி நெற்றினால் மூடி இழுத்துக்கொண்டு முறுக்கப்பட்ட கம்பியின் இடத்தில் நூலினால் சுற்றிக்கட்டி எஞ்சியதை வெட்டவும். தற்போது உங்கள் கையில் பூவின் ஒரு இதழ் உள்ளது. இவ்விதழ் மாதிரி இன்னும் நான்கு செய்து கொள்ளவும்.

மகரந்தம் 4 துண்டினை எடுத்து நடுவில் கட்டுக்கம்பியினால் கட்டவும். கட்டப்பட்டதும் மகரந்தம் 8 நுணிக்கைகளைக் கொண்டுள்ளது. இதழ்கள் ஐந்தினையும் எடுத்து மகரந்தம் உட்புறமாக இருக்கும்படி இதழ் ஒன்றை முதலில் கட்டவும். அதன் அருகருகே மற்றைய இதழ்களையும் கட்டவும். இப்போ பூவின் அமைப்பு வந்துவிட்டதும் கம்ரேப்ஜ நூலினால் கட்டப்பட்ட பகுதியிலிருந்து கீழ்நோக்கி சுற்றவும். இப்போ விரியாமல் பூ இருக்கிறதல்லவா? எமது விரல்களினால் கூர்மையாக உள்ள பகுதியை கீழ்நோக்கி சிறிது வளைக்கவும்.

இதழ் செய்த முறைப்படி இலைக்கு பச்சைநிற ஸ்ரொக்கிநெற்றினால் கட்டவும். கட்டிய இலைக்கும் கட்டுக்கம்பியினால் கட்டவும். கட்டுக்கம்பி தெரியாமல் கம்ரேப்ஜச் சுற்றவும்.

மொட்டையும் மேற்காட்டப்பட்ட அளவில் எடுத்து இதழ்-இலை செய்தது போன்று மகரந்தத்தை கட்டுக்கம்பியில் கட்டி மொட்டுக்கான 4" இதழை ஒன்றை ஒன்று பார்க்கும்வண்ணம் ஒன்றை உள்நோக்கி சிறிது வளைத்தும் மற்றதை சிறிது வெளிப்புறமாக வளைத்துக் கொள்ளவும்.

முதலில் மொட்டு, சிறு இலையில் ஒன்றையும் கட்டுக்கம்பியில் வைத்து கம்ரேப்பினால் சுற்றிக்கொண்டு இடையில் விட்டு அடுத்த சிறிய பூவையும் பெரிய இலையில் ஒன்றையும் வைத்துக்கட்டிக் கொண்டு இடையில் விடப்பட்ட கம்ரேப்பினால் மீண்டும் சிறிது சுற்றிவிட்டு அடுத்து பெரிய பூவையும் எஞ்சிய இலையையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றவும். இப்போ உங்கள் கையில் அழகிய மலர் கொத்து.




ஊக்குவிக்கும் எண்ணம் மட்டும் பட்ட மரமாகி வருகிறது.

சுற்றாடல் கெட்டுப் போனால் நல்ல காற்றை சுவாசிக்க முடியாமல் போகிறது.

கெட்டுப்போன மனங்கள் சுற்றியிருந்தால் யாரும் யாரையும் விசுவாசிக்கவும் விருப்போடு நேசிக்கவும் முடியாமல் போகிறது.

கெட்டுப்போய்விட்ட சூழல் இரண்டு கேள்விகளை கொண்டுவந்து நீட்டுகிறது.

## சிந்திக்கலாம் இங்கே...

"குப்பைக்குள் கிடந்தாலும் குண்டுமணி மங்காது." என்று சொல்லுவார்கள்.

ஆனால், கோபுரத்தில் போய் ஒட்டியிருந்தாலும் குப்பை குப்பைதான்.

குப்பைக்கு வந்த காலத்தைப் பார். அதுபோய் கோபுரத்தில் ஒட்டிக் கொண்டதே என்று குண்டுமணி குப்பையாகிவிடக்கூடாது.

துரோகம் செய்யத் தெரிந்தவன் குபேர வாழ்க்கை வாழ்வது கொஞ்சக் காலம்தான். அதை மறந்துவிடக்கூடாது.

முதுகில் குத்துகிறவன் எல்லாம் முக விலாசம் பெறுகிறானே என்று நினைத்து உயர்ந்த உள்ளங்களும் தம் உள்ளங் கைகளுக்குள் குறுவாளை ஒளித்துவைத்துக் கொள்ள ஆரம்பித்தால் யாரும் வாழ முடியாமல் போய்விடும்.

ஆனால், வாழ்க்கையில் பலர் நடித்துக்கொண்டிருப்பதால், நடிக்க விரும்பாத சிலரை அந்தப் பலர் நம்புகிறார்கள் இல்லை.

நேர்மையாக நடந்துகொள்வோம் என்று சொன்னால் நெற்றிப்புருவம் உயர்த்தி சந்தேகத்தோடு பார்க்கிறார்கள்.

விசுவாசம் என்பது வெளிவேசம் என்றாகி வருவதால், உண்மையான விசுவாசம்கூட சந்தேகப்பார்வையால் பரிகாசம் செய்யப்படும் காலம் இது.

நம்பக்கூடாதவர்களை நம்பிக்கெட்டவர்கள், நச்சுப் பாம்புகள்தான் நாடெங்கும் இருப்பதாக நம்பத் தொடங்கி விடுகிறார்கள்.

நம்பியவர்களை நம்ப வைத்துக் கெடுத்தவர்கள் யார்மீதும் நம்பிக்கை கொள்ள ஒப்புக்கொள்ள மாட்டாதவர்களாகி விடுகிறார்கள்.

அடுத்தவன்மீது அக்கறை கொள்வதாக் நடித்து அடுத்துக் கொடுத்தவன்மீது நீ உண்மையான அக்கறை காட்டினாலும் உன்மீது சந்தேகப்படுவான்.

நீயும் தன்னைப்போலவே நடிக்கிறாயோ என்றுதான் நினைத்துக் கொள்ளுவான்.

வில்லங்கமே இதுதான். நம்பிக் கெட்டவர்களும் நல்ல உள்ளங்களை காயப்படுத்துகிறார்கள்.

நம்பிக்கைகளை கெடுத்தவர்களும் நல்ல உள்ளங்களை நரக வேதனைக்குள்ளாக்கி விடுகிறார்கள்.

ஆகவேதான், நம்பிக்கைகளுக்கு விசுவாசமாக வாழ விரும்புகிறவனும் விரக்திக்குள்ளாகிறான்.

"சூழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது" என்று கண்டறிந்து சொன்னவர் கால் மார்க்ஸ்.

நாவிலே சுத்தம் இல்லாத 'நாவணிகர்கள்' ஊரெங்கும் உலா வருகிறார்கள்.

அவர்களின் பேச்சும், மூச்சும் வாழும் சூழலையை மாசுபடுத்திக் கொண்டிருக் கின்றன.

சுற்றாடல் மாசுபடுவதை தடுக்கும் ஒரு முறையாக மரம் வளர்க்கச் சொல்கிறார்கள்.

மனித உணர்வின் சுத்தத்தை காக்க நல்ல மனங்களுக்கு உரம்போட்டு ஊக்குவிக்கும் எண்ணம் மட்டும் பட்ட மரமாகி வருகிறது.

நேரத்திற்கு ஏற்ப நிறத்தை மாற்றிக் கொண்டு வாழ்வதா?

அல்லது, நேசங்களுக்கு விரோதம் இல்லாமல் துரோகம் செய்யாமல் குப்பைக்குள் கிடக்கும் குண்டுமணியாக வாழ்வதா?

இந்த இடத்தில்தான் காலத்தின் கரத்தின் கச்சிதமான வீச்சைப் புரிந்துகொள்ளவேண்டும்.

கோபுரத்தில் ஒட்டியிருந்த எந்தக் குப்பையும் நீண்ட நாட்களுக்கு அங்கேயே தங்கியிருந்ததில்லை.

அந்தக் குப்பையோடு குப்பையாக ஒட்டியிருக்க நினைத்தால் நாளை காற்றின் கரத்தில் சிக்கி காணாமல் போக வேண்டித் தான் வரும்.

நாய் என்று நினைத்து நரி வளர்த்தால் அது காலைச் சுற்றிவந்து குழி பறிக்கத்தான் செய்யும்.

நரி வளர்த்துப் பழக்கப்பட்டவர்கள் நன்றியுள்ள நாய்மீதும் சந்தேகப்படவே செய்வார்கள். அதற்காக நாயின் நன்றியுணர்ச்சி நசித்து போய்விடுவதில்லை.

நாம் மனிதர்கள். நமக்குள் சிலரோ பலரோ மனதில் நரி வளர்க்கிறார்கள் என்பதற்காக நாமும் மனித உணர்வை -நட்பை-நேசத்தை மரிக்கச் செய்துவிடக் கூடாது.

நரிகளை விரட்ட முடிந்தால் செய். முடியாதா? விலகி நில். உன் பாதையில் செல்.


இந்தக் குப்பைக்குள்ளும் உன்னால் குண்டுமணிகளை காணமுடியும்.


இன்னமும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை உன் பயணத்திற்கு வெளிச்சம் தரும். உன் வாழ்வுக்கு அர்த்தம் வரும்.

(மறுவாரமும் சிந்திக்கலாம்)


## பெண்கள் மேக்அப் செய்யும் முறை — ருக்கா-நாதன்


1. முதலில் கிலெஞ்சில் கிரிம் மில்க் தடவி சுத்தம் செய்யவும்.
2. மேக்கப் செய்வதற்கு அடிப்படை 'பவுண்டேஷன்' மேக்கப்பை நீண்ட நேரம் நிலைத்திருக்க செய்யும் முகத்தின் நிறத்திற்கு ஏற்ற பவுண்டேசனை பூசவேண்டும். அதன் மேல் மிருதுவான ரான்லூசன் பவுடர் பூசவேண்டும்.





3. கண்களுக்கு மேக் அப் செய்வதில் கவனம் தேவை. ஐப்ரோ பென்சிலால் புருவங்களை தடவுங்கள். ஐலைனரின் உதவியால் கண்களுக்கு கீழே கோடு போல் இழுக்கவும்.
4. நீங்கள் அணியும் உடைக்கும் பொருத்தமாக இருக்கும் நிறத்தில் ஐஷேடோவை தேர்ந்தெடுக்கவும்.





புருவத்தின் மேல் இலேசாக புடவையின் நிறங்களில் பூசவும். கருமையான ஐஷேடோவினால் கண்களில் வெளியில் தடவினால் கண்கள் பெரிதாக காட்டும்.

5. கண் இமைகளில் உள்ள முடிகளில் மஸ்காராவை பிரஷ்ஷால் பூசிக் கொள்ளலாம். பூசும்போது கண்களை நன்றாக திறந்து கொள்ளவும்.
6. பூச்சை முதலில் புள்ளி புள்ளியாக வைத்து பிறகு பிரசால் சீராக்கவும்.
7. பிரஷ் ஒன்றை உபயோகித்து உதடுகளை அகற்றி (லிப்லைனர்) எந்த நிற லிப்ரிக்கை உபயோகிக்கப் போகிறீர்களோ அதைவிட டாக் கலரில் லைன் போடவும். பின் லிப்ரிக்சை தடவவும்.



8. லிப்ஸ்ரிக் அழியாதிருக்க அதற்கென்றுள்ள லிப் குலோஸ்லைப் உதட்டில் ஒற்றிக்கொள்ளவும்.

## எரிச்சல் ஏன்?



வெவ்வேறு சாந்துப் பொட்டுகளை மாற்றி மாற்றி வைப்பதனால் சில பெண்களுக்கு பொட்டு வைக்கும் இடத்தில் எரிச்சலும், நமைச்சலும் ஏற்படும். இதற்கு வில்வமரத்தின் பட்டையை சந்தனக் கல்லில் உரைத்துவரும் குழம்பை எடுத்து அந்த இடத்தில் வைத்துக்கொண்டால் எரிச்சலும், நமைச்சலும் மறையும்.

## வாரம் தோறும்

# வளர்ந்த உடம்பு



## ஊதிப் பருத்து மடிந்துபோன நகைச்சுவை நடிகர்

அவர் எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

ஆனால்-தன் உடல் பருத்துக் கொண்டிருந்ததைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் இருந்துவிட்டார்.

அவரது எடை 375 இறாத்தல். அந்த எடையோடு குடை சாய்ந்துவிட்டது அவரது வாழ்க்கை வண்டி. இதோ அந்த சோகக்கதை.

ஹொலிவுட் திரையுலகில் தற்போதைய தலைசிறந்த நகைச்சுவை நடிகரான ஜோன் கண்டி தனது 43வது வயதில் காலமானார். மெக்சிக்கோ நாட்டிலுள்ள டுராங்கோ எனும் ஊரில் 'வாகன்ஸ் ஈஸ்ற்' என்ற 'கௌபோய்' படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்த ஜோன் இருதயக் கோளாறினால் திடீர் மரணமானார்.

"நான் மிகக் களைப்படைந்துவிட்டேன். உடனே என் வீட்டுக்குப் போய் என் குடும்பத்தாருடன் சேரவேண்டும்" என்பதே ஜோன் கூறிய இறுதி வார்த்தைகள்.

டுராங்கோ என்ற பிரதேசத்தில் அன்று 80 பாகை வெய்யில் எறித்துக்கொண்டிருந்தது. காலை 10 மணியளவில் படப்பிடிப்பில் கலந்து கொள்ளச் சென்றவர் இரவு 10 மணிக்குத்தான் விடுதி திரும்பினார். அதன் பின்னர் குளித்துவிட்டு தாராளமாக உண்டதன் பின் சிறிது நேரம் காற்று வாங்கினார். 11 மணிக்குப் படுக்கைக்குச் சென்றவர் எழுந்திருக்கவேயில்லை.

அடுத்த நாட்காலை விடுதி உதவியாளர் பலமுறை தட்டியும் ஜோனின் படுக்கை அறைக்கதவு திறக்கப்படவில்லை. இதனால் பலாத்காரமாகக் கதவு திறக்கப்பட்ட போது பாதி உடல் கட்டிலிலும் மறு பாதி வெளியிலும் கிடக்க இறந்து கிடந்தார்.

43தான் வயது. ஆனால் இவருடைய எடை 375 இறாத்தல். உயரம் 6 அடி 3 அங்குலம்.

இவரை அதிக உணவு உண்ணலாகாது என்று மருத்துவர்கள் பலதடவை எச்சரித்துள்ளனர். ஆனால் ஜோன் கேட்கவில்லை.

"என் உருவத்தைக் குறைத்துக் கொண்டால் எனது நடிப்பினை இரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனது இரசிகர்களுக்காகவே என் உடலை இதே அளவில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது." என்று கூறுவார் ஜோன்.

இவருடைய இடுப்பளவு 59 அங்குலம். எனினும் ஒவ்வொரு வாரமும் இதன் அளவு அதிகரித்துகொண்டே இருந்தது. உடை தயாரிப்பாளர்களுக்கு ஒரு பிரச்சனை. திரைப்படத்தில் இவருக்கான உடைகளை ஒவ்வொரு வாரமும் புதிதாகத் தைக்க வேண்டிய நிலை.

கனடாவில் பிறந்த ஜோன் கண்டி அமெரிக்காவில் வாழ்ந்து மெக்சிக்கோவில் இறந்தார். இவருடைய இறுதிப்படத்தில் ஆக இன்னும் இரண்டு காட்சிகளில் மட்டுமே இவர் நடிக்கவேண்டியிருந்தது. கட்டுப்பாடற்ற வகையில் உணவு உண்பதனாலேயே ஜோன் இந்த இளவயதில் காலமாக நேர்ந்துள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## முக அழகன்!

அகத்தின் அழகை மட்டுமல்ல இவர் முகத்தின் உண்மையான அழகைக்கூட முகத்தில் பார்க்க முடியாது.



நூறுவிதமான முகபாவங்களை இவரால் செய்துகாட்டமுடியும். முகத்தின் தசையை ரொட்டி மாபோல பிசைந்து உருட்டி எல்லாம் வித்தைகாட்டி அசத்திவிடுகிறார்.

முகபாவ மாற்றப்போட்டியில் 1931ம் ஆண்டு மே 7ம் திகதி எடுக்கப்பட்ட படம் இது. போட்டியில் இவர்தான் சாம்பியன். அமெரிக்க நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர். பெயர் குளோட் ஆர், ஓவர்கோல்ட்.

## தகவல் பெட்டி

# அழகில்லா நாய் போட்டி



1992இல் இதுதான் முதற்பரிசு தட்டிக்கொண்டது

## நாய் உரிமையாளர்களுக்கு ஒரு நற்செய்தி



1993ல் பரிசுவென்ற கில்லாடி இதுதான்

நாய் வளர்ப்பு என்பது மேலைய நாடுகளில் மட்டுமல்லாமல் நம் நாட்டிலும் மிக முக்கிய கவனத்திற்குரிய விஷயமாகி வருகிறது.

ஒரு குழந்தையை வளர்க்கும் பக்குவத்தோடும், கவனத்தோடும் நாய் வளர்க்கப்படுகிறது.

வீட்டில் ஒரு நாய் இல்லாவிட்டால் வெட்கப்படவேண்டிய விஷயம் என்ற மாதிரி வெளிநாட்டவர்கள் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.


விதம் விதமான நாய்களை சேகரிப்பது ஒரு போட்டியாகவே மாறி வருகிறது.

எனவே- நாய்க் கண்காட்சிகள் பலநாடுகளில் நடைபெறுகின்றன. நம் நாட்டிலும் நடைபெறுகிறது.

அழகான, புஷ்டியான, வித்தியாசமான நாய்களுக்கு பரிசு உண்டு. அழகுராணிப் போட்டி, ஆணழகன் போட்டி மாதிரித்தான் இதுவும்.

ஆனால் கனடாவில் உள்ள ஒரு நிறுவனம் சற்று வித்தியாசமாக யோசித்தது. அழகு குறைந்த நாய்களுக்கு ஒரு வாய்ப்பு. மிக மோசமான, பயங்கரமான தோற்றமுள்ள நாய்க்கு முதல் பரிசு என்று அறிவித்தது. அவ்வளவுதான் உலகெங்கும் இருந்து கோரமுகம் கொண்ட நாய்கள் எல்லாம் அங்கு வந்து குவிந்துவிட்டன. 1992ம் ஆண்டு முதல் இந்தப் போட்டி நடந்து வருகிறது.

## புகைத்துப் படைத்த சாதனை



இவரது பெயர் ஜோன் கொன்னோஸ். அமெரிக்க மசாசூசெட்ஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

புகைத்து தள்ளி புகழ் குவித்துவிட்டார். ஒன்றா இரண்டா? 600 சுருட்டுக்கள். அத்தனை சுருட்டுக்களையும் அண்ணர் 48 மணி நேரத்தில் புகு, புகுவென்று ஊதித்தள்ளிவிட்டார்.

ஒவ்வொரு சுருட்டின் நீளமும் 6 அங்குலம். வாயால் மட்டும் புகைக்கவில்லை. மூக்காலும் சுருட்டை வாங்கி புகைத்து தள்ளியதால்தான் 48 மணிநேரத்தில் 600 சுருட்டையும் சாம்பலாக்கி சாதனை படைக்க முடிந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஆற்றங்கரையில் எச்சரிக்கை
விரிந்திருக்கும் வலையில்
அப்புறம் செல்வோர்
வீழ்ந்துவிடாதிருக்கவும்



# சினிவிசிட்

### சரத்-ராஜா 'மூக்குத்தி காசி'

'இந்து' பட இயக்குநர் பவித்ரன் அடுத்து இயக்கப்போகும் படத்தின் பெயர் 'மூக்குத்தி காசி'. சரத்குமார்-ரோஜா ஜோடியோடு பிரபல ஹிந்தி நடிகை ஒருவரும் நடிக்கப் போகிறார். மூன்று கோடி செலவில் பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். இசை-தேவா.



தீய அரசியல் வாதிகளை ஒழித்துக்கட்டுவது தான் படத்தின் கதைக்கான கரு. 'இந்து' படத்தில் சரத்குமாருக்கு 'மூக்குத்தி காசி' என்றுதான் பெயர். அதையே தனது அடுத்த படத்திற்கும் பவித்ரன் பயன்படுத்திக் கொண்டுவிட்டார். பவித்ரன் இயக்கத்தில் சரத்குமார் நடிக்க இருந்த 'ஹிட்லர்' படம் நிறுத்தப்பட்டிருக்கிறது. தயாரிப்பாளார் 'ஹிட்லர்' இப்போது வேண்டாம் என்று ஒத்திவைக்கச் சொல்லிவிட்டாராம்.

### பெண் வேடத்தில் நடிகர்

ஏற்கனவே தமிழில் 'வெட்டி', 'காசு ஆசை' ஆகிய படங்களில் நடித்தவர் ராஜேந்திர பிரசாத். பிரகாசிக்க முடியவில்லை. தெலுங்குப் பக்கம் போயிருந்தார். அங்கு நகைச்சுவை நடிகராக கொடிகட்டிப் பறந்தார். ஒரே ஆண்டில் 24 படங்களில் நடித்து சாதனை படைத்த பிரசாத் இப்போது தமிழ், தெலுங்கு என்று இரு மொழிகளிலும் தயாராகும் படத்தில் நடிக்கப் போகிறார். படத்திற்கு 'மேடம்' என்று பெயர் வைத்துள்ளார்கள். இதில் என்ன விசேஷம் என்றால் படத்தின் பெரும் பகுதி முழுக்க 'பிரசாத்' பெண் வேடத்திலேயே நடிக்கிறார். சிரிப்புக்கு பஞ்சமே யில்லை.





பிரபு-வினிதா
படம்-வியட்நாம் காலனி

## மினிசினி

★ இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்க ஆர்.சுந்தராஜன் இயக்கும் 'என் ஆசை மச்சான்' படத்தில் விஜயகாந்தும், முரளியும் அண்ணன் தம்பியாக நடிக்கின்றனர்.

★ கர்ணனை அடுத்து ரேவதி படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப் படம் இவரது தாய்மொழியான மலையாளத்தில் வெளிவரும்.

★ பார்த்திபன் இயக்கி நடித்துவரும் 'சரிகமபதநி' படத்தில் இவரது மனைவியான சீதாவின் தம்பி பிரசாத் என்பவர் முக்கிய வேடமொன்றில் நடித்து வருகிறார்.

★ இந்தியில் ஸ்ரீதேவி-சஞ்சய்தத் நடித்து வெற்றி பெற்ற 'குமரா' படத்தை தெலுங்கில் தயாரிக்கும் உரிமையைப் பெற்ற ஸ்ரீதேவி, அந்தப் படத்தின் தெலுங்குப் பதிப்பிலும் அவரே கதாநாயகியாக நடிக்கிறார்.

★ மணிரத்தினத்தின் உதவியாளர் இயக்கும் 'மே மாதம்' படத்தினால் பி.சி.ஸ்ரீராம் பிஸியாக இருந்ததால், மணிரத்தினம் தனது 'பம்பாய்' படத்திற்கு ராஜீவ் மேனன் என்பவரை ஒளிப்பதிவாளராகப் போட்டுள்ளார்.

★ கார்த்திக்கை வைத்து 'சின்ன ஜமீன்' படத்தைத் தயாரித்த கே.பாலு, தற்போது தயாரித்துவரும் 'தோழர் பாண்டியன்', 'ஜல்லிக்கட்டுக்காளை' ஆகிய படங்களை அடுத்து கார்த்திக், மதுபாலா ஜோடியாக நடிக்க புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

★ நட்சத்திர இயக்குநர் பிவாச இயக்கிவரும் 'சாது' படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் இந்தி நடிகை ரவீனா டாண்டன். அடுத்து இவரது இயக்கத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'கட்டுமரக்காரன்' படத்திலும் பிரபல இந்தி நடிகை கதாநாயகியாக நடிப்பார்.

★ 'மிஸ்டர்பேச்சாரா' (இந்தி), 'ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி' ஆகிய படங்களை அடுத்து கே.பாக்கியராஜ் தொலைக்காட்சித் தொடரொன்றை இயக்கவுள்ளார்.

## சூப்பர் ஹிட் பாடல்கள்

தற்போது தமிழ் நாட்டில் விற்பனையில் முதல் பத்து இடத்தில் இருக்கும் ஓடியோ கசட்டுக்கள் விபரம்.

1. டூயட்- ஏ.ஆர்.ரகுமான்
2. செந்தமிழ் செல்வன்- எம்.எஸ். விஸ்வ நாதன், இளையராஜா
3. வீரா- இளையராஜா
4. இந்து-தேவா
5. ஒரு வசந்த கீதம்-டி.ராஜேந்தர்
6. ஜெய்ஹிந்த்-வித்யாசகர்
7. அதர்மம்- இளையராஜா
8. சரிகமபதநி- தேவா
9. ரசிகன்- தேவா
10. சக்திவேல்- இளையராஜா

## துவக்கி வைத்தார் விஜயகாந்த் தொடர்ந்து நடித்தார் ராதிகா

'பாட்டுக்கொரு தலைவன்', 'ஏழை ஜாதி', 'கட்டளை', 'எங்க முதலாளி' ஆகிய படங்களை டைரக்ட் செய்தவரும், 'பூந்தோட்டக் காவல்காரன்', 'புலன் விசாரணை', 'கேப்டன் பிரபாகரன்', 'மாநகர காவல்' போன்ற படங்களுக்கு திரைக்கதை- வசனம் எழுதியவருமான லியாகத் அலிகான் கேஎன் அன்பு அவர்களுடன் இணைந்து தயாரிக்கும் படம் 'ராணி மகராணி'.

படப்பிடிப்பை விஜயகாந்த் துவக்கி வைக்க ராதிகா சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. இத்தோடு விஜயகாந்த்- ராதிகா மோதலும் முடிந்துவிட்டதோ?

## நடிகர் திலகத்திற்கு வியட்நாம் வீடு இளையதிலகத்திற்கு வியட்நாம் காலனி

'சின்ன மாப்ளே', 'மகாநதி' போன்ற வெற்றிப் படங்களை டைரக்ட் செய்த சந்தானபாரதி அடுத்து சி.வி.ராஜேந்திரன் 'ஸ்ரீ கணேஷ் விஷன்ஸ்' சார்பில் தயாரிக்கும் 'வியட்நாம் காலனி' படத்தை இயக்கி வருகிறார்.

பிரபு-வினிதா ஜோடி நடிக்கின்றனர்.

இப்படத்தின் கதாநாயகனாக பிரபு நடிக்கிறார். கதாநாயகியாக வினிதா நடிக்கிறார். நாசர், கவுண்டமணி, மனோரமா, ஜெயந்தி, தியாகு, காகா ராதாகிருஷ்ணன் டெல்லி கணேஷ் மற்றும் பலர் நடிக்கும் இப்படத்தின் வசனத்தை கிரேஸி மோகன் எழுதுகிறார்.

இப்படத்தின் இசையை இளையராஜா அமைக்க, ஒளிப்பதிவை எம்.எஸ்.பிரபு கவனிக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் துவக்கி வைக்க, வேகமாக வளர்ந்து வருகிறது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஐயர் வேடம் ஏற்று நடித்த 'வியட்நாம் வீடு' மகத்தான வெற்றி பெற்று அனைவரின் பாராட்டையும் பெற்றதுபோல், இளைய திலகம் பிரபு ஐயர் வேடத்தில் சிறப்பாக நடித்து வரும் 'வியட்நாம் காலனி' படமும் மகத்தான வெற்றி பெறும் என்று இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

பெரும் செலவில் சி.வி.ராஜேந்திரன் தயாரிக்கும் இப்படத்தை இயக்கும் சந்தானபாரதி இரசிகர்களது எதிர்பார்ப்புகளை நிச்சயமாக்க பாடுபட்டு உழைத்து வருகிறார். சென்னையைச் சுற்றி பல இடங்களிலும், முருகாலயா ஸ்டூடியோவில் உருவாக்கியுள்ள பல வீடுகள் கொண்ட 'வியட்நாம் காலனி'யிலும் வேகமாக வளருகிறது.



பாக்யராஜ்-மீனா
படம்-ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி

## கார்த்திக்கோடு புதுமுகம்

ஆர்.வி.உதயகுமார் இயக்க, கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'நந்தவனத்தெரு' படத்தில் ஸ்ரீநிதி என்னும் புதுமுகம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். இவர்களுடன் மனோரமா, ஜனகராஜ், வடிவேலு உட்பட பலர் நடிக்கின்றனர்.

சுஜாதா உதயகுமார் கதை எழுத, திரைக்கதை அமைத்து படத்தை இயக்குகிறார் ஆர்.வி. உதயகுமார். கோகுல கிருஷ்ணா வசனம் எழுத, இளையராஜா இசையமைக்கும் இப்படத்தை 'தெய்வ வாக்கு', 'சின்னமாப்ளே' படத்தைத் தயாரித்த டி.சிவா, ஆர்.செல்வராஜ் என்பவருடன் இணைந்து தயாரிக்கிறார்கள்.

## இந்தியில் அரவிந்த சாமி

'ரோஜா' படப் புகழ் அரவிந்த் சாமிக்கு பெண் இரசிகைகள் அதிகம். இந்தியிலும் அவருக்கு வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

இந்தியில் அவரைக் கதாநாயகனாக வைத்து விரவிச்சந்திரன் ஒரு படத்தை இயக்கப்போகிறார்.

விரவிச்சந்திரன் ஏற்கனவே ரஜினியோடு 'நாட்டுக்கொரு நல்லவன்' படத்தில் நடித்து அதனை தயாரித்தவர். கன்னடத்தில் சூப்பர் ஸ்டார்.

## இலங்கை இரசிகை எழுதிய கடிதம்

இயக்குநர் சந்திரசேகரின் மகன் விஜய் வளர்ந்து வரும் நடிகர். அவருக்கு ரசிகைகள் எழுதிய கடிதங்களில் மறக்கமுடியாத கடிதம் ஒன்று இலங்கை இரசிகை ஒருவருடையது. அந்த இரசிகையின் கடிதத்தில் "நான் மிகவும் நன்றாக நடனம் ஆடுவேன். அதுவும் உங்களோடுதான் ஆடுவேன். எனக்கு ஒரு ஆசை. உங்கள் அம்மாவுடன் சேர்ந்து சமைக்க வேண்டும். இதற்கு ஒரு வாரத்தில் பதில் எழுத வேண்டும். இல்லையானால் தீக்குளிப்பேன்" என்று எழுதியிருந்தாராம். உடனடியாக பதில் எழுதிவிட்டாராம் விஜய். போனிலும் மணிக்கணக்காக இரசிகைகள் பேசுகிறார்களாம்.

## எல்லாமே என் ராசாதான்!

ராஜ்கிரண் அடுத்து இயக்கி நடிக்கும் 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் ரூபஸ்ரீ, சங்கீதா நடிக்கிறார்கள். 'டூயட்' படத்தில் பிரபுவின் தங்கையாக ரூபஸ்ரீயும், 'இராவணன்' படத்தில் மன்சூர் அலிகானின் தங்கையாக சங்கீதாவும் நடித்துள்ளார்கள்.

இப்படத்தில் முன்னர் குஷ்பு, செண்பகம் நடிக்க இருந்தனர் பின்னர் ராஜ்கிரணால் அவர்கள் நீக்கப்பட்டனர்.

## இப்படித்தான் பெயர்கள்

தமிழ் படங்கள் சிலவற்றுக்கு வைக்கப்பட்டுள்ள விசித்திரமான பெயர்களின் பட்டியல்.

'நவீன காம சூத்திரம்', 'மிஸ்டர் கருப்பு பூனை', 'மாபியா மைனர்', 'கம்மா இருங்க மச்சான்', 'ஹனிமூன்', 'நல்லவ', 'பிளே கேர்ள்ஸ்', 'ஆம்பளையாடா நீங்க', 'தாயும் மகனும்', 'டாப்ஹீரோ', 'உனக்கும் எனக்கும் கல்யாணம்', 'விளக்கேத்தி வைச்சாச்சி', 'ஊரெல்லாம் உங்க பேச்சு', 'எனக்கும் கல்யாணம்' பட்டியல் எப்படிங்க?

## விதியோகஸ்தர் கமல்

பிரபு நடித்து திரைக்கு வந்துள்ள 'டூயட்' படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை கமல் வாங்கியிருந்தார். 'டூயட்' நன்றாகவுமோடினால் லாபம் வருவது நிச்சயம்.

## இந்தியில் மம்முட்டி

மம்முட்டிக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றுக்கொடுத்த 'பொந்தன் மாடா' மலையாளம் என்ற படம் இந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மம்முட்டியே சொந்தக் குரலில் இந்தி பேசியிருக்கிறார்.

இதேபோல் அவர் நடித்த 'தர்த்தி புத்ரா' இந்தி படம் தமிழில் மொழிமாற்றப்படும்போது மம்முட்டியே சொந்தக் குரலில் தமிழில் பேசியுள்ளார். இப்படம் 'ஜெயிலர்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

## பிரபல ஜோடி

பிரபு-குஷ்பு ஜோடி இப்போது இல்லை என்ற கவலையைத் தீர்க்க புதிய ஜோடி சேர்ந்தாச்சு. ஜெயராம்-குஷ்பு ஜோடிக்குத்தான் இரசிகர்களின் வரவேற்பு. இந்த ஜோடி நடித்த 'புருஷ லட்சணம்' படத்தின் வெற்றிக்குப் பிறகு 'மனசு ரெண்டும் புதுசு' படத்திலும் இந்த ஜோடி பெரிய வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜாலி-டைம் இலங்கையில் படப்பிடிப்பு

'கஸ்டம்ஸ் டைரி' என்ற ஜெயராம் நடித்த மலையாள படத்தை தயாரித்த நிறுவனம் மகம் மூவிஸ். இந்த நிறுவனம் சார்பில் கண்ணன் முதன் முறையாக தமிழ்படம் ஒன்றை தயாரிக்கிறார். இப்படத்திற்கு 'ஜாலி டைம்' என்று பெயர் வைத்துள்ளார். சினிமாஸ்கோப்பில் தயாராகிறது.

இதில் ஜெயராம் கதாநாயகனாக நடிக்கிறார். இன்னொரு நாயகனாக சுரேஷ் நடிக்கிறார். இருவருக்கும் கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது. இவர்களுடன் கே.ஆர்.விஜயா, சின்னிஜெயந்த், வடிவேல் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

"இக்கதை செண்டிமெண்டுகளோடு ஒரு அர்த்தமுள்ள பொழுதுபோக்கு சித்திரமாக இருக்கும். அதனால்தான் 'ஜாலிடைம்' என்ற பெயர் வைத்தேன்" என இப்படத்தின் டைரக்டர் குறிப்பிட்டார். கதையின் பெரும்பகுதி மலைப்பாங்கான இடம் என்பதால் இலங்கை மற்றும் ஊட்டியில் படமாகிறது.

## சத்யராஜ் பரபரப்பு

சத்யராஜ் நடித்த அமைதிப்படை படத்தினால் அரசியல் பரபரப்பு ஏற்பட்டது. தற்போது சத்யராஜ், ரஞ்சிதா ஜோடி நடித்துவரும் 'தோழர் பாண்டியன்' படத்திலும் அரசியல் சாட்டையடி காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் நடந்த அரசியல் பிரமுகர் ஒருவரது கொலையை மையமாக வைத்தும் சில காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாம்.

## 'சினிவிசிட்'டில் ஒரு தவறு

சென்றவார முரசில் 'செவத்தபொண்ணு' படத்தில் இடம்பெறும் காட்சியொன்று பிரசுரமாகியிருந்தது. சரவணன்-அனுஷா என்பதற்கு பதிலாக, முரளி-அனுஷா என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது.



நெப்போலியன்-சரண்யா
படம்-சீவலப்பேரிபாண்டி

## வேகமாக வளருகிறான்-என் ஆசை மச்சான்

புரட்சிக் கலைஞர் விஜயகாந்தும், இப்ராஹிம் ராவுத்தரும் இணைந்து பல வெற்றிப்படங்களைத் தந்தவர்கள். இப்போது விஜயகாந்துடன் ரேவதி நடிக்கும் இப்ராஹிம் ராவுத்தரின் தமிழன்னை சினி கிரியேஷன்ஸ் 'என் ஆசை மச்சான்' எனும் புதிய படத்தைத் தயாரிக்கிறார்கள்.

பொள்ளாச்சி, கேரளா, ஊட்டி, மூணாறு போன்ற இடங்களில் இப்படத்தின் படப்பிடிப்பு 50 நாட்களாக நடைபெறவிருக்கிறது. முதல் கட்டப்படப்பிடிப்பு மே மாதம் 19ந் தேதி முதல் தொடர்ந்து இடைவிடாது 50 நாட்கள் நடைபெறவிருக்கிறது.

ஆறுச்சாமி என்ற வாக்குத் தவறாத கதாபாத்திரத்தில் விஜயகாந்தும், தாயம்மா, மகமாயி என்ற மாறுபட்ட இரண்டு கதாபாத்திரத்தில் ரேவதியும் நடிக்கிறார்கள். 'வைதேகி காத்திருந்தாள்' படத்திற்குப் பிறகு விஜயகாந்துடன் ரேவதி இணையும் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. விஜயகாந்தின் தம்பியாக முரளி நடிக்கிறார். கல்லூரி மாணவர் முரளியைக் காதலிக்கும் குறும்புக்காரப் பெண்ணாக ரஞ்சிதாவும், ரஞ்சிதாவை மணக்கத் துடிக்கும் முறை மாப்பிள்ளையாக கவுண்டமணியும், ரஞ்சிதாவின் பாட்டியாக காந்திமதியும் நடிக்கிறார்கள்.

பாடலிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் இப்படத்தில்,

'ராசி தான் கைராசிதான்'

என்ற பாடலை ஒரூர் அருகே உள்ள மாட்டுப் பண்ணையில் படமாக்கினார்கள். வளையல்காரனாக வேசமணிந்த விஜயகாந்த்.

'மூணணா முக்காலணா,
முதுகு மேல வச்சால் என்ன?'

என்று பாடியபடியே வில்லன் கலாகான் வீட்டில் துப்பறியும் காட்சியும் படமாக்கப்பட்டது. 2000 மாடுகளிற்கு நடுவே விஜயகாந்த் வில்லனைத் துரத்தியடிக்கும் காட்சி திருச்சூர் மாட்டுச் சந்தையில் படமாக்கப்பட்டது.

இது சகல தரப்பினரையும் கவரும் படமாக அமையும் என்கிறார் இயக்குநர் ஆர். சுந்தர்ராஜன்.

முகப்பில்
பிரசாந்த்-மதுபாலா
படம்-செந்தமிழ் செல்வன்

மேலே-கஸ்மா
படம்-அலேக்மருது

## சினிமா விமர்சனம் — 'ஜெய்ஹிந்த்'

அர்ஜுன் திரைக்கதை அமைத்து இயக்கி தானே நடித்துள்ள படம் 'ஆக்சன்கிங்' என்ற அவரது முத்திரைக்கு மேலும் மெருகூட்டியுள்ள படம்.

ஆங்கிலப் படங்களை அங்கங்கே நினைவூட்டினாலும் அருமையான இயக்கம் விறுவிறுப்புக்கு கை கொடுத்திருக்கிறது.

வில்லன்களில் வேலை இல்லை. தமிழில் எத்தனையோ சிறந்த வில்லன்கள் இருக்க இவர்கள் எதற்கு? சகிக்கவில்லை.

சாருஹாசனா, இந்த பூனையும் பால் குடிக்குமா? என்று கேட்டக்கூடிய பாத்திரத்தில் கொண்டுவந்து கதையில் திருப்பம் ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டலாம். தேசபக்தர் போல் நடிக்கும் தனது தந்தை சாருஹாசனை தேசத்துரோகியாகக் காணும் இடத்தில் ரஞ்சிதாவின் உணர்ச்சி போதாது. ஆனாலும் இரசிகர்களை உணர்ச்சிவசப்பட வைக்குமளவுக்கு ஆடைத்தியாகம் செய்து உருண்டு புரண்டு நடித்திருக்கிறார்.

மனோரமா வழமைபோல் வீரனின் அம்மா. உருக்கம் அவருக்கு கைவந்தகலை. எவ்வளவு அழுவதற்கு என்றே முகத்தை வைத்திருக்கிறார். இப்போதெல்லாம் மனோரமாவைக் கண்டாலே அழுவதற்கு தயாராகிவிடலாம் போல் இருக்கிறது. அப்படியான பாத்திரங்களில்தான் தொடர்ந்து நடிக்கிறார்.

கவுண்டமணி, செந்தில் கூட்டணிக்கு வித்தியாசமான நகைச்சுவைக்காட்சி. சிரிக்க முடிகிறது. மொத்தத்தில் பொழுது போக்கக்கூடிய விறுவிறு ரகம்.

## நட்சத்திர பொறிகள்

### பாண்டிங்'

தற்போதைய தமிழ்பட கதாநாயகர்களில் அதிகபடங்களில் நடித்துவரும் நடிகர் பாண்டியராஜன்தான்.

### ஏன் தூக்கல்?

'சரிகமபதநி' படத்தில் இருந்து கஸ்தூரியை தூக்கிவிட்டு ரோஜாவை வைத்து 'ரிகிகள்' காட்சிகளை எடுத்துவருகிறார் பார்த்திபன் கஸ்தூரியை ஏன் தூக்கினீர்கள் என்று கேட்டால் 'வீரமும், மிடுக்கும், துடிப்பும் கலந்த தோற்றம் இல்லை. அதுதான் ரோஜாவை பிடித்துக்கொண்டேன்' என்கிறார்.

### ரோஜாவைப் போடு!

தெலுங்கு படவுலகில் ரோஜா நடித்த ஐந்துபடங்கள் சூப்பர் ஹிட். அங்குள்ள முன்னணிக் கதாநாயகர்கள் ரோஜாதான் ஜோடியாக வேண்டும் என்று தயாரிப்பாளர்களைத் தூக்க, தயாரிப்பாளர்கள் ரோஜாவைத் தூக்க, ரோஜா சம்பளத்தை உயர்த்தி விட்டார்.

### ராஜாவின் ஆசை!

இயக்குநர் இமயம் என்று பெயரெடுத்த பாரதிராஜா தன்னுடைய படமொன்றில் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தை நடிக்கவைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

### பாலா தயார்

இயக்குநராகும் ஆசையில் பெரிய இயக்குநர்கள் சிலரிடம் பயிற்சி பெற நினைத்திருக்கிறார் எஸ்.பி. பாலசுப்பிரமணியம். பாடகர்-நடிகர்-இசையமைப்பாளர் அடுத்து இயக்குநர் பாலா பாலாதான்.



ராம்கி-கஸ்மா
படம்-அலேக்மருது

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## மூன்றெழுத்து மகிமை

அம்மா மூன்றெழுத்து
அதேபோல் அப்பா மூன்றெழுத்து
அவர்கள் வாழும் வாழ்வு மூன்றெழுத்து
அந்த வாழ்வில் மிளிரும் அன்பு மூன்றெழுத்து
அந்த அன்பின் பயனாய் பிறக்கும் பிள்ளை மூன்றெழுத்து
பிள்ளை கற்கும் கல்வி மூன்றெழுத்து
அதனால் பெறும் அறிவு மூன்றெழுத்து
அறிவினால் பெறும் நன்மை மூன்றெழுத்து
அவற்றினால் பெறும் பதவி மூன்றெழுத்து
பதவியில் பெறும் பொருள் மூன்றெழுத்து
திறமையில் வரும் புகழ் மூன்றெழுத்து

தொகுப்பு: செல்வன். அ.இன்பநாதன், ஒந்தாச்சிமடம் ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட-தத்தரிகிட தித்தோம்."

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## மன உறுத்தல்

சேகர் தனது தந்தை கோபால் என்ன செய்கிறார் என்று உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மேசை டிரோயரைத் திறந்து பார்த்தார். சட்டைப் பையை உதறிப்பார்த்தார். அலமாரிப் பலகைகளைத் தடவிப் பார்த்தார். அவர் தேடியது கிடைக்கவில்லை.

"நான் வைத்திருந்த பத்து ரூபாய்க்கு இறக்கை முளைத்தா பறந்து போகும்?" என அங்கலாய்த்தபடியே, "ஏண்டா சேகர், என்னுடைய சட்டைப் பையில் இருந்து காசு எடுத்தாயா?" என்று சந்தேகத்தோடு கேட்டார்.

"நான் எடுக்கவில்லை," என சேகர் ஒரேயடியாகப் பொய் சொல்லி வைத்தான். உண்மையில் அந்த பத்து ரூபாயைத் திருடியவன் சேகர்தான். இது சேகரின் மனச்சாட்சிக்குத் தெரியும்.

அது அவனைக் குத்தியது. 'பெற்ற அப்பாவிடமே திருடிவிட்டு பொய்வேறு சொல்கிறாயே! திருடியது ஒரு தவறு. பொய் சொன்னது மற்றொரு தவறு', என அவனது உள்மனம் பேசியது. என்றாலும் ஒன்றும் தெரியாதது மாதிரி நன்றாகவே நடித்தான். அப்பாவும், அம்மாவும் சேகரின் வார்த்தையை நம்பினார்கள்.

"கமலா! கையில் இருந்த காசையும் தொலைத்துவிட்டேன். அலுவலகத்திற்குப் போக பஸ்சுக்குக் கூட காசு இல்லை. நான் நடந்தே போகிறேன். எனது சாப்பாட்டைக் கொடு," என்றார் கோபால்.

"உங்களுக்குப் பணத்தைத் தொலைப்பதே வேலையாகப் போய்விட்டது. இந்தாருங்கள் என்னிடம் ஐந்து ரூபாய் இருக்கிறது. போகும்போது பஸ்ஸில் போங்கள். வரும்போது யாரிடமாவது கேட்டு வாங்கி வாருங்கள். நடந்து வரவேண்டாம்." என்று சற்றுக் கடுகடுப்புடனும், சலிப்புடனும் தான் வைத்திருந்த சில்லறைக் காசுகளை எடுத்துக் கணவனிடம் கொடுத்தாள் கமலா.

சேகருக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அன்றைய தினம் அவன் தனது நண்பன் ராமுவுடன் போட்டி போட்டது நினைவுக்கு வரவே, சிரிப்பை அடக்கிக் கொண்டு ஒன்றும் தெரியாதவன் மாதிரி பள்ளிக்குப் புறப்பட்டு விட்டான். அவனை ஏற்றிச் செல்லும் வான் வந்து நிற்கவே அதில் ஏறிக்கொண்டான்.



வான் கொஞ்சந்தூரம் சென்றதும் வானை நிறுத்தச் சொல்லி இறங்கிய சேகர், "நான் என் சிநேகிதனின் காரில் வருகிறேன்," எனப் பொய் சொல்லி அனுப்பி விட்டான். வான் நகர்ந்ததும், எட்ட நின்று கொண்டிருந்த ராமுவிடம் ஓடிப்போய், "ராமு நான் பணம் கேட்டால் என் அப்பா தரமாட்டார் என்று சொன்னாயே! கேட்கிறபோதெல்லாம் என் அப்பா எனக்குத் தருகிறார். உனக்குத் தரமாட்டார் என்றெல்லாம் கேவலமாக பேசினாயே! இதோ பார் இன்று கேட்டதும் பத்து ரூபாய் கொடுத்திருக்கிறார். இப்போது என்ன சொல்கிறாய்?" என்று பெருமையுடன் சொன்னான் சேகர்.

உடனே ராமு," என்னிடமும் பணம் இருக்கிறது. ஸ்கூலுக்கு 'கட்' அடித்து விட்டுப் படம் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

சேகரும் சம்மதிக்கவே இருவரும் படம் பார்க்கச் சென்றார்கள். காலைக் காட்சி என்பதால் சரியாக ஒன்றரை மணிக்கு படம் பார்த்து முடித்துவிட்டு வெளியே வந்தார்கள். பின்னர் பாடசாலையிலிருந்து வீடு திரும்புவது போல வீடு திரும்பினார்கள். வரும்போது நல்ல மழை பிடித்துக்கொண்டது. சற்று நேரம் ஒதுக்குப் புறமாக நின்ற சேகர் மழை விட்ட பின்னர் வீட்டிற்குப் போனான். அவன் வீட்டிற்கு வந்த சிறிது நேரத்தில் மழை திரும்பவும் பெய்யத் தொடங்கியது.

பின்னேரம் அவனுடைய அப்பா அலுவலகத்திலிருந்து மழையில் நனைந்த படியே வந்தார். அவரது உடம்பெல்லாம் தொப்பலாக நனைந்திருந்தது. அம்மா பதறிப்போய் அப்பாவின் தலையைத் துவாயால் துவட்டியபடியே, "இப்படி மழையில் நனைஞ்சிருக்கிறீர்களே! பஸ்ஸில் வரக் கூடாதா?" என்றாள்.

அதற்கு அப்பா, "மாசக் கடைசியானதால் யாரைக் கேட்டாலும் கடன் இல்லை என்று சொல்லி விட்டார்கள். பொடி நடையாக நடந்தே வந்தேன். வழியில் நல்ல மழை பிடித்துக்கொண்டுவிட்டது. நல்ல குளிர் வேறு. அதனால் நடுங்கியபடி வந்துவிட்டேன்," என்றார்.

சேகருக்கு சுருக்கென்று மனம் குத்தினாலும் பேசாமல் இருந்துவிட்டான்.

மறுநாள் அப்பா கோபாலுக்கு குளிர் காய்ச்சல் வந்துவிட்டது. அம்மா பதறியபடி வைத்தியரிடம் அழைத்துப் போனாள்.

"உங்களுக்கு ஏற்கனவே நெஞ்சு சளி இருந்தது. போதாததற்கு மழையில் வேறு நனைந்து வந்தீர்கள். அதனால் தான் காய்ச்சல் இருக்கிறது. நேற்று நீங்கள் நனைந்தது உங்கள் தவறுதான். இப்போது மருந்து வாங்க வேறு பணம் தேடியாக வேண்டும். நான் இப்போது என்ன செய்வேன்?" என வருத்தப்பட்டாள் அம்மா.

சேகரின் உள்ளத்தில் மின்னல் பாய்ந்த மாதிரி இருந்தது. தெருவில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு ஓடினான். கை கூப்பி தோப்புக்கரணம் போட்டபடியே, "நான் பணம் திருடியதால்தான் அப்பாவுக்கு உடம்புக்கு சுகமில்லாமல் வந்தது. இனிமேல் திருடமாட்டேன். அப்பாவைக் காப்பாற்று!" என்று வேண்டிக்கொண்டான்.

பின்னர் அவன் வீடு திரும்பினான். அங்கே அவனது அம்மாவின் தம்பி வந்து விஷயத்தைக் கேள்விப்பட்டு மருந்து வாங்குவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. உயரத்தில் பிறந்து, ஊரெல்லாம் சுற்றி உடைபட்டுச் சாவான். அவன் யார்?
2. வாயும் காதும் கேட்டுக்கொண்டு வாழ்க்கை நடாத்தும். அது என்ன?
3. கூடிவந்து கும்மாளம் போட்டு அழும். அது என்ன?
4. வெள்ளை ராணி துள்ளிக் குதிப்பாள். கையில் எடுத்தால் கரைந்து போவாள். அது என்ன?
5. வெள்ளி மலரைச் சுற்றி தங்க வண்டு. அது என்ன?

**விடைகள்**

1. தேங்காய் 2. தொலைபேசி 3. மேகம் 4. பனிக்கட்டி 5. சந்திரன்

செல்வி.எம்.எப்.சிபானி
மட்/அந்-நூர் மகாவித்தியாலயம்
வாழைச்சேனை.

1. முள்ளற்ற பற்றைக்குள் எலும்பற்ற மாடுகள். அது என்ன?
2. எழுத உதவும் பேனா அல்ல. படிக்க உதவும். புத்தகமும் அல்ல. அது என்ன?
3. எல்லையில்லாத வலையிலே எண்ண முடியாத மீன்கள். அது என்ன?
4. அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள். அது என்ன?
5. பகல் பகலாய் உழைக்கும் ஊதியம் வாங்கா உழைப்பாளி. அது என்ன?

**விடைகள்**

1. பேன்கள் 2. கரும்பலகை 3. நட்சத்திரங்கள் 4. பனங்காய் 5. சூரியன்

ப.சாரங்கன்-அக்கரைப்பற்று.

1. ஒரு முடி ராஜா. இரு முடி ராணி. காசிக்குப் போனாலும் எண்ண மாட்டார்கள். அவர் யார்?
2. ஒரு தட்டுக்குள் ஆயிரம் பாம்பு. அது என்ன?

1. தலைமுடி 2. இடியப்பம்

அன்பரசி தவபாலன்-திருகோணமலை.

## கணிதத்தில் ஒரு கேள்வி!

2ஆல் வகுக்கும்போது 1ஐயும்
3ஆல் வகுக்கும்போது 2ஐயும்
4ஆல் வகுக்கும்போது 3ஐயும்
5ஆல் வகுக்கும்போது 4ஐயும்
6ஆல் வகுக்கும்போது 5ஐயும்
7ஆல் வகுக்கும்போது 6ஐயும்
8ஆல் வகுக்கும்போது 7ஐயும்
9ஆல் வகுக்கும்போது 8ஐயும்
மீதியாகத் தரக்கூடிய மிகச் சிறியஎண் எது?
விடை: 2519

அதாவது 2,3,4,5,6,7,8,9 என்பவற்றின் பொ.ம.சி 2520 ஆகும். மீதி வகுபடும் எண்ணைவிட 1 குறைய வருவதால் 1 கழிபடும்.
2520-1= 2519.

சதாசிவம் ஜெயராஜா
மட்/மகிழ்டித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.

## அறிவோம் மனதில் பதிவோம்




உடலில் நீல வளையங்கள் கொண்ட ஒக்டோபஸ் அவுஸ்திரேலிய கடல் பகுதியில் வாழ்கின்றன. விஷம் உள்ளவை. இவை கடித்தால் பொறுக்க முடியாத வலியும், இரண்டு மணி நேரத்தில் மரணமும் ஏற்படும்.




ஆபிரிக்காவில் காணப்படும் 'செயலாளர் பறவை' (செகரட்டரி பேர்ட்) மிக வேகமாகப் பாம்புகளைக் கொல்லும் திறன் பெற்றது. இந்த பறவையின் தலையில், பழங்கால செயலாளர்கள் வைத்திருக்கும் எழுதுகோல் போன்ற இரு சிறகுகள் இருப்பதால் இந்தப் பறவைக்கு செயலாளர் பறவை என்ற பெயர் ஏற்பட்டது.



இங்கிலாந்தில் ரெயின் ஹில்ஸ் ட்ரையல்ஸ் என்ற இடத்தில் 1829ம் ஆண்டு ஒக்டோபர் 8ம் திகதி நடைபெற்ற ஏவுகணை சோதனையில், அந்த ஏவுகணை மணிக்கு 46.8கிலோ மீற்றர் வேகத்தில்



முதன் முதலில் மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் ஓடிய ரயில் 'சிட்டி ஒவ் டுருரோ'. இங்கிலாந்தில் 1904ம் ஆண்டில் பிளைமவுத்-பிரிஸ்டல் நகரங்களுக்கு இடையே ஓடத்தொடங்கியது.



ஒட்டகத்தின் இறைச்சியை முழுவதுமாகப் பதப்படுத்தி அதனுள் ஆடு, மாடு, கோழி போன்றவற்றின் இறைச்சியைத் திணித்து அதனை அப்படியே நெருப்பில் சுட்டு பக்குவம் செய்வது சவுதி அரேபியாவில் மிகப் பிரபலம். இப்படி ஒரு பெரிய அளவில் முழு இறைச்சி தயார் செயவது உலகிலேயே இங்கு தான் பழக்கத்தில் உள்ளது.

## தலாய் லாமா

- **தலாய் லாமா என்பவர் யார்?**

திபெத் நாட்டின் மதத் தலைவர். அந்நாட்டினரின் மதம் புத்தமதம். தற்போதுள்ள தலாய் லாமா திபெத்தின் அதிபராகவும் இருந்தார்.



- **தலாய் லாமா எப்படித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்?**

ஒரு தலாய் லாமா இறந்ததும் அந்த மதத்தைச் சேர்ந்த மற்ற மதகுருக்கள், அவர் இறந்த நேரத்தில் ஏதேனும் குழந்தை பிறந்துள்ளதா என அறிவார்கள். அந்தக்குழந்தையை சோதிப்பார்கள். அவர்கள் அறிய விரும்பும் அங்க அடையாளங்கள் அந்தக் குழந்தைக்கு இருந்தால் அதனையே அந்த தலாய் லாமாவாக அறிவிப்பார்கள். அந்தக் குழந்தை வளர்ந்து 18வயதாகும் வரை அந்தக் குழந்தையின் பொறுப்புக்களை மற்றக் குருக்கள் கவனிப்பார்கள்.

- **இதுவரை எத்தனை தலாய் லாமாக்கள் இருந்துள்ளனர்?**

இப்போதுள்ள தலாய்லாமா 14வது தலைவர்.

- **இப்போதுள்ள தலாய் லாமா ஏன் திபெத் நாட்டைவிட்டு வந்துவிட்டார்?**

திபெத்தை ஒட்டியுள்ள நாடு சீனா. 1950ம் ஆண்டு சீனா திபெத் நாட்டை ஆக்கிரமித்தது தலைவர் தலாய் லாமா, சுதந்திரமாகச் செயற்பட முடியாதபடி பல தடைகளை விதித்தது. அவரது அதிகாரத்தை குறைத்தது. 1959ம் ஆண்டு சீன ஆதிக்கத்தை எதிர்த்து திபெத் மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் அது வெற்றி பெறவில்லை. அதைத் தொடர்ந்து தலாய் லாமாவும், அவரது சீடர்களும் திபெத்தை விட்டு வந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

- **தலாய் லாமா திபெத் வருவதற்கு சீனா தடை விதித்துள்ளதா?**

அவர் விரும்பினால் திபெத்திற்கு வரலாம், என்று சீனா கூறிவிட்டது. ஆனால் அங்கு செல்ல தலாய் லாமாவிற்கு விருப்பமில்லை. சீனா சமாதானமாக திபெத்திலிருந்து முழுவதாக விலக வேண்டும். பிறகுதான் திபெத் செல்ல முடியும் எனக் கூறி சீனாவை திபெத்திலிருந்து வெளியேற்ற அமைதி வழியில் பாடுபட்டு வருகிறார் தலாய் லாமா. அவரது அமைதி வழியை மெச்சி 1989ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு தலாய் லாமாவிற்கு வழங்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.06.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 45
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 42

**பரிசுக்குரியவர்**

ஏ.நியாஸ்
வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்
வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்**

என்.எம்.றஜீனா
ஹொரவ்பொதானை.

செல்வன்.வடிவேல் சசிதரன்
சரஸ்வதி வித்தியாலயம்
மட்/கிண்ணையடி.

செல்வி.தர்சினி ஜெகசோதி
களு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை
ஹொரணை.

கி.பாக்கியராஜா
மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்
கல்குடா.

செல்வி. என்ரியா பவுல்
சென். மேரி கொன்வன்ட்
திருகோணமலை.

எம்.என்.எம்.இஸ்ஸத் அலி
கு/அல் இர்பான்.மு.ம.வித்தியாலயம்
பொல்கஹவெல.

பாத்திமா றிஸானா ஹமீட்
நீரெல்ல முஸ்லிம் கனிஷ்ட வித்யாலயம்
அக்குறனை.

ம.திரிஸ்கரன்
புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு.

ராஜேந்திரன் இதயநாயகம்
மட்டக்களப்பு.

சு.சைலஜா
அல்-ஹிலால் மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# நீளுமோ? இன்னும் நீளுமோ?



பாசத்தோடு பழம் கொடுக்கிறார் ஒரு நேசர். அந்தப் பழத்தை வாங்கும் எண்ணத்தோடு கழுத்தை உயர்த்தி உதட்டால் பெற்றுக்கொள்கிறது அன்னப்பறவை. இன்னும் எத்தனை உயரத்திற்குத்தான் நீளுமோ இந்த பறவைக் கழுத்து என்று வியப்பு வருகிறதல்லவா நமக்கு? ஜெர்மனியில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் எடுக்கப்பட்ட அரிய காட்சி.

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

**மனேஜர்:** ஏம்பா! எப்ப பார்த்தாலும் தப்புப் பண்ணிவிட்டு, மன்னிப்புக் கேட்கிறதே உனக்குப் பழக்கமா போச்சா?
**கிளார்க்:** மன்னிக்கணும் சேர்.


•

**ஒருவர்:** என்னங்க இது, உங்க டிபன் பொக்ஸில் புண்ணாக்கு இருக்குது?
**மற்றவர்:** காலையில் என் மனைவியை மாடுன்னு திட்டினேன். அதுக்குப் பழிவாங்கியிருக்கா.

•

**ஒருவர்:** படத்தோட டைரக்டர் இதுக்கு முன்னாடி டாக்டரா வேலை பார்த்தவராம்.
**மற்றவர்:** சரிதான்! அதனாலதான் படம் இந்த அறு அறுத்திருக்குது.

# தேன் கிண்ணம்



### காலம்....

காலத்திற்கு என்னில்
ஏனித்தனை சீற்றம்?
இறந்தகாலத்தின் கேள்விகள்
நிகழ்காலத்தில்
பூஜ்ய நிரம்பல்களானது
எனது எதிர்காலத்திற்கான
சாப வரமாயிற்றோ?
உறவுகள் எனக்குத்
தந்த பெயர்
சிலுவை.
அதனால் தானோ
சோகக் கிரீடம்
பிரியமாய் என்னில்
உட்கார்ந்திருக்கிறது?
வறுமை ஸ்பரிசம்
மனதுடன்
ஆனந்த ஆதிக்கமாய்க்
கரங் கோர்த்து
நடை பயில்கிறது...
மனித உதடுகள்
அரக்கப் பசியில்
என் ஹிருதயத்தை
மென்று பார்க்கின்றன...
மனச் சமாதியில்
ஏமாற்ற மலர்வளையம்
இடைக்கால
நிவாரணியானதோ?
இருந்தும் நான்
சுவாசிக்கின்றேன். எனக்காக
ஓரிதயம் எங்கோ
அக்னி தவமியற்றும் என்கிற
கால எதிர்பார்ப்பில்...!!!

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.

### மழை

இனவாத காற்றால்
மேக இனங்களுக்கிடையிலான
மோதல்.
அமைதியை இழந்த
வான மகளின் கண்ணீர்.

### குடை



மனித நலனுக்காய்
இயற்கையின்
அனர்த்தங்களுக்கு
ஈடு கொடுத்து
ஊனமாகிப்போன
தியாகி!

கலாதாசன்-எடின்பரோ.

### நாளை எம் தேசம்

இடையிடையே
பாதாளம் போன்ற
படுகுழிகள்
சல்லடையாக்கப்பட்ட
சதுப்பு
நிலங்கள்...

✧

மனித
உயிர்களற்ற
நாறிப்போன
பிணங்களின்
மயான பூமி...

✧

காட்டு
மிருகங்களின்
ஜனநாயக
ஆட்சி...

✧

ஓராயிரம்
சகாராக்களாக
மாறிப்போன
விளைநிலங்கள்....

✧

ஓ....!
இன்று நடப்பவைகள்
நாளை
நாளையென
தொடர்ந்து
நடக்குமானால்
இவையனைத்தும்
கொண்டது
நாளை
எம் தேசம்!

விவே.வசந்தகுமார்
கோமாரியூர்.



### நினைவுச் சின்னம்

மண்ணில் வந்த நாட்கள்
பாடுது ஒரு சோகராகம்
அதில் யாரிங்கு பாடுவது
தோடியில் ஒரு ராகம்.

எண்ணி வந்த நாட்கள்
இங்கு கண்ணை கலக்குது
அந்த கண்ணீரில் ஒரு
கவிதை மலர்ந்து நிற்குது.

உனக்காக ஒரு ரோஜா
அன்னாளில் மலர்ந்தது

இன்னாளில் மறுரோஜா
மணநாளில் இணைந்தது

ஏற்றி வைத்த தீபமொன்று
எரிய ஏனோ மறுக்குது
இழந்துவிட்ட வாழ்வை இன்று
இணைத்துவிடத் துடிக்குது.

என் வாழ்வின் நினைவுகளும்
உன் நிழலை நினைக்குது
இதய வாசல் கதவுகளும்
உன் வரவை பார்க்குது.

தெ.லோஜனா-கொழும்பு-15.

### மலைத் தமிழனாலே!

தேனீர் பருகுவது இத்தமிழனாலே-காலை
தேகம் சூடாவது இத்தமிழனாலே-நீங்கள்
காசுப் பெட்டிகளை நிரப்புவது இத்தமிழனாலே-கடைசியில்
ஏசித் திரிவதோ இத்தமிழனை(த்)தானே!!

சட்ட(ச்) சபை சென்றதுவும் இத்தமிழனாலே-நீங்கள்
சாப்பிட்டு சந்தோஷம் கொள்வதும் இத்தமிழனாலே-நீங்கள்
தோற்றம் ஏற்றமுற வாழ்வதும் இத்தமிழனாலே-கடைசியில்
'தோட்ட(க்) காட்டா'னென்று திட்டுவதும் இத்தமிழனை(த்) தானே!!

தேயிலையை தேசத்துக்கு ஏற்றுவது இத்தமிழனாலே-நீங்கள்
தென்னிலங்கையை சீர்படுத்துவதும் இத்தமிழனாலே-நீங்கள்
அபிவிருத்தி அடைந்ததும் இத்தமிழனாலே-கடைசியில்
'ஆகா' இவர்களெல்லாம் பேடிகளென்று பேசுவதும் இத்தமிழனைத்தானே!!

காடெல்லாம் நாடானதும் இத்தமிழனாலே-நீங்கள்
கார் பங்களாவென்று வாழ்வதும் இத்தமிழனாலே-இன்னும்
சேறெல்லாம் சோறாக்கியவனும் இத்தமிழன்தானே-நீங்கள்
கூறு(க்)கெட்டு பேசுவதும் இத்தமிழனை(த்)தானே!!

மாடாய் உழைத்தவன் இத்தமிழன்தானே-உங்கள்
மலையெல்லாம் மணியானதும் இத்தமிழனாலே-நீங்கள்
மண்ணென்றதை பொன்னாக்கியவன் இத்தமிழன்தானே-பின்னர்
என்னென்று கேட்காமல் ஏங்க விட்டதும் இத்தமிழனைத்தானே!!

பொகவந்தலாவ-மா.மஹேந்திரன்.

### உயிர் நீ!

வரட்சியால்
வாடிப்போன
என் நெஞ்சில்
வந்து விழுந்த
பனித்துளி நீ!

✧✧

ஸ்நேகத்தோடு
உனை நினைத்து(ப்)
பார்ப்பதால்
மீண்டும் என் வாழ்வு
நந்தவனம்போல!

✧✧

இருளிலும்
உன் உருவம்
எனக்கு மட்டும்
பௌர்ணமி நிலவாக!

✧✧

என் தெருவுகளில்
தினம் உன் வரவை
எதிர்பார்க்கும் போது
கண்களில் மட்டும் ஏனோ
ஈரத்தின் கசிவு!

✧✧

என் வீட்டு முற்றத்தில்
உன் பாத முத்தங்கள்
படும் நேரங்களில்
எனை விட்டுப்போன
வசந்தங்கள்
மீண்டும் வந்து
ஒட்டிக்கொள்ளும்!

✧✧

ஆனால்-

✧✧

உன் இறுதி அஞ்சல்
வந்த அந்த
ஒரு வருட இடைவெளி
மட்டும்-
என் நெஞ்சத்தில்
மருந்திட்டும் மாறாத
காயத் தழும்புகள்!

செல்வி.நில்வா ஸலாம்
தர்கா நகர்!



### கை குலுக்கு

பறப்பதற்கு சிறகுகள் இருந்தால்தானே
பறவை பறக்கும்
சிறகுகள் பகையானால்...?
சிறகுகள் பகையானதால் தானே
இந்தப் பிரளயம்.

பிட்டும் தேங்காய்ப் பூவுமான உறவு
ஒடும் புளியம் பழமுமாக மாறி
கீரியும் பாம்புமாகி விட்டது.

'காட்டு ராஜா'வுக்கும்
'நாட்டு ராஜா'வுக்கும்
கை கலப்பு!
இந்த இரண்டு ராஜாக்களுக்கும்
எப்போவாம் கைகுலுக்கு....?

'புத்தங் சரணம் கச்சாமி'
'ஓம் முருகா'
'அல்லாஹு அக்பர்'
'கர்த்தர் இரட்சிப்பாராக'

பரஸ்பரக் காற்றை
இவர்கள்
சுவாசிக்க மாட்டார்களா?


'ஆயுபோவன்'
'வணக்கம்'
'அஸ்ஸலாமு அலைக்கும்'
'குட் மோர்னிங்'

இவைகள்
கை கலப்புக்காக அல்ல
கை குலுக்கலுக்காகத்தான்

புத்தர்
முருகன்
அல்லாஹ்
இயேசு

ஆறுகளை தடை செய்யாதீர்கள்
காத்திருக்கிறது கடல்
சங்கமம் ஆகுவதற்காக!

அன்புடீன்.



# இந்த வாரம் உங்கள் பலன்

(19.06.94 முதல் 25.06.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன் |
| கர்க்கடகம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய், புதன் |

★ சந்திரன்-துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப சுகம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, மனக்கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் தொல்லை, முயற்சிகளில் தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- | ஆடம்பரச் செலவு, மறைமுக எதிர்ப்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகாயம், தனலாபம். | பி.ப 3 மணி |
| சனி- | புதிய முயற்சி, பொருள் சிறப்பு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி வெற்றி. | பி.ப 2 மணி |
| புதன்- | காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனக்குழப்பம். | காலை 9 மணி |
| வெள்ளி- | தனலாபம், செல்வாக்கு மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- | காரியானுகூலம், பொருள்பேறு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், கௌரவநிலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | துன்பம் மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனச்சஞ்சலம். | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்ப நிலை நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவுமிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- | காரியத்தடை, மனப்பயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனத் தெளிவு, உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், முயற்சி தோல்வி | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | உயர்ந்த எண்ணம், கௌரவம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | எடுத்த காரியம் வெற்றி, பொருள்வரவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் சகாயம், முன்னேற்றம். | காலை 9 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | உறவினர் கலகம், பொருள் இழப்பு. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், இனசன நன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- | பொருள் நட்டம், கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுக நன்மை. | காலை 8 மணி |
| திங்கள- | தெய்வ நம்பிக்கை, பணவரவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணவரவு தடை, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, நிலைப்பிரிவு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | திடீர் பயணம், எண்ணிய கருமம் வெற்றி. | காலை 7 மணி |
| வெள்ளி- | கடன் பயம், கௌரவக் குறைவு. | பி.ப 3 மணி |
| சனி- | செய்தொழில் நட்டம், மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் கலகம், மனப்பயம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | தேகசுகம் பாதிப்பு, நிலையற்ற தன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, தொழில் நிலை பாதிப்பு. | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பொருள் சிறப்பு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | துன்பநிலை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | எதிர்பாரா பொருள்வரவு, குடும்ப நன்மை. | பி.ப 3 மணி |
| சனி- | செலவு மிகுதி, உயர்ந்த நட்பு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் பகை, முயற்சி தோல்வி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பணக்கஷ்டம், கடன்படல். | காலை 9 மணி |
| புதன்- | பொருள் நட்டம், மனப்பயம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முயற்சி வெற்றி. | காலை 8 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, முன்னேற்ற வாழ்வு. | பகல் 12 மணி |
| சனி- | தெளிவற்ற நிலை, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் சகாயம், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | காலை 10 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | உயர்ந்த எண்ணம், முயற்சி வெற்றி. | காலை 8 மணி |
| வெள்ளி- | தனலாபம், புதிய தொழில் வெற்றி. | காலை 7 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, செலவு அதிகம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, துயர் நீங்கும். | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், மனப்பயம். | காலை 9 மணி |
| வியாழன்- | எடுத்த கருமம் வெற்றி, முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | குறைகேட்டல், தேகசுகம் பாதிப்பு. | காலை 10 மணி |
| சனி- | உயர்ந்த வாழ்க்கை, கௌரவத் தன்மை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | செய்தொழில் லாபம், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| புதன்- | திடீர் பயணம், உயர்ந்த வாழ்க்கை. | காலை 6 மணி |
| வியாழன்- | எடுத்த கருமம் வெற்றி, தனலாபம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நட்டம், பண இழப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | மனக்கவலை, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| புதன்- | தனலாபம், ஆடம்பரச் செலவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நோக்கம், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, துயர் நீங்கும். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்



## வாழ்வதற்காகப் போராடும் குறைப்பிரசவக் குழந்தை

ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள், ஒரே சூலில் பல பிள்ளைகள் மற்றும் உரிய பேறு காலத்துக்குமுன் அவசரமாக வந்து பிறக்கும் குழந்தைகள் போன்ற இன்னோரன்ன அபூர்வத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் முரசு வாசகர்களுக்கு மற்றுமோர் அதிசயக் குழந்தையின் கதையினைத் தருகிறோம்.

மத்தியூ கப்பவுனா என்ற பெயர் சூட்டப்பட்டுள்ள இக்குழந்தை கிம் மைக்கின் வயிற்றில் கருவுற்று மூன்றாவது மாதத்தில் இதனை கருக்கலைப்புக்குள்ளாகி விடுமாறு மருத்துவர்கள் கூறினர். இக்குழந்தையின் நச்சுக்கொடி தொடர்பற்று பாதி துண்டிக்கப்பட்டுவிட்டதனால் குழந்தை நீண்டகாலம் தாய் வயிற்றில் உயிருடன் இருக்கப் போவதில்லை என்று கூறினர்.

ஆனால் கருச்சிதைவுக்கு தாய் கிம் மற்றும் தந்தை மைக் கப்பவுனா ஆகிய இருவரும் சம்மதிக்கவில்லை. எப்படியாவது தங்கள் குழந்தையைக் காப்பாற்றித்தரும்படி, மியாமிக்கு அருகிலுள்ள பிளாண்டேஷன் பொது மருத்துவ மனையின் உயிர் மரபாய்வாளரான டாக்டர் ப்றி சாண்ட்லரை வேண்டினர். அவரும் இதனை ஒரு சவாலாக ஏற்று தன் முழுத் திறமையையும் பிரயோகித்து குழந்தையை- குறைப் பிரசவமாக உயிருடன் பிறக்க வைத்தார்.

காலதாமதமானால் குழந்தை கருப்பையிலே இறக்கக்கூடும். இதனால் தாயின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். ஆகவே விரைவாகவே குழந்தையை வெளியே எடுத்து மருத்துவம் பார்க்கத் திட்டமிட்டனர்.

பிறக்கும்போது மத்தியூ 10 அவுன்ஸ் எடை உடையவனாகவிருந்தான். சிலந்தி வலையுள் அகப்பட்ட ஒரு பூச்சியைப்போல்- பல குழாய்கள் உடல் பூராவும் செருகப்பட்ட நிலையில் மத்தியூ காணப்பட்டான்.

பிறந்து இரண்டு மாதங்களின் பின்னரும் எடையில் போதுமான அளவு மாற்றம் தென்படவில்லை. இரண்டு இறாத்தல் மட்டுமே எடை அதிகரித்திருந்தது. அவனுடைய உடல் நிலை தேறி வருவதாலும் கொடுக்கப்படும் சிகிச்சை முறைகளுக்கு மத்தியூவின் உடல் போதுமான ஒத்துழைப்புத் தருவதனாலும் அபாயகரமான கட்டம் தாண்டிவிட்டது என்று மருத்துவர்கள் அறிவித்து விட்டனர். இதனால் பெற்றார் கிம் மற்றும் மைக் ஆகிய இருவரும் குதூகலிக்கின்றனர்.

மத்தியூ தன் பெற்றாரின் கைகளுக்குச் செல்வதற்கு இன்னும் இரண்டு மாதங்களாகலாம். அவர்கள் தங்கள் மகனை மருத்துவமனையின் விசேட பிரிவில், கண்ணாடிக் கதவுகளுக்கு அப்பால் நின்றே தினமும் பார்த்து வருகின்றனர்.

இவர்கள் தங்கள் குரல்களையாவது மகன் கேட்க வேண்டும் என்பதற்காக குழந்தைகளுக்கான கதைகள், பாடல்கள் ஆகியவற்றை ஒலிநாடாவில் பதிந்து மருத்துவத் தாதிமாரிடம் கொடுத்து அவற்றை குழந்தை மத்தியூ கேட்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

"எனது மகன் மத்தியூ என்றாவது ஒருநாள் ஒலிம்பிக் சைக்கிள் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றெடுப்பான்" என்று சைக்கிளோட்டப் பிரியரான மைக் கப்பவுனா கூறுகிறார்.

## எறும்பு உண்டால் அறிவு வளரும்?!

சில வகை எறும்புகளை உண்டு வந்தால் மூளை விருத்தியடைவதுடன் பேராற்றலும் அறிவும் வளரும். ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியான டாக்டர் ஹான்ஸ் டெற்மர் இவ்வாறு கூறுகிறார்.

"எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும் எறும்புகளிடம் மனித மூளைக்கு வலுவூட்டி, சிந்தனா சக்தியைத் தூண்டி, அறிவாற்றலை மேம்படுத்தக்கூடிய அபூர்வமான சுரப்பி ஒன்று காணப்படுகிறது. இதனை இரசாயன முறையில் பகுத்துப் பிரித்து எடுக்கவோ, செயற்கை முறையில் உற்பத்தி செய்யவோ முடியாதிருக்கிறது. ஆகவே எறும்பை அப்படியே தின்று வந்தால் அந்த சுரப்பி மனித மூளைக்கு வேண்டிய ஆற்றலை தரும்" என்று டாக்டர் ஹான்ஸ் கூறுகிறார்,

இக்கூற்று இன்னும் ஆய்வு நிலையில் இருப்பதனால் பூரணமான முடிவு எட்டப்படும்வரை எறும்புகளை உடனடியாக உண்ணவேண்டாம் என்று டாக்டர் ஹான்ஸ் எச்சரிக்கிறார்.




## உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் உள்ளங்கை ரேகைகளில் தெரியும்!

உங்கள் மகன் எதிர்காலத்தில் நாடாளும் நாயகனாவானா-அல்லது நடுக்கடலில் புயலில் சிக்கிய படகுபோல கஷ்டங்களை எதிர்நோக்குவானா என்பதை அவனுடைய பிஞ்சுக் கையே படம் பிடித்துக்காட்டிவிடும். இதனை இலண்டனைச் சேர்ந்த பிரபல சோதிடரான பெற்றீனா லக்சோன், விளக்குகிறார். 12 வருடங்களுக்கு முன்னர் இளவரசர் சாள்ஸ்-டயனா தம்பதியின் புதல்வர் இளவரசர் வில்லியத்தின் கைரேகைகளை வைத்து பெற்றீனா கூறிய சோதிடம் நூற்றுக்கு நூறுவீதம் உண்மையாக நடந்திருக்கிறது என்று இளவரசி டயனா ஒப்புக் கொண்டுள்ளாராம்.

நம் நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தைகள் பிறந்ததும், பிறந்தகால- நேரக் குறிப்புகளை வைத்தே அக்குழந்தையின் எதிர்காலம் பற்றிக் கணித்துக் கூறுவார்கள். சிறுவர்களின் கைரேகைகளைப் பார்த்து ஆரூடம் கூறுவது அவ்வளவுதூரம் நடைமுறையிலில்லை. ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்த பின்னர்தான் கைரேகை பார்ப்பது வழக்கம். கைரேகைகள் வேகமாக மாற்றமடைவதனால் சிறுவர்களின் ரேகைகளை வைத்து எதிர்காலத்தை கூறமுடியாது என்று கூறுவார்கள். ஆனால் மேலை நாடுகளில் சின்னஞ் சிறுசுகளின் கைரேகைகளைக் கொண்டே ஆரூடம் கூறுகிறார்கள்.

பெற்றீனா லக்சோன் சிறுவர்களுடைய- குறிப்பாக ஆண் குழந்தைகளின் ரேகை அமைப்பினை வைத்து அவற்றின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று படத்தோடு விளக்கம் தந்துள்ளார். அவர் தந்துள்ள படங்கள் ஆண் குழந்தைகளின் கை அடையாளமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



**படம் 1:** உள்ளங் கையின் ஒரு பகுதியில் காணப்படும் சிறு ரேகைகள், இச்சிறுவன் வளர்ந்தால் அதிக பயணங்கள் செய்வான் என்பதைக் காட்டுகின்றன. பலப்பல நாடுகளை அடிக்கடி சுற்றி வருவான். முன் விரல்கள் இரண்டும் நீளமாக இருப்பதனால் பள்ளிப் படிப்பில் படுசுட்டியாக இருப்பான். பொது மேடைகளில் பலரையும் கவர்ந்திழுக்கும் வல்லமையுள்ள பேச்சாளனாகவும் இருப்பான். போர் வெறி கொண்ட முரட்டு சுபாவம் உள்ளவர்களுடைய விரல்களும் இதே அளவுடையனவாகவே இருக்கும்.



**படம் 2:** நடு ரேகையின் கீழ்ப்புறம் காணப்படும் பிளவு. இச்சிறுவன் வருங்காலத்தில் சிறந்த கற்பனா சக்தியுடையவனாகவும் ஓவிய விற்பந்நனாகத் திகழுவான் என்பதைக் காட்டுகிறது. கீழ்நோக்கிச் சரிந்துள்ள ரேகை இவன் எவருடைய தயவுமின்றி தானாகவே முன்னேறுவான் என்பதைத் தெரிவிக்கிறது. மேலேயுள்ள இரு ரேகைகளுக்குமிடையிலுள்ள பரந்த இடைவெளி இவன் ஒரு சுதந்திரநாட்டம் கொண்டவனாக விளங்குவான் என்பதை விளக்குகிறது.



**படம் 3:** எந்தச் சிக்கலில் மாட்டினாலும் தன் வாக்குச் சாதுரியத்தினால் மீண்டு விடுவான் என்பதைக் காட்டுவதாக முன் விரலின் நீளம் அமைகிறது. ஒன்றுக்கொன்று குறுக்காக- சமமான இடைவெளிகளுடன் இரு ரேகைகள் காணப்படுவதால் இவன் தனிமரம் என்பதைக் காட்டுகின்றன. கையின் அமைப்புப்படி பார்த்தால் இவன் வர்த்தகத் துறையில் சிறந்து விளங்குவான் என்று தெரிகிறது.



**படம் 4:** மேலேயுள்ள ரேகை குறுகியதாக இருப்பதனால் இவன் கல்வியில் சிறந்து விளங்கப் போவதில்லை. இருப்பினும் விரல்கள் அனைத்தும் ஒரே அளவினதாக அமைவதால் வாழ்க்கையில் நல்ல செல்வ நிலையினை அடைய முடியும். கல்வி இல்லாவிட்டாலும் இக்கையுடையவன் முன்னேற்றமடைவான் என்பதனால் இவன் படிப்பில் நாட்டம் செலுத்தவில்லையே என்று பெற்றார் கவலைப்பட வேண்டியதில்லை.




**படம் 5:** மேல் ரேகை நேராகக் குறுக்கறுத்துச் செல்கிறது. இதனால் கல்வியில் அதிக நாட்டம் செலுத்துவான். சின்னிவிரல் ஏனைய விரல்களுடன் ஒட்டாமல் தனித்து நிற்பது இவன் பெரும்பாலும் தனிமையை விரும்புபவன் என்பதைக் காட்டுகிறது. பெரும்பாலும் இவன் சுயநலக்காரனாகவே வளர்வான். ஆயுள் ரேகை பெருவிரலை அண்மித்துச் செல்வதால் இவன் எப்போதும் தன்னை முன்னிலைப்படுத்தவே துடிப்பான்.



**படம் 6:** விதிரேகையும் ஆயுள் ரேகையும் ஓரளவு நெருக்கமாக இருப்பதனால் இவன் எதிலும் மிகவும் கவனமுள்ளவனாகவே இருப்பான். கைக்கு வெளியே தென்படும் வீக்கம், கலை நாட்டமுள்ளவனாக இருப்பான் என்பதைக் காட்டுகிறது. தலைமைத்துவம் கொண்டவனாக வளருவான். விரல்கள் ஒரே அளவினதாக இருப்பதனால் வாழ்க்கையில் சகல நலன்களையும் இவன் அடைவான்.

இவையாவும் முடிந்த முடிவுகளல்ல. பொதுவான சில கணிப்புக்களது அடிப்படையில் வெளியிடப்படுபவைதான் என்பது நினைவில் இருக்கட்டும்.




## சாகசக் காட்சியில் ஒரு சறுக்கல்

மோட்டார் காரை வேகமாக ஓட்டிச்சென்று மேலே கிளம்பி ஆகாயத்தில் பறந்து கீழே குதிக்க வைத்து காரைச் செலுத்தி பார்ப்போரைத் திகைக்க வைக்கும் சூரரவர். ஆனால் மேற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள கவிகூர்லி போல்டர் விமான நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற காட்சியின்போது அந்தப் பராக்கிரமசாலியான றே பௌமான், சாதனை புடைக்கவில்லை. மாறாக ஒரு காலை உடைத்துக்கொண்டார்.

ஒரே வரிசையில் பக்கம் பக்கமாக 45 கார்களை நிறுத்தி வைத்துவிட்டு, அருகிலுள்ள செங்குத்தான மேடை மீது காரை அதிவேகமாக ஓட்டி வந்த றே, ஆகாயத்தில் பல அடி உயரம் வரை தாவி அந்த 45 வண்டிகளையும் கடந்து தாண்ட முடியவில்லை. இடையில் அந்த வண்டி செங்குத்தாகக் கீழே இறங்கி மற்றுமொரு காரின் கூரையைப் பிய்த்துக்கொண்டது. இரு வண்டிகளும் சுக்கு நூறாகி தீயும் வேகமாகப் பரவியது. இருப்பினும் அந்த நொறுங்கல் குவியல்களிலிருந்து றே புன்சிரிப்போடு வெளியே வந்தார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த றேயின் 11வயது மகன் ஜோன்சன் தனது தந்தையிடம் ஓடிச்சென்று அணைத்துக்கொண்ட போதுதான் தன்னுடைய ஒரு காலின் எலும்புகள் முறிந்துள்ளன என்பதனை றே உணர்ந்தார்.

றே இந்தப் பயங்கர விபத்தில் தப்பிப் பிழைத்தது ஒரு பெரும் அதிசயம் என்றே கூறப்படுகிறது.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

"ஆசையை நெஞ்சினில் தேக்கிவைத்தேன்-அதில்
ஆயிரம் கற்பனை ஆக்கிவைத்தேன்.
பாசத்தில் நானென்ன பாக்கி வைத்தேன்-எந்தப்
பாவத்திற்கோ என்னை நீக்கி வைத்தாய்?"
-கவியரசு கண்ணதாசன்-

'தொடர்கதைக்கு முடிவு எங்கே? திருப்பங்கள் முடிய முற்றுப்புள்ளி போட்டே ஆகவேண்டும். போடலாமே விரைவில்."

நிர்மலாவின் டயறியில் இருந்த வரிகள் மீது புதிராய் பார்த்தபடி டி.ஐ.ஜியின் விழிகள் நிலைத்து நின்றன.

எது தொடர்கதை? கொலைகளைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறாளோ?

நிர்மலாவுக்கும் கொலைகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?

ஒரு வேளை நிர்மலாவே... சே.சே.... அப்படி இருக்காது.

நிர்மலா அலட்சியமான குணப் பெண். இத்தனை சுத்தமாக, தடயம் இல்லாமல் கவனமாக அவளால் தொடர் கொலைகள் செய்ய முடியாது!

செய்ய முடியாது என்பது சரி. ஆனால் கொலைகளுக்கும் நிர்மலாவுக்கும் வெளியே தெரியாத இறுக்கமான தொடர்பு ஏன் இருக்க முடியாது?

விசாரிக்க வேண்டும். நிர்மலாவை விசாரிக்....வேண்டாம். விழித்துக் கொள்ளுவாள். கண்காணிக்க வேண்டும். அவள் நிழலையும் கவனிக்கவேண்டும்.

தொடர்ந்து டயறியின் பக்கங்களை விரல்கள் தொட்டு விலக்க, சில பக்கங்களில் எதுவுமே எழுதப்படாமல் டயறி எழுதுவதிலும் அவள் அலட்சியம் சொல்லிக்கொண்டிருந்தன. மேலும் புரட்ட, சிவப்பு மையினால் எழுதப்பட்ட வரிகள் விழிகளில் உறுத்த, வரிகளை விழிகளால் வருடினார்.

**ஜனவரி–16**

*நன்றாகப் பாடுகிறான். பாடுவதை கேட்பதை விடவும் அவனைப் பார்த்துக் கொண்டே இருப்பது இன்னும் சுவையாக.... அடிக்கடி என்னையே பார்த்துக்கொண்டான். நானும் பார்த்தேன். சிரிக்கவில்லை. இன்று வேண்டாம். நாளை சிரிக்கவேண்டும்.*

**ஜனவரி–17**

*சிரித்தான். நானும் மெல்லச் சிரித்தேன். அட...என்ன உற்சாகம். அவன் முகத்தில் ஆயிரம் வோல்ட் மின்சார வெளிச்சம். அவன் என்ன என்னை லவ் பண்ணுகிறானா? கெட்டிக்கார மடையன்.*

## தருவது — ரசிகன்

**ஜனவரி–18**

*ஜவாஹர் இன்று கொண்டுவந்து தந்தான். அவனே இடது தோளின் கீழே போட்டுவிட்டான். என் கால்கள் தரையில் இருந்து எழுந்து உயர்ந்து எங்கோ என்னை தூக்கிச் செல்வதைப்போல... ஜவாஹர் சிரிப்பது போல இருந்தது. எங்கெல்லாமோ தொட்டான். விஷமக்காரன்.*

அடுத்த பக்கம் எதுவும் எழுதப்படாமல் இருந்தது.

பாடியவன் யார்? ஜவாஹர் யார்? தொடர்புகள் அதிகம் என்று தெரிகிறது. தவறுகள் ஏற்பட நிறைய சந்தர்ப்பம் இருக்கிறது.

போதையும் நாடியிருக்கிறாள். ஜனவரி 19ல் ஒருவரி எழுதப்பட்டு முடிக்கப்படாமல் இருந்தது.

**ஜனவரி–19**

*"இன்று அப்பாவிடமிருந்து எதிர்பாராத..."*

ஏன் நிறுத்திவிட்டாள். இதுவும் அலட்சியத்தில் செய்யப்பட்டதுதானா?

**ஜனவரி–20**

*இன்று என்னோடு பேசுவதற்காகவே அவன் அவசரமாக பாடிமுடித்தது போல் தெரிந்தது. அருகே வந்தமர்ந்தான். வினோ என்று அறிமுகம் செய்தான். 'நான் நிர்மலா' கைநீட்ட பற்றிக்குலுக்கிக்கொண்டு என் கண்களுக்குள் பார்த்தான். இவன் ஜவாஹர் ரகமல்ல. ஜவா என் கழுத்துக்கு கீழேதான் முறைப்பான். இவன் கண்களுக்குள் பார்க்கிறான். நானும் பார்க்க அவன் கொஞ்சம் வெட்கப்பட்டான். அனுபவம் அதிகமில்லை என்று தெரிகிறது. அனுபவமுள்ளவன் வெட்கப்பட மாட்டான். தொடலாமா என்று நோட்டம்தான் பார்ப்பான். 'வினோ' இனிய பெயர். ஆளும் அப்படித்தானா என்று அறிய ஆவல்.*

டி.ஐ.ஜி.டென்சில் உதட்டுக்குள் சிரித்துக் கொண்டார். யாரும் வாசிக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையில் அந்தரங்கம் கொட்டியிருக்கிறாள்.

வெளியே ஆம்புலன்ஸ் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

டயறியை எடுத்துச் செல்வதா வேண்டாமா என்று யோசித்தார்.

எடுத்துச் சென்றால் உஷாராகிவிடுவாள். எடுத்துச் செல்லாவிட்டால் முக்கிய தடயம் ஒன்று தவறிப்போய்விடும்.

என்ன செய்யலாம்? தனக்குள் கேட்டுக் கொண்டார். விரைவாக பக்கங்களை தட்டி மேலோட்டமாக நோட்டமிட,

**பெப்ரவரி–12**

*அப்பாவோடு ஒரு அழகான பெண் காரில்! அப்பாவோடு சிரித்துப் பேசிக்கொண்டு... அப்பா என்னைப் பார்க்கவில்லை. சம்திங் ரோங். அப்பா சரியாக இல்லை. என்றாலும் அவள் அழகுதான். அப்பா மயங்கியதில் சின்னதாய் ஒரு நியாயம் இருக்கிறது. அம்மாவுக்கு தெரிந்தால் என்ன செய்வாள். துள்ளுவாள். கத்துவாள். கம்பராமாயணத்தில் வரும் கைகேயிமாதிரி கூந்தலை விரித்து விழுந்து புரண்டு புலம்பி... வேண்டாம். நான் அம்மாவுக்கு சொல்லப் போவதில்லை.*

டி.ஐ.ஜி.டென்சில் படித்துவிட்டு யோசனையாய் நிமிர, கொன்ஸ்டபிள் வந்து,

"சேர் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. ஏரியா இன்ஸ்பெக்டரும் வந்து, எல்லோரும் உங்கள் உத்தரவுக்காக வெளியே நிற்கிறார்கள் சேர்."

"ஐ.ஸீ. நிற்கச் சொல். இதோ வந்துவிடுகிறேன்."

டி.ஐ.ஜி.யோசித்தார். டயறியில் பெரிய சரித்திரமே இருக்கும் போல் இருக்கிறது. பல கேள்விகளுக்கு விடை கிடைக்கக்கூடும்.

இதை இங்கேயே விட்டுச் செல்வது புத்தியல்ல. தீர்மானித்து டயறியை பத்திரப்படுத்த முயன்ற நொடியில்,

டயறிக்குள் இருந்து வந்து கீழே விழுந்தது ஒரு புகைப்படம்.

குனிந்து புகைப்படம் கரத்தில் எடுத்து விழிகள் செலுத்த அதிர்ச்சி வாங்கியது டென்சிலின் மூளை.

■

வினோ கார் செலுத்தும் லாவகம் இரசித்தபடியே, அவன் அருகே இருந்த காயத்திரி,

"ரைவிங் லைசன்ஸ் வைத்திருக்கிறாயா வினோ?"

என்று கேட்டாள். ஏன் கேட்கிறாள் என்று புரிமாயமல் திரும்பி அவள் முகம் பார்த்துவிட்டு,

"இருக்கிறது! ஏன் கேட்கிறாய்?"

"கார் ஓடுவதற்கு லைசன்ஸ் வாங்கிவிட்டாய். நம் காதல் தொடர்வதற்கு மட்டும் லைசன்ஸ் தர மறுக்கிறாய்?"

"சுற்றி-சுற்றி ஒரே இடத்திலேயே நின்றுகொண்டிருக்கிறாய் காயத்திரி."

"விரும்பிய இடத்தில்தானே மனம் சுற்றிவரும். அது சரி வினோ நீ ஏன் பொய் சொல்லி விலகி ஓட நினைக்கிறாய்? ஒரு அழகான, அம்சமான பெண் அருகில் இருக்கும்போது என்ன செய்யவேண்டும், என்றுகூட தெரியவில்லை உனக்கு."

காயத்திரி தன் தலையில் வலது கரத்தால் இரண்டு தடவை தட்டிக்கொண்டாள். தட்டியபடியே கேலி கலந்த சிரிப்போடு வினோவை திரும்பிப்பார்த்தாள்.

காயத்திரி சொன்னதை காதில் வாங்காதவன் போல வினோ தெருவில் கவனம் கொண்டவனாக காரைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

பின்னால் வந்து 'ஹோர்ன்' அடித்து வழி கேட்ட காருக்கு ஒதுங்கி இடம்கொடுத்து மிதமான வேகத்தில் செல்ல,

"மிதமான வேகம்தான் உனக்குப் பிரியமா வினோ? அதிகம் வேகமும் கூடாது, அதிக தாமதமும் கூடாது. எதிலும்தான். காதல் உட்பட."

சொல்லிச் சிரித்தாள். திரும்பி எரித்து விடுவது போல அவளைப் பார்த்துவிட்டு வேகம் சற்றுக் கூட்டினான்.

"பரவாயில்லையே?"

"என்ன?"

"என் கருத்துக்கும் காது கொடுக்கிறாயே நீ! மனதில் உள்ளதை மட்டும் வெளியே சொல்ல மறுக்கிறாய்."

வினோ எதுவும் பேசவில்லை. மெல்ல தன் கரம் நீட்டி அவன் தொடையில் கிள்ளினாள்.

"வலிக்கிறதா வினோ?"

கையை எடுக்காமல் கேட்டாள். கூச்சமாக இருந்தது வினோவுக்கு. காலை மெல்ல அசைத்தான்.

"கையை எடு காயத்திரி."

எடுக்கவில்லை. சிரித்தாள். பின் சொன்னாள்,

"சந்தேகம் வருகிறதப்பா."

அவளின் கைதொட்டு விலக்கிக்கொண்டே தெருவைப் பார்த்தபடி கேட்டான்,

"என்ன சந்தேகம்?"

அவள் மீண்டும் சிரித்தாள்.

"வேண்டாம். உனக்கு கோபம் வரும்."

"நியாயமில்லாமல் எனக்கு கோபம் வராது. சொல்லு."

"வேண்டாம். உன் கோபம் தெரியும். சாது மிரண்டால் காடு கொள்ளாது. நீ கோபப்பட்டால் இந்தச் கார் தாங்காது. என்னை வீட்டில்தானே இறக்கிவிடப் போகிறாய்?"

"இங்கேயே இப்போதே இறக்கிவிட்டு விடலாமோ என்று யோசிக்கிறேன்."

"பயப்படுகிறாயா வினோ? கவலைப்படாதே கற்பழிக்கமாட்டேன்."

உதடு பொத்திக்கொண்டு சிரித்துக் குலுங்கினாள்.

திடீரென்று விழித்துக்கொண்டவள் கேட்டாள்,

"எங்கே போகிறாய் வினோ?"

வினோ இப்போது அவளைத் திரும்பிப் பார்த்து, அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்துக்கொண்டு,

"எங்கே போகவேண்டுமோ அங்கே."

சந்தேகமாய் காயத்திரி பார்க்க வினோ முதற் தடவையாக இப்போது சத்தம் போட்டுச் சிரித்தான்.




ஜவாஹர் நிர்மலாவை பார்க்க நிர்மலா பயத்தில் வியர்த்துப்போனாள்.

ராகவன் கொல்லப்பட்டுவிட்டான் என்று நினைத்தாள்.

'ஜவாஹர் ஏன் இங்கு வந்தான்? இவன் ஏன் ராகவனை கொல்லவேண்டும்? பசுபதிக்கும் ஜவாஹருக்கும் என்ன தொடர்பு?' கேள்வி மேல் கேள்வி மனதைக் குடைய கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

பசுபதி ஜவாஹரின் அருகே வந்து, அவன் தோள்மீது கைபோட்டு தன்னோடு அணைத்துக்கொண்டார்.

"ஜவாஹர் நிர்மலா பயந்தே செத்து விடுவாளடா. பாவம். எத்தனைமுறை தொட்டிருக்கிறேன். நீ பிஸ்டலால் தட்டப் போகிறேன் என்கிறாய். என் இதயம் படக் படக் என்று துடிக்கிறதடா."

'பசுபதி கேலி செய்கிறான் என்று தெரிந்தது. வசமாக மாட்டிக்கொண்டேன். சாவது நிச்சயம். ஜவாஹர் துரோகி. எப்படியெல்லாம் நடித்தான் பாவி'.

நினைக்க நினைக்க அழுகையாக வந்தது.

'கேசவன் மீது குறிவைக்கப்பட்டபோதே விழித்திருக்கவேண்டும். பாவம் ராகவன். அவனையும் கொன்றுவிட்டார்கள் பாவிகள்.

'இப்போது என்னையும்...எனக்கு வேண்டும். நானே வலிய வந்து விழுந்த வலை இது. யாரும் காப்பாற்ற முடியாது.'

"என்ன நிம்மி யோசிக்கிறாய்? அனுபவித்து விட்டு அழிக்கிறார்களே என்றுதானே? நிம்மி நீ ஒருபெண். பலவீனமான பெண். ஆனால் என் பல இரகசியங்கள் தெரிந்த பெண். எப்போது ராகவன் மிரட்டலுக்கு நீ பயந்து போனாயோ, எப்போது அவனை இங்கே அழைத்துவர நீ துணிந்தாயோ அப்போதே உன் பலவீனம் பளிச்.பளிச்."

நிர்மலா பசுபதி பேசுவதையே விழியசைக்காமல் கேட்டுக்கொண்டு நின்றாள்.

பசுபதி ஜவாஹரின் சட்டைப் பொக்கற்றில் தானே கைவைத்து 'சிகரட்' பக்கற் எடுத்துக் கொண்டார். பிரித்து ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்திக்கொள்ள ஜவாஹர் லைற்றர் 'கிளிக்' செய்து பற்றவைத்துவிட்டான்.

உள்ளே புகை இழுத்து வெளியே விட்டு, நாவால் உதடுகளை ஈரமாக்கிக்கொண்டார். நிர்மலா அடுத்து அவர் என்ன சொல்லப் போகிறார் என்று பதட்டத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாள்.

"உன் வயதில் எனக்கொரு மகள் இருக்கிறாள். உனக்குத் தெரியும். யமகாதகி. பெரிய ரிப்போட்டராம். என்னையே மோப்பம் பிடித்து விடுவாள். விடமாட்டேன்."

ஆவேசமாய் பேசினார். மீண்டும் ஒரு 'தம்' அடித்துக்கொண்டார்.

"என் காலில் தடுக்கிவிட்டால் அது முள்ளோ, மலரோ எதுவானாலும் நசுக்காமல் விடமாட்டேன். என் மகளேயானாலும் சரி, எனக்கு சுகம்தந்த நீயானாலும் சரி. பொலிசி பொலிசிதான். என்ன ஜவா?"

ஜவாஹர் அதை ஆமோதிப்பது போல் தலையாட்டினான். வாய் திறக்கவில்லை.

சாவது என்று முடிவானபின் ஏன் இவனிடம் பயப்படவேண்டும். நிர்மலா துணிச்சலை வரவழைத்துக்கொண்டாள்.

"இப்போதுதான் புரிகிறது. என் தந்தையின் கொலைக்கும் நீதான் காரணம். என்னிடம் மறைத்து நாடகமாடியிருக்கிறாய்."

பசுபதி மேசையில் கிடந்த ஆஷ்ரேயில் 'சிகரெட்'டை கொடுத்து நசித்துவிட்டு அவள் சொன்னதை மறுத்தார்.

"நோ...உன் தந்தையின் கொலைக்கு நான் காரணமல்ல. அவன் விதைத்ததை அவனே அறுத்தான்."

"அப்படியானால் யார்....யார் என் அப்பாவை....?"

இடையிலே புகுந்து

"தெரியும். சொல்லமாட்டேன்."

இப்போது ஜவாஹர் வாய் திறந்தான்.

"அவள்தான் சாகப் போகிறாளே. சாவதற்கு முன் அதையும் அறியவைத்து சாகவைக்கலாமே."

பசுபதி இப்போது முன்புபோல், பாறங்கல் உருள்வதுபோல சிரித்தார்.

"அதில் ஒரு பிரச்சனை இருக்கிறது ஜவாஹர்."

"என்ன பிரச்சனை?"

"அவள்தானே சாகப் போகிறாள் ஆனால் நீ..."

கேட்டுவிட்டு மறுபடியும் சிரித்தார். ஜவாஹர் எதிர்பார்க்கவில்லை. முகத்துக்கு நேராகவே நம்பிக்கையீனமாக பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. அவமானமாக இருந்தது.

"என்னையும் நீங்கள் நம்பவில்லையா?"

பசுபதி அவனை அலட்சியமாய் பார்த்தார்.

"சமயத்தில் என்னையே நான் நம்புவதில்லை ஜவாஹர். என் தொழில் அப்படி. என் பாதை அப்படி. இந்தப் புற்றில்தான் இருக்கிறேன் என்று எந்தப் பாம்பாவது சொன்னதுண்டா ஜவா?"

"நன்றி மறந்த பேச்சு."

"நன்றி!"

பசுபதி கேட்டுவிட்டு உரத்துச் சிரித்தார்.

"பெரிய வார்த்தைகள் எல்லாம் பேசாதே ஜவா... நன்றி இருந்திருந்தால் இந்த நிர்மலாவை கொல்ல நான் சம்மதிப்பேனா? சுட்டுவிட தயார் என்று நீதான் பிஸ்டலை தட்டிவிட முடியுமா?"

இப்போது ஜவாஹர் சிரித்தான். பசுபதி போலவே உரத்துச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?"

சினம் குரலில் தெரிய பசுபதி கேட்டார்.

ஜவாஹர் உறுதியான குரலில் பதில் சொன்னான்.

"இது என் சிரிப்பல்ல."

"என்ன விளையாடுகிறாயா? நீதானே சிரித்தாய்?"

"நான்தான். என் உருவில் சிரித்தது யார் தெரியுமா?"

"யார்?"

பசுபதி கேட்க, ஜவாஹர் அவரை நேராகப் பார்த்தபடி சொன்னான்,

"விதி!"

பசுபதிக்கு அவன் சிரிப்பும் பேச்சும் விபரீதமாகப்பட்டது.

"ஜவா உன் பேச்சு நல்லாயில்லை."

"உங்கள் போக்கும் நல்லாய் இல்லை மிஸ்டர் பசுபதி! அதனால் என் பேச்சும் உங்களுக்கு தோதாக இல்லை."

பசுபதி அவனைப் பார்த்து முறைத்தார். ஜவாஹர் அதை அலட்சியம் செய்து,

"மிஸ்டர் பசுபதி உங்களுக்கு... சே... உனக்கு என்ன மரியாதை.. உனக்கு ஒரு விசயம் தெரியுமா? கேசவன் தம்பி ராகவன் சாகவேயில்லை. ஒரு கீறல்கூட இல்லாமல் உயிரோடுதான் இருக்கிறான். பசுபதி... பசுபதி...நீயும் என்னை நம்பவில்லை. நானும் உன்னை ஆரம்பத்தில் இருந்தே நம்பவில்லை."


பசுபதி அதிர்ந்துபோய் நின்றார்.

"இப்போது சொல். நிர்மலாவின் அப்பாவை அதுதான் ஹரிகரனை கொன்றது யார்?"


பசுபதி அவன் பிஸ்டலுக்கு பயந்தார். பதில் சொல்ல வாய் திறந்தார்.

(மறுவாரமும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஜே.யோண் ஜீவா
வயது: 19
முகவரி: லிடோ ஷொப் கொழும்பு வீதி, பாலாவி.
பொழுதுபோக்கு: கதைப் புத்தகம் வாசித்தல், ஓவியம் வரைதல்.



பெயர்: முகமட் அனீஸ்
வயது: 20
முகவரி: 181, காலி வீதி, கொழும்பு-04.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர்களுடன் அரட்டையடித்தல்.




பெயர்: துலாங்கனி ரத்நாயக்க
முகவரி: 150, நில்லம்பை, கலஹா.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள், மற்றும் நண்பர்கள் தொடர்பு.



பெயர்: செல்வி முனம்மில் பிர்தௌஸியா
முகவரி: 546 அ, முதலாம் குறுக்குத்தெரு, சாய்ந்தமருது-16 (கி.மா)
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, கூடைப்பந்து விளையாடுதல், பூந்தோட்டம் வளர்த்தல்.



பெயர்: எம்.ராஜேந்திரன்
முகவரி: NORTH WEST ARMED FORCES HOSPITAL G-MAINTANANCE P.O.BOX-100,TABUK, K.S.A.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், பாட்டு கேட்டல், கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எஸ்.ஏ. நார்தீன்
வயது: 29
முகவரி: AL OMARIYA P.O.BOX-49175,CODE-85152, STATE OF KUWAIT.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ப. புவனேஸ்வரன்
வயது: 23
முகவரி: இல.48 ஏ, நுவரெலியா வீதி, தலவாக்கலை.
பொ.போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் படித்தல்.

பெயர்: ஏ.கே.எம். பைஸல்
வயது: 17
முகவரி: இல.14, ஐந்தாவது லேன், 5ம் குறுக்குத் தெரு,புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: சி. சுரேஷ்
வயது: 19
முகவரி: 107, மோதர வீதி, கொழும்பு-15.
பொ.போ: வானொலி கேட்டல்,பத்திரிகை வாசித்தல், ரீ.வி. பார்த்தல்.

பெயர்: எம். ஜவாஹிர்
வயது: 17
முகவரி: முக்குறகுளம், ஹொரவப்பொத்தானை.
பொ.போ: கதைப்புத்தகம் படித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி

பெயர்: ச. தமிழ்ச்செல்வன்
வயது: 18
முகவரி: இல.2, தொலஸ்வல, நிவித்திகல.
பொ.போ: கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல். கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர்: ஏ.எம். றமீஸ்
வயது: 16
முகவரி: 'நிஸ்மியா மன்ஸில்' 52, மார்க்கட் றோட், காத்தான்குடி-5.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், உதைப்பந்து விளையாடுதல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை



# கடைசி நிமிடக் காதல்

> “இது அழுகையில்ல. மன வேதனையின் வெளிப்பாடுதான். ஒரு நட்ப பிரிய வேண்டியதால் ஏற்படுகிற ஆற்றாமைதான். நான் இப்படியெல்லாம் நடக்கிறேன்'னு என்னோடு நீ கோபப்படுறியா? உன் நட்பில எனக்கு இடமில்லாமப் போச்சா?”

அம்தரவல்ல

நிலாவாசன்

கணனித் திரையில் விபரத் தரவுகளை சரி பார்த்துக்கொண்டிருந்த பாரா ஒரு கனைப்பின் மென்மை உணர்ந்து நிமிர்ந்தான். அம்ரிதா முகம் மலர நின்றிருந்தாள். அவனுக்கு தன் வரவு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருக்கிறதா....என்று அவள் அவனை ஆராய்ந்து தோற்றுப் போகிற நேரத்தில் சொன்னான் பாரா.

“ம்....வெல்கம்....உட்காரலாமே...”

அவள் மீண்டும் அவனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தபடியே சொன்னாள். “உன்னைப் பார்க்கவென்றே வந்திருக்கிறேன்.”

அந்தக் வார்த்தையை சட்டை செய்யாத பாரா “மாத்தறையில் இருந்து எப்போது வந்தாய்?” என்றான் பேச்சை திசை மாற்றும் நோக்கில்.

“உன்னைப் பார்க்கத்தான். உன்னோடு மனம் விட்டுப் பேசணும்னு...” இடறிய அந்த வார்த்தைகளில் கவலை பூசப்பட்டிருந்தது.

“எதற்காக...என்று கேட்க மாட்டாயா பாரா?” அவள்தான் மீண்டும் பேசினாள்.

கண்களில் லேசாக நீர் மின்னியது. அழுகை தொண்டையை அடைக்க அதை அடக்க அவள் மிகவும் சிரமப்பட்டாள்.

“எனக்குத் தெரிகிறது அம்ரித். யாவும் நடப்பது மனிதன் என்னும் பிறவிக்குத்தான். டேக் இட் ஈஸி....”

அந்த வார்த்தைகள் அவளை சமாதானப்படுத்தும் என்று நினைத்தவனுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவள் அழுது ஓயும்வரை மௌனித்தான்.

“மிஸ்டர் பாரா” அவள் விளிப்பை வியப்பாய் நோக்கினான் பாரா. நெருக்கத்தை காட்ட வேண்டும் என்பதற்காக ஒருமையிலேயே பேசிப் பழக்கப்பட்டவள் இப்போது 'மிஸ்டர்' என்று விளித்தது அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

“ஒருமையிலேயே பேச அம்ரித். காதல் முறிந்து போனாலும் நட்பு என்றைக்கும் உடைந்து போகாது.”

அம்ரிதா கவலை மறந்து முகம் மலர்த்தி அவனைப் பார்த்தாள். மழை விட்டும் விடாததுமான நிலையில் எட்டிப் பார்க்கிற சூரியனைப் போல அவளின் அந்தப் புன்னகை அந்த நேரத்துக்கு ரம்மியமாகத்தான் இருந்தது. “பாரா...” என்று பழைய நட்பின் ஸ்பரிசம் உந்த விளித்த அம்ரிதாவின் உதடுகள் வெறுமையாகத் துடித்தன.

“யேஸ் பாரா. எங்க நட்பு என்றைக்குமே முறியாது. முறியக்கூடாது. எல்லோரையும் புரிந்துகொண்டவன் நீ. எல்லோருமே உன் நட்புக்கு அடிமைதான். உன் பெயர் சொல்றதுகூட கௌரவக் குறைவு'ன்னு 'ஸ்டாஃப்ஸ்' நினைக்கிறாங்க. பரவாயில்ல, நீ ரொம்பக் கொடுத்து வெச்சவன். நான்தான்...”

மீண்டும் அந்தச் சூழ்நிலை மறந்து கண்ணீர்விட்ட அம்ரிதா பின்னர், தன் விரல்களால் ஒற்றிக்கொண்டே கேட்டாள். “நீ எதுவும் புதிதாகக் கேள்விப்படவில்லையா?”

“பட்டேன் அம்ரித். ஆனா அதுதான் நல்ல முடிவுன்னு என்னால் சொல்ல முடியாது.”

அம்ரிதா விரக்தியாகப் புன்னகைத்தாள். விரலில் மினுங்கிய மோதிரத்துக்கு முத்திக்கொண்டே சொன்னாள். “சொல்றேன்னு தப்பா நினைக்கக்கூடாது. ஆயிரம் சொத்து, கார், பங்களா இருந்தாலும் நிம்மதி இல்லாமற்போனா என்ன செய்யலாம்? கௌரவம் அந்தஸ்து காதலை மறக்குது. காதலுக்கான மத மாற்றத்தை காலம் ஏற்கத் தயங்குது. அதனால நிம்மதியத் தேடி, நானும் சரி, நீயா இருந்தாலும் சரி, எந்த நாட்டுக்கும் போய் வாழலாம். தப்பில்ல.”

அவள் சொன்ன கருத்துக்களின் அர்த்தத்தை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. “எம் காதலை வாழ வைக்க முடியாதா...?” என்று கேட்கிறாள். என்னோடு பயணம் வைக்க முடியாதா..” என்று கேட்கிறாள். எனவே அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் சொன்னான்.

“இதிலென்ன அதிகம் பேச வேண்டி இருக்கு அம்ரித். ரவையில்லாத துப்பாக்கிய தூக்கிக்கிட்டு போருக்கு போறது தப்பில்லையா..?”

அவள் விழிகள் மீண்டும் பனிக்க சொன்னாள். “அதற்குக் காரணம் நான்தானே பாரா...”

“நோ...” என்றான் அவன் அலறலாக. நான் என் வாழ்க்கைய ஆரம்பிச்சதே ஒரு இலட்சிய நோக்கோடுதான். அது இலக்கணமற்றுப் போனதற்கு யாரைக் குற்றம் சொல்வது...?”

அவள் வரும்போதே ஓடர் பண்ணியிருந்த ஸ்வீட்ஸ்'ஸும் கோகா கோலாவும் அவனுக்கான ஒரு 'பக்கட்' சிகரட்டும் வர வியப்பாய் பார்த்தான் பாரா. அதைப் பக்குவமாக வைத்துவிட்டு மிகுதிப் பணத்தை நீட்டிக் கொண்டிருந்த பியோன் செல்வாவிடம் “அதை நீயே எடுத்துக்கொள்...” என்று சொன்ன அம்ரிதா, அவைகளை அவன் பக்கமாகத் தள்ளினாள்.

“ஏன் நீசாப்பிடவில்லையா...?”

“இன்றைக்கு நீ சாப்பிட நான் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்.”

அந்த வார்த்தைகளில் செறிந்திருந்த 'எலக்டரிக் ஷொக்' அவனை கவலையின், பக்கம் அழைத்துப்போக... அவனோடு கொண்ட உறவு முறிந்துபோனதை பொறுத்துக்கொள்ள முடியாத அவளின் மன நிலையை புலப்படுத்தியது. தட்டில் இருந்து ஒரு 'கேக்' துண்டை எடுக்கும்போதே அவன் விரல்கள் நடுக்கமெடுக்க ..... புதிய ஒரு நட்பின் நெருக்கம்போல உள்ளத்துள் ஒரு பயம் எழுந்தது. கோகா கோலாவை அவள் பக்கமாக தள்ளிவைத்து விட்டுக் கேட்டான்.

“அம்ரித். நான் சொல்றேன்னு தப்பா நினைக்கக்கூடாது. நாம் நல்ல நண்பர்கள் என்னும் நெருக்கத்தைத் தவிர நான் உன் அண்ணனிடம் கை நீட்டி சம்பளம் வாங்குகிற ஒரு கௌரவ உழைப்பாளி. அந்த கௌரவத்த வெச்சு சொல்றேன். இந்த “இன்டர்நஷனல் இன்ஸ்டிட்டியூட்டுக்கு நீயும் ஒரு எஜமானி. அம்ரித்! இத்தனை சொத்தையும் விட்டு நீ அவுஸ்திரேலியா போகத்தான் வேண்டுமா...?”

“வேண்டாம் பாரா, இந்த கௌரவம் அந்தஸ்த்து, சொத்து சுகம் எல்லாமே நம் சுதந்திரத்த வெச்சு விளையாடுது. எங்களப் பகடைக்காய்களா நினைச்சுக்கிட்டு பெரிய பெரிய விளைவுகளையெல்லாம் ஏற்படுத்துது. ஏன்...அதனால எண்ணற்ற பாதகங்களும்கூட... எங்க காதலும் அப்படித்தான்...”

சொல்லி முடித்து உடலைச் சிலிர்த்து ஒருமுறை விரக்தியாகப் புன்னகைத்தாள். முகம் நீல வர்ண வானத்தை நெருடுகிற மழை மேகங்களைப் போல் பொலிவிழந்துவர...

பாரா... அந்தச் சூழ்நிலையை மாற்றும் எண்ணத்தில் முகம் நிறையச் சிரித்தான். அம்ரிதா அவனைப் புதிராகப் பார்த்துச் சொன்னாள்.

“உன்னிடம் உள்ள வீக்னஸ் இதுதான் பாரா. எதையும் சீரியஸ்'ஸாக எடுப்பதில்லை.”

பாரா இம் முறையும் சிரித்தான். அந்தச் சிரிப்பு வேதனையை மறக்க அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சி என்பது அவனுக்கு மட்டும்தான் தெரியும். “எல்லாவற்றையும் சீரியஸ்ஸாக எடுத்திருந்தால் நான் என்றைக்கோ போயிருப்பேன். என் கல்லறைகூட புற்தரையாய் மாறியிருக்கும்.” பாரா புன்னகை மாறாமல் சொன்னான்.

அம்ரிதா அவனைப் பார்த்து வியப்பாகி விழி நிறையச் சிரித்தாள்.

“பிரச்சனைகளை தூக்கியெறிந்து தன் பாட்டுக்குப் பயணம் போகிற உன் அழகான அணுகுமுறைகள்தான் என்னை உனக்கு அருகிலாக்கியது. உன் குணத்தோடுதான் என் வாழ்க்கை சேரணும்னு நினைக்க காரணமாயிட்டுது.”

“அதுவெல்லாம் போன கதைகள் அம்ரித். அதை விடு. நீ அவுஸ்திரேலியா போனால் 'மாத்தறை ப்ரான்ச்' பொறுப்பும் என் தலையில் விழப் போகிறது.”

“பாரா இந்தக் கம்பனிக்கு நீ அடிக்கல் மாதிரி. உன்னால் எதையும் சாதிக்க முடியும்' கிற நம்பிக்க நிர்வாகத்துக்கு இருக்கு. உன் அழகான அணுகுமுறைகள் எந்த வெற்றியையும் விட்டு வைத்ததில்ல.”

பாரா ஒரு பெருமூச்சுக்குப் பிரியாவிடை கொடுத்தான்.

“அப்படியும் சொல்ல முடியவில்லை அம்ரித். காலத்தின் கையில் வெற்றி இருக்க நான் தோல்வியில்தான் நிற்கிறேன்.”

“நம் காதலைச் சொல்கிறாயா..? தோல்வியைத் தழுவி துவண்டு போகிறவர்களில் நிச்சயமாக நீ இருக்கவே கூடாது...” சொன்ன அம்ரிதா அவனைப் பெருமையாகப் பார்த்தாள்.

“சரி வேறு எதையாவது பேசுவோமா...?” பாரா சூழ்நிலையை மாற்ற எண்ணினான்.

“பேச வேண்டும் என்றுதானே வந்திருக்கிறேன். உனக்கு வேறேதும் வேலையில்லை என்றால் வெளியே எங்காவது போய் வரலாம்.”

பாரா அதிர்ந்து பின்னர் அதை மாற்றும் தோரணையில் பேசினான்.

“இன்னும் முப்பது நிமிடத்துக்குத்தான் ஓய்வு. அதற்குப் பிறகு ஆர்பீஜீடு க்லாஸ்' ஸுக்கு லெக்ஷர் பண்ண வேண்டும். பிறகு ஒருமுறை சந்தித்து நிறையக் கதைக்கலாம்.”

“பிறகா...?” கேட்ட அம்ரிதா விரக்தியாகச் சிரித்தாள். அவளது அழகான கன்னங்களில் ஒரு சோகம் அப்பிக்கொண்டிருந்தது.

“இனிமேல் சிலோனை எட்டிப்பார்க்க எண்ணம் எனக்கில்லை. உன் நினைவு வருகிற போதுதான் எனக்கு இந்த நாடு ஞாபகம் வரும். அப்படியே நான் வந்தாலும் உன்னைச் சந்திக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமோ என்னவோ? சந்தித்துக் கொண்டாலும் நம் காதல், உன் நேசம் பற்றியெல்லாம் பேச முடியுமா..?”

அவள் கண்களில் ஊற்றெடுத்த கண்ணீர் ஒரே ஒரு பருக்கையாக தனக்கே ஒரு பாதையமைத்துக்கொண்டு...அவள் போகிற தனிப் பாதையை நிரூபிப்பதைப்போல அவளது மெல்லிய உதட்டளவில் வந்து நின்று...

“ப்ளீஸ் அம்ரித்” என்றான் அவன். “நீங்கள் இப்படி அழுது கொண்டிருந்தால் எதைத்தான் பேசுவது. அடுத்து நான் 'மூட் அவுட்'டானால் எப்படி 'லெக்ஷர்' பண்ணுவது?”

“இது அழுகையில்ல, மன வேதனையின் வெளிப்பாடுதான். ஒரு நட்ப பிரிய வேண்டியதால ஏற்படுகிற ஆற்றாமைதான். நான் இப்படியெல்லாம் நடக்கிறேன்னு என்னோடு நீ கோபப்படுறியா? உன் நட்பில எனக்கு இடமில்லாமப் போச்சா..?”

பாரா விருட்டென விரலைக் கொண்டு போய் அவள் உதடுகளை சிறைப்படுத்த எண்ணி பிறகு பின் வாங்கினான். காதலின் நெருக்கத்திலும் நினைவுகளிலும் இருந்து எத்தனையோ அடிகள் அப்பாற்பட்டு இப்போது வெறும் நட்பு என்னும் உறவு முறையில் நிற்கிறபோது அவளைத் தொடுவதெல்லாம் கண்ணியக் குறைவு என அவன் நினைக்க ஆரம்பித்தான். பிறகு அந்த உணர்வுகள் தன் முகத்தில் தெரியக்கூடாது என்பதால் சமாளித்தவனாகச் சொன்னான்.

“என் நண்பர்கள் யாரா இருந்தாலும் அவர்களை மறந்து விடுகிற அளவு சுயநலம் என்னிடம் எப்போதும் இருந்ததில்ல அம்ரித். ஒரு சிநேகிதியா என்றைக்கும் நீங்க என் மனசில நிற்பீங்க.”

அம்ரிதாவின் கண்களில் லேசான மின்னல் தெரிய புன்னகையோடு சொன்னாள். “இந்த வார்த்தை மட்டும் என்னை வாழ வைக்கும்.”

அவன் முகத்தில் லேசான புன்னகை கோடு போட..... ஏதோ ஒரு உணர்வில் சிகரெட் உருவி உதட்டுக்குக் கொடுக்க முயன்று பிறகு பக்கட்'டில் செருகிய அவனை வியப்போடு பார்த்துக்கேட்டாள் அம்ரிதா,

“ஏன் இப்போது 'ஸ்மோக்' பண்ணுவதில்லையா?”

“சிகரெட் உன் தாரமில்லை
அதைத் தலை முழுகு
பாவமில்லை...” என்றொரு கவி படித்தேன். எனக்கு மனைவியாகப் போகிறவள் அனுப்பி விட்டு “சிகரெட் புகைக்கக்கூடாது” என்று எச்சரித்திருந்தாள்.”

“அம்ரிதாவின் முகத்தில் திடீர் வியப்பும் பின்னர் சம நிலையும் தெரிய... “யார் அந்த அதிஷ்டக்காரி” என புன்னகையோடு கேட்டாள்.

“இல்லை அம்ரித். அந்த அதிஷ்டக்காரன் நான்தான். எம் தொடர்பு பற்றியெல்லாம் அவளிடம் சொல்லிவிட்டேன். ஆனால் அவள் அன்பில் குறைவில்லை.”

“ஃபேரண்ட்ஸ் ஃபிக்ஸ் பண்ணியாச்சா...?”

“தடை சொல்ல மாட்டார்கள் என்னும் நம்பிக்கை இருக்கிறது.”

“படித்த பெண்ணா?”

“அவளை விட நான் கல்வியில் ரொம்பச் சின்னவன்.”

“நேயத்தில் நீ இமயம் பாரா. உன்னை மிஞ்ச யாராலும் முடியாது.”

“சொன்ன அம்ரிதாவின் குரல் ஏனோ நடுங்கியது. சமாளித்துக்கொண்டு சொன்னாள். “உனக்கு அழகான வாழ்க்கை கிடைத்திருக்கிறது.” சொல்லும்போதே அவள் குரல் மேலும் பிசிரடித்தது. அதை வெளிக்காட்டாதது போல் சொன்னாள்.

“திருமணம் முடித்து ஹனிமூனுக்கு அவுஸ்திரேலியா வாருங்கள். நான் எதிர்பார்ப்பேன்.”

“என் மனைவி சம்மதித்தால் வருகிறேன். அது சரி உன் திருமணம் பற்றி எதுவுமே சொல்லவில்லையே ஏன்...?” அவள் மனத்தைச் சூழ்ந்துகொண்ட கவலையைப் புரிந்துகொண்டவன்போல் கேட்டான் பாரா. 'மனைவி' என்ற சொல்லை அவன் பிரயோகித்தபோது அவள் முகத்தில் ஓடிய மாற்றத்தை அவன் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை.

“எனது திருமணம் பற்றி எதுவும் கேட்காதே.” என்று புன்னகையோடு சொன்ன அமிரிதா, பிறகு விரக்திக்குப் போய் சொன்னாள். “உனக்கு எப்போதுமே கெடுதி வராது பாரா.

“நாங்கள்தான் இறைவனின் கோபத்தால் 'கிரியேட்' பண்ணப்பட்டவர்கள்.”

“அதெப்படி முடியும். நான் சத்தியமாக இறைவனுக்கு லஞ்சம் கொடுக்கவில்லை அம்ரித்.”

அம்ரிதா கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சந்தோஷ உணர்வு அப்போதைக்கு அவசியமாகத்தான் இருந்தது. தொடர்ந்து பேசினாள் அம்ரிதா.

“நீ இங்கிருந்து விலகுவதாயின் எனக்கு அறியத்தர வேணும். நீ விலகும் காரணம் நல்லதா இருந்தா நான் சந்தோஷப்படுவேன். உனக்கு ஏற்படுகிற எந்த அனாமதேயத்தையும் எந்தப் பாதகத்தையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.”

பாரா அவளைப் புரிந்துகொண்டது போல் பார்த்தான். பின் 'தாங்க்ஸ்' என்றான் புன்னகையோடு. அந்தப் புன்னகையோடு புன்னகையாய் ஒன்றிப் போனாள் அம்ரிதா. 'என் கணனியை 'யூஸ் பண்ணு' என் காரைப் பயன்படுத்து.” என ஆயிரம் கோரிக்கைகளைக் கட்டளைகளாக்கினாள்.

திடீரென 'எக்ஸ்கியூஸ்' சொல்லி அவர்களை ஊடறுத்த ரிசப்ஷனிஸ்ட் திவ்ய பாரதி, பாரா லெக்ஷர் பண்ணுவதற்கான நேரத்தை ஞாபகப்படுத்திப்போக அம்ரிதா எழுந்துகொண்டாள். சோகம் என்னும் ஆற்றாமையால் அவள் விழிகளும் முகமும் சோர்ந்துபோக...

“மனம் சந்தோஷமாக இருக்கிறது...” என்ற அம்ரிதாவின் கண்கள் பனிக்க ஆரம்பித்தன. “இனி எப்போது சந்திப்போம் என்று தெரியாது இல்லையா?” என்று சொல்லிக்கொண்டே...” உன் ஞாபகார்த்தமாய் வைத்துக்கொள்கிறேன்.” என்று அவன் பொக்கட்டில் இருந்த பேனாவை எடுத்துக் கொண்டவள், கலைந்திருந்த அவன் தலைமயிரையும் 'டை'யையும் சரி செய்துவிட்டு, “அடிக்கடி ஃபோன் பண்ணுவேன். நீ பேசணும்” என்று நேசக் கோரிக்கை விடுத்து சுற்றுமுற்றும் பார்த்தவள் திடீரென அவனை அழுத்தமாய்க் கட்டிணயைத்தாள். 'குட்பை டியர்' என குரலுடைந்து சொன்னவள் ஒரு நோயாளியைப் போல தளர்ந்து நடந்தாள்.

தூரத்தில் நின்று இதையே பார்த்துக் கொண்டிருந்த ரிசப்ஷனிஸ்ட் திவ்ய பாரதி அவர்கள் நட்பில் ஆழம் புரிந்தவள் என்பதனால் தன் கண்களில் நிறைந்த கண்ணீரை விரல்களால் ஒற்றிக்கொள்ள, தடுப்புச் சுவராய் அமைந்திருந்த கண்ணாடித் திரையினூடே அம்ரிதா கண்களை ஒற்றிக்கொண்டு பயணிப்பதை மனம் உடைந்துபோய் பார்த்துக்கொண்டிருந்தான் பாரா. மனத்தைக் காயப்படுத்திய அந்த காதலின் உணர்வுகள் காலத்திடம் காவியமாகிப்போக... எண்ணத்தில் எழுதினான்.

“என் பூமியே, அவசரமாக என்னை அடைக்கலம் எடுத்துக்கொள். நான் நடைப்பிணமாய் நிற்கிறேன்.”

(யாவும் கற்பனையல்ல)

## புத்திசாலி ரௌடி!

**நண்பர்:** இவன்தானே எங்க்ள் ஊரில் வசூல் பண்ணிக்கொண்டு காணாமல் போனவன். இப்போது ஏன் வந்திருக்கிறான்?
**அவர்:** கட்சியொன்றுக்கு எங்கள் பகுதி பொறுப்பாளராக வந்திருக்கிறான்.
**நண்பர்:** எந்தக் கட்சி?
**அவர்:** அவனுக்கே தான் எந்தக் கட்சியில் இருக்கிறேன் என்று பெயர் தெரியாதாம்.
**நண்பர்:** சரிதான். அடிக்கடி கட்சி மாறினால் அப்படித்தான். பெயர் மறந்துபோகும், சுருட்டுவது மட்டும் மறந்துவிடாமல் இருக்கும்.
**அவர்:** தனது பெயரையும் மாற்றி இருக்கிறான்.
**நண்பர்:** அடிக்கடி பெயர் ரிப்பேர் ஆவதால் கட்சி மாறும்போது பெயரையும் மாற்றுவதுதான் வசதி.

## ஹி.ஹி.ஹி

**திருடன் 1:** இன்னைக்கு திருட வேண்டிய வீட்டில அவங்க பொண்ணுக்குக் கல்யாணம் நடக்குது.
**திருடன் 2:** மாப்பிள்ளைத் திருடன் முந்திக் கிட்டானா?

••

**ஒருவன்:** முரளி உனக்கு தூரத்து உறவுங்கிறியே, எப்பிடி?
**அடுத்தவன்:** அவன் எங்கம்மாவுக்கு முதல் பிள்ளை. நான் பத்தாவது பிள்ளை.

••

**சேவகன் 1:** அரசர் திருடன் வேஷம் போட்டு நகர்வலம் போகப் போனார்.
**சேவகன் 2:** அப்புறம்....
**சேவகன் 1:** யாரோ திருடன் அரசர் எண்டு சொல்லி அந்தப்புரத்தில நுழைஞ்சிட்டான்.

## வாசகர் கவனிக்க

முரசுடன் சகல கடிதத் தொடர்புகளுக்கும்-
தினமுரசு வாரமலர்
த.பெ.இ- 1772
கொழும்பு.
என்ற முகவரியினையே குறிப்பிடுங்கள். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்கப்படமாட்டாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




-எம். சுரேஷ்-

**"நீ சொல்லுற காலம் மலையேறிப் போச்சுடா... பொண்ணுங்க கட்டுண்ணா கழுத்தை நீட்டுற காலம் மலையேறிப் போச்சு."**

கல்யாண மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. எங்குமே சிரிப்பொலிகள், ஆரவாரப் பேச்சுக்கள்... வரிசையாய் நிறுத்தப் பட்டிருக்கும் 100க்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகள், சுற்றி இருக்கும் எட்டுக் கிராமத்து மக்களும் அங்கேதான் என்பதைச் சொல்லாமல் சொல்லின. சேதுமாதவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தனது 4வது மகள் முத்துப்பேச்சியையும் கரைசேர்த்துவிட்ட திருப்தி அவருக்கு.

மணவறையில் முகம் சிவக்க, தலை தாழ்த்தி அமர்ந்திருக்கும் முத்துப்பேச்சி, பக்கத்தில் அமர்ந்திருக்கும் ஆணழகனை ஓரக்கண்ணால்கூடப் பார்க்கத் தயங்கும் கிராமத்துப் பெண். ஏதோ ஒருவித பயம் முத்துப்பேச்சிக்கு...

"இந்த மாதிரிப் பயம், எல்லாப் பெண்ணுங்களுக்கும் மணவறையிலவைச்சு வர்றதுதான்டி" ஏற்கனவே திருமணம் முடித்துவிட்ட தோழி சோலையம்மா என்றோ கூறியது ஞாபகத்திற்கு வந்தது. மெல்லத் தலையைத் திருப்பிப் பார்க்கிறாள். எல்லா தோழிகளும் அவள் பின்னால் நிற்பதைக் கண்டதும் முத்துப்பேச்சிக்கு பரம திருப்தி.

இப்போது கல்யாண வீடு நாதஸ்வரக் கச்சேரியால் கலகலத்துப் போகிறது.

"காளிமுத்து! நீ ஏன்டா ஒரு ஓரமா நிக்கிற? இப்பிடி முன்னுக்கு வந்து நில்லு... ஒம் பொண்ணு பாசமலரைக் கூட்டியரல்லியா?"

"அது வந்து சேது...நம்ம இரும்புக் கடையில யாருமில்லையா..... அதனால....."

"ம்...ஒனக்கு ஒரே இரும்புக்கடைப் பைத்தியம், சரி சரி நீயாவது மறக்காம வந்தியே...?" தனது பழைய நண்பன் காளிமுத்துவுடன் உரையாடிக் கொண்டிருந்த சேதுமாதவன் "மாலை...மாலை எங்கே?" ஐயரின் குரல்கேட்டு மீண்டும் பம்பரமாய் சுழல ஆரம்பித்தார்."டேய் முனியா! ஓடிப்போய் ராமாயி அக்காகிட்ட மாலைய வாங்கிட்டு வாடா" பக்கத்தில் இருந்த பையனைத் துரத்த, அவன் நொடிப்பொழுதில் மாலையுடன் வந்து நின்றான்.

"முகூர்த்தத்துக்கு நேரமாச்சு, மந்திரத்தைச் சொல்லுங்கோ... கெட்டிமேளம், கெட்டிமேளம்..." பெரியோர்கள் ஆசிகூற, எத்தனையோ கண்களின் ஆனந்த ஆராதனைக்கு மத்தியில் அந்த கம்பீரமான இளைஞன் முத்துப்பேச்சியின் கழுத்தில் மூன்று முடிச்சுப்போட்டான். அந்தக் கணத்தில் அவளுக்குள் எத்தனையோ மாற்றங்கள்!

திருமணச் சடங்கெல்லாம் இனிதே முடிய, தோழிகளின் கிண்டல் பேச்சு அதிகரிக்கின்றது.

"ஏன்டி முத்துப்பேச்சி! பொழுதும் சாஞ்சிடுச்சு, இன்னும் கொஞ்ச நேரத்தில ஒன்னோட இரகசியங்கள் எல்லாம் மச்சான்கிட்ட அம்போ!" யாரோ ஒரு தோழிகூற வெட்கத்தால் முகத்தைப் பொத்திக்கொள்கிறாள் முத்துப்பேச்சி.

"சீ!...போங்கடி" அவள் மெதுவாய் சொன்னது தான் தாமதம்,

"அடி ஆத்தாடி! பொண்ணுக்கிருக்கிற அவசரத்தைப் பாருங்கடி! இப்பவே எங்களப் போகச் சொல்றாளே?... அம்மா முத்துப் பேச்சி! ஒங்க திருவிளையாடலுக்கென்று வேறயா ஒரு ரூமிருக்கு. இங்கல்லாம் அது முடியாதும்மா." சிரிப்பொலி அந்த அறையை நிரப்புகிறது.

"முத்துப்பேச்சி இங்க வாம்மா...இந்த பால் கிண்ணத்தை எடுத்துட்டு அந்த ரூமுக்குப் போம்மா." ஒரு வயசான பாட்டி கூற, தோழிகள் எல்லோரும் சிரிக்க, முத்துப்பேச்சிக்கு என்னவோ போல் இருந்தது.

"முத்துப்பேச்சி! மாப்பிள்ளை மனம் நோகாதபடி நடந்துக்கோம்மா" பாட்டியின் மேலதிக அறிவுறுத்தலைக் கேட்டு வெட்கத்தில் தயங்கி நின்ற முத்துப்பேச்சியை தோழிகள் இழுத்துச் சென்று, அறைக்குள் தள்ளி கதவைச் சாத்தினர்.

அறைக்குள் ஒரே அமைதி... ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் குத்து விளக்குகள், நன்கு அலங்கரிக்கப் பட்ட கட்டில், அதில் கம்பீரமாய் அமர்ந்திருக்கும் அந்த இளைஞன்.... முத்துப்பேச்சி நின்ற இடத்திலேயே தயங்கி நின்றாள். அவளின் நிலை உணர்ந்த அந்த இளைஞன் மெல்ல எழுந்து வந்து பால் கிண்ணத்தோடு சேர்த்து-அந்த தேன் குடத்தை அணைத்தான். வியர்வையால் மேனி நனைய, ஆடை ஒதுங்கிக்கொண்டது. பட்டு விரல்கள் படாத இடமெங்கும் மேய, ஆயிரம் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் அவளுக்குள் சிறகடித்தன...

முத்துப்பேச்சியின் இதழுக்குள் முத்துக்குளித்த அந்த மன்னவன், அவள் கன்னத்தில் இருக்கும் கரியநிற மச்சத்தை இதமாகத் தடவிக்கொடுத்தபடியே மெல்லிய குரலில் "முத்துப்பேச்சி! ஒனக்கு அழகே இந்த மச்சம்தான்" காதுக்குள் கூற சந்தோஷத்தில் அவள் அவனை மார்போடு இறுக அணைத்தபடியே சிரிக்கிறாள்....

"முத்துப்பேச்சி... முத்துப்பேச்சி... ஏன்டி தூக்கத்தில சிரிக்கிற?" தாயின் குரல்கேட்டுத் திடுக்கிட்டு விழித்த முத்துப்பேச்சியை வெட்கமும், துக்கமும் ஆக்கிரமித்துக் கொண்டன.

"ஓ....ஒண்ணுமில்லையே" சமாளித்தாள்.

அவள் முத்தில், ஒரு பக்கக் கன்னத்தில் சற்றுப் பெரிதாக இடம்பிடித்திருக்கும் கரிய நிற மச்சத்தைக் காரணம் காட்டி, வந்த வரன்களெல்லாம் தட்டிப்போய்க் கொண்டிருந்தன. ஆனாலும் கடைசியாக வந்த மணமகன் முத்துப்பேச்சியை ஆழமாக இரசித்துப் பார்த்த பார்வையும், தட்டில் வைத்திருந்த பலகாரங்களை சுவைத்துச் சாப்பிட்ட பாங்கும் முத்துப்பேச்சியின் மனதில் ஒரு நம்பிக்கையை வளர்த்துவிட்டிருந்தது.

"ஏன்டி முத்துப்பேச்சி! எனக்கு எல்லாம் தெரியும்டி...எதுக்கும் அவசரப்படாம இரு, இன்னும் 3 நாளில மாப்பிள்ளை வீட்டார் முடிவைச் சொல்லி அனுப்புவாங்களாம்" கூறியபடியே அவளை ஒருமுறை பரிதாபமாகப் பார்த்துவிட்டுப் போனாள் முத்துப்பேச்சியின் தாய்.

"என்ன? இன்னும் 3 நாட்கள் பொறுத்திருக்க வேண்டுமா?" மூன்று நாட்கள் என்பது அவளுக்கு மூன்று வருடத்தைவிட பெரிய காலமாகவே தென்பட்டது. 'சீ! எனது தவிப்பை, வேதனையை மனதிற்குள்ளேயே மறைத்துவைத்து நான் தினம்தினம் வளர்த்து வரும் ஆசைகளை அவரிடம்போய் நேரடியாகச் சொல்ல மனசு துடித்தாலும், சூழ்நிலை.....!'

▫▫▫

நாட்கள் நகர, வழமைபோலவே வழமையான பதிலும் வந்தது. "வந்து... பொண்ணு கன்னத்தில இருக்கிற கறுத்த மச்சம் அபசகுனமாட்டம் இருக்கிறதால... வந்து.." முடிவைச் சொல்லவந்தவன் தயங்க,

"சரி சரி போடா" எரிந்து விழுகிறார் சேதுமாதவன். "இவனுங்க கன்னத்தை வைச்சா குடும்பம் நடத்தப்போறானுங்க. பொறுக்கிப் பயலுக, அவ கன்னத்தில இருக்கிற கறுப்பு மச்சத்தைத் தவிர அவளுக்கு என்ன கொற இருக்கு? அம்மன் கோயில் சிலையாட்டம் அழகா இருக்கிற பொண்ணை மச்சத்தைக் காட்டித் தட்டிக்கழிக்கிறானுங்களே?" சேதுமாதவன் மனம் நொந்து போனார்.

"ஏன்டி கருப்பாய்! இனியும் ரோசம் பார்த்து பிரயோசனம் இல்ல. இன்னிக்கே சாமுண்டிக் கிழவிகிட்டப் போயி நம்ம பொண்ணு விசயத்தைக் கொடுக்கப் போறேன்." சொல்லிவிட்டு கிளம்பினார் சேதுமாதவன்.

சாமுண்டிக் கிழவி சேதுமாதவனுக்கு நெருங்கிய சொந்தமாக இருப்பினும் குடும்பப் பகையால் பல வருஷம் பேச்சுவார்த்தை இல்லை. சாமுண்டிக் கிழவியிடம் சொன்னால் எந்தப் பெண்ணுக்கும் கல்யாணம் நடந்தே தீரும். அந்த அளவுக்குத் திறமையாகப் பேசி கல்யாணத்தை முடிப்பதில் சாமுண்டிக் கிழவி கைதேர்ந்தவள்.

"அட! நம்ம சேது! வாப்பா வா...என் வீடுன்னு தெரிஞ்சுகிட்டுத் தான் வந்தியா இல்லாட்டி....?"

"இல்ல ஆத்தா, ஒன்னப் பாக்கத்தான் வந்தேன். ஆத்தா! பழசெல்லாம் மறந்திடு... வந்து...எம் பொண்ணுக்கு நீதான் ஒரு நல்ல வழி பண்ணித்தரணும்."

"யாரு...முத்துப்பேச்சிக்கா? அவளுக்கென்ன கொறடா... கோயில் சிலை மாதிரி தளதளன்னு இருக்கிறவளக் கொத்திக்கிட்டுப் போக பத்துப்பேரு வரமாட்டானுகளா என்ன?"

"அதில்ல ஆத்தா, அவ கன்னத்தில இருக்கிற மச்சம்தான்..."

"அடப்போடா! மச்சம் இருந்தா என்னடா?"

"சோழவயல் கிராமத்துப் பெரிய பணக்காரர். முத்துக்கருப்பனோட மூத்த மகன் பெரியசாமிக்கு ஒரு கால் ஊனமாகி இருந்ததால எவ்வளவோ காலமா கல்யாணமே நடக்கல்ல, அப்புறம் நான்தான் அவனுக்குத் தங்க விக்கிரகம் மாதிரி ஒரு பொண்ணைப் பேசிக் கல்யாணம் பண்ணி வைச்சேன். அப்போ அவனோட தம்பி காத்தவராயன் என்ன சொன்னான் தெரியுமா?

'சாமுண்டிப் பாட்டி! எங்க அண்ணனுக்கு வாழ்வு கொடுத்த நீ என்ன கேட்டாலும் செய்வேன்னு' வாக்குக் கொடுத்தாண்டா... அவனும் ரொம்ப நல்ல பையன், முத்துப்பேச்சியை நாம அவனுக்கே கட்டி வைப்போம். சேது! நீ ஒண்ணும் யோசிக்காத இந்தக் கல்யாணம் ஏறக்குறைய நடந்த மாதிரித்தான். சரிடா நீ போ... மத்த விசயங்கள நான் பார்த்துக்கிறேன்." கிழவியின் பேச்சில் ஒரு அதீத நம்பிக்கை பளிச்சிட்டது.

▫▫▫

நீண்ட நாட்களுக்குப் பிறகு சாமுண்டிக் கிழவியைக் கண்ட சந்தோசத்தில் எழுந்து சென்று வரவேற்றான் காத்தவராயன்.

"அட! சாமுண்டிப் பாட்டி, என்ன இந்தப் பக்கம்?"

"காரியமில்லாம இந்த சாமுண்டிப் பாட்டி வரமாட்டா கண்ணா! அதுசரி ஒனக்குக் கல்யாணம் நடந்திருச்சா?"

"என்ன பாட்டி, ஒனக்குத் தெரியாம நடக்குமா?"

"அப்போ காதல் கத்தரிக்காய்ன்னு ஏதாவது..."

"சீச்சி! அப்பிடி ஒண்ணும் இல்ல பாட்டி."

"அப்பிடின்னா நீ சேதுமாதவனோட பொண்ணு முத்துப்பேச்சியைக் கட்டிக்கணும். இது சாமுண்டிப் பாட்டியோட வேண்டுகோள் இல்லடா, கட்டளை."

"என்ன? முத்துப்பேச்சியையா?"

"ஆமாண்டா. அவளுக்கென்ன கொறை?"

"பாட்டி! அவ கன்னத்தில இருக்கிற மச்சம் அபசகுனமாட்டம்..."

"அந்த மச்சம் அபசகுனம்ன்னு யாரு சொன்னது? உண்மையில அது அதிஷ்ட மச்சம்டா."

"பாட்டி! என்ன இருந்தாலும் மொகத்தில மச்சமிருக்கிற பொண்ணை எனக்குக் கல்யாணம் கட்டிக்க இஷ்டமில்லை."

"ஏன்டா! ஒடம்பு பூரா மச்சமிருக்கிற வன்களையும், கால், கை இல்லாதவன் களையும் நம்ம பொண்ணுங்க கட்டிக்கணும். ஆனா ஒங்களுக்கு ஒரு சின்ன மச்சமிருக்கிற பொண்ணைக் கட்டிக்க முடியாதோ?" சாமுண்டிக்கிழவி இப்போது ஆத்திரமாய் வார்த்தைகளை அள்ளிவீச காத்தவராயனுக்கும் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது.

"ஏய் கிழவி! கை இல்லாட்டிலும், கால் இல்லாட்டிலும் ஆம்பிள ஆம்பிளதான். அதை மறந்துடாத."

"அத மாதிரித்தாண்டா மச்சம் இருந்தாலும் இல்லாட்டிலும் பொம்பிள, பொம்பிளதாண்டா... ஒங்களுக்கொரு ஞாயம்! பொண்ணுங்களுக்கொரு ஞாயம்...!"

"ஏய் கிழவி பேசுறதை யோசிச்சுப் பேசு... கட்டிக்கன்னா கட்டிக்கிறதுதான் பொட்டைக் குட்டிக்கு அழகு."

"இல்லன்னு சொல்லல்லியே! நல்ல வரனாக்கொண்டு வந்து கட்டிக்கன்னா கட்டிக்கிறதுதான் பொட்டைக் குட்டிக்கு அழகு...ஆனா ஒழுங்கா இல்லாதவனையும்...."

"ஏய் ரொம்பப் பேசாத கிழவி! எனக்குன்னு ஒரு கொள்கையிருக்கு... பெண்ணை நல்லாப் பாத்துப் புடிச்சிருந்தா கட்டிக்கலாம். புடிக்காட்டிப் பேச்சையே வெட்டிக்கலாம்."

காத்தவராயன் கிண்டலாகச் சிரிக்க, சாமுண்டிக் கிழவியின் நரம்புகளெல்லாம் கோபத்தில் புடைக்கிறது.

"டேய்! நீ சொல்லுற காலம் மலையேறிப் போச்சுடா...பொண்ணுங்க கட்டுன்னா கழுத்த நீட்டின காலம் மலையேறிப்போச்சு. டேய்! இந்த சாமுண்டிக் கிழவி இப்ப சொல்றேன்டா, இந்த நிமிசத்தில இருந்து எந்த ஆம்பிளப் பசங்களுக்கும் நான் பொண்ணு தேட மாட்டேன்டா...இது..இது சத்தியம்."

விறைப்பாக திரும்பி நடக்கும் சாமுண்டிக் கிழவியின் உருவம் செம்மண் புழுதிக்கூடாக மங்கலாகத் தெரிகிறது. அவள் மனதிற்குள் எதையோ சாதித்துவிட்டதாக ஒரு திருப்தி. எதையோ சாதித்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கை. இப்போது சாமுண்டிக் கிழவிக்கும், முத்துப்பேச்சிக்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?

---

**சிறுகதை**

# திசைமாறிய கடிதம்

ஓட்டமாவடி அரபாத்

புதிதாகத் திருடுபவனுக்கு தன் திருட்டை மறைக்கத் தெரியாதது போல்-புதிதாக காதலிக்க ஆரம்பித்தவர்களுக்கும் தங்கள் காதலை மறைக்கத் தெரியாது. யாரிடமாவது தங்கள் துடிப்பையும், தவிப்பையும் கூறி சங்கடத்தில் மாட்டிக்கொள்வார்கள். அல்லது, தங்கள் செயல்களின் மூலம், அகப்பட்டுக் கொள்வார்கள். மனம் கவர்ந்தவர்களுக்கு எதை எழுதவேண்டும் என்ற விவஸ்தையில்லாமல் 'உயிரைக்கூட தருவேன்' என்று கொட்டிவிடுவார்கள்.

ஷாகிரா புத்தகம் ஒன்றை புரட்டிக் கொண்டு ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்தாள். அவள் மென்மையான விரல்களினால் புத்தகத்தின் பக்கங்கள் காயப்பட்டுக் கொண்டிருந்தன. வாசிக்க பிடிக்காமல் அவசரமாக திறப்பதும் தாள்களை நகர்த்துவதுமாய், அவள் மனம் போராடிக் கொண்டிருந்தது. விழிகளோ ஜன்னலைத் தாண்டி ஒற்றையடிப்பாதையில் ஊர்வலம் சென்று, ஏமாற்றத்துடன் மீண்டது.

'ச்சே இந்த ஆண்களே இப்படித்தான். நேரத்திற்கு வரமாட்டார்கள். வந்தாலும் காரணம்கூறி எப்படி சமாளித்து விடுகிறார்கள்'. மனசுக்குள் தகித்தவாறே அவள் தலைவனை திட்டிக்கொண்டிருந்தாள். அடிக்கடி கதவு திறந்து வாசலை நோக்கினாள். பின் கண்ணாடிமுன் நின்று தன் அலங்காரங்களை சரிபார்த்துக் கொண்டாள். ஒவ்வொரு வினாடியும் வருடங்களைப் போல், அவளை வாட்டியெடுத்தது. "ஷாகிரா" குரல் கேட்டு, பரவசமானாள். அவனுடன் இனி பேசவே கூடாது என்ற வைராக்கியக் கோட்டை ஒரு நொடியில் இடிந்து போனது. இருந்தும் முகம் திருப்பி எதிர்ப்புக்காட்டினாள். "கோபம் வராதெண்டு நினைச்சேன். ஆனா கோபத்தில நீங்க ரொம்ப அழகா இருக்கிறீங்க." சமயம் பார்த்து கணை தொடுத்தான் மனாஸிர்.

"மற்ற நேரத்தில வேற யாரும் அழக இருக்காங்க போல!" உள்ளே. வெடித்த எரிமலை உதடு வழியாக உஷ்ணமேறியது. அவளை இன்னும் சீண்டினால் இன்றைய பொழுது செழிக்காது. ஊடலை நிறுத்திக் கொண்டு அவள் முகம் திருப்பி அகம் மலர அன்புச் சுனை தெளித்தான்.

"ஷாகிரா நான் நாளக்கி அனுராதபுரம் போறன். வீட்ல வேல தலைக்கு மேல. அதான் லேட்டாயிடிச்சி" சமாதானம் கூறி, அவள் புன்னகை பெற்று பூரிப்பானான். "போன உடனே லெட்டர் போடணும். பொறகு உடம்ப பத்திரமா பார்த்துக்கணும். அங்க சரியான சூடு. நம்ம மலைநாடு போல இல்ல. வெள்ளன எழும்பி தெம்பிலி குடிக்கணும்." ஒரு மனைவியாய் நினைத்து ஆலோசனை கூறி, கண்கள் கலங்க விடை கொடுத்து, வெறுமையாய் அமர்ந்து கொண்டாள்.

ஷாகிராவும், மனாஸிரும் அறிமுகமாகி இரண்டுமாதம்தான் ஆகிறது. மனாஸிரை பொறுத்தவரை ஷாகிரா நான்காவது காதலி. அவளுக்கு முதல்காதல். அடிக்கடி கனவு கண்டாள். மனம் எதிலும் லயிக்க மறுத்து, தனிமை நாடி, வாடி நின்றாள். அவன் வாக்குறுதிகள் சத்திய வேதமாய் அவளை நம்பவைத்தன. காரணமில்லாமல் சிரித்தாள். எடுத்ததற்கெல்லாம் பரவசமானாள். கட்டவிழ்ந்த கன்றுக் குட்டியாய் மனம் தறிகெட்டு ஓடித் திரிந்தது. காதல் அற்புதமான மந்திரம். இளமையின் உதடுகளுக்கு திகட்டாத அறுசுவை. உள்ளே இருந்து உயிரை உறிஞ்சும் அன்பு நஞ்சு. நேசம் நியாயமானதுதான். வேஷம் தெரிந்து, சேரும்போது எவரின் பாசமும் மதிக்கத்தக்கது.

"ஷாகிரா தனக்கு வந்த வரன்களைக் கூட, தட்டிக்கழித்தாள். பெற்றோர்கூட வற்புறுத்தினார்கள். அவள் தன் காதல் இரகசியத்தை மூடி மறைத்தாள்.

"ஷாகிரா நம்ம தொடர்ப இப்ப சொல்ல வேணாம். நானே உங்கட வாப்பாகிட்ட ஆளனுப்பி கேக்கிறன்." என்ற மனாஸிரின்



வேண்டுதலினால் அவள் மூடி மறைத்தாள். அவனே வந்து கேட்பதுதான் பொருத்தமானது. நாம் ஏன் இடையில் குட்டையை குழப்புவான். என்றெண்ணி மௌனியானாள்.

அவர்களின் காதலுக்கு ஆறுமாதம். கடிதங்களே உணர்வுகளை பரிமாறிக் கொண்டன. ஒரு கடிதம் கிடைத்ததும், மறுமடல் வரும்வரை திருப்பித் திருப்பி அதையே சுவைத்தாள் ஷாகிரா. அவன் ஏக்கம் பூசிய வசனங்களை உவகையாய் இரசித்து வந்தாள். குறும்புச் சொற்களில் முகம் சிவந்து நகைத்து வந்தாள். எட்டாத தூரமாயினும், அவன் கைப்பட எழுதியதற்காய் அந்தக் கடிதங்களை கண்ணில் ஒற்றி மெய் சிலிர்த்தாள். ஷாகிராவின் பிடிவாதத்தால், அவளின் தங்கைகளின் வாழ்வு கருகிப் போயிடுமே என்றஞ்சிய பெற்றோர் அவர்களுக்கு மணம் பேசி முடித்தனர்.

ஷாகிரா இரண்டு மாதமாய் சோர்வாய் திரிந்தாள். நடை தளர்ந்து, முகம் கருகி, மெழுகானாள். மனாஸிரின் மடல் வராத இந்த நீண்ட இடைவெளிகள் அவளை துடிக்க வைத்தன. மடலுக்கு மேல் மடல் அனுப்பியும் பதிலிடாத அவன் அலட்சியத்தை நினைக்க நினைக்க நெஞ்சு கொதித்தது. வழக்கம்போல் பலாமரத்தில் சாய்ந்து கொண்டு இலைகளை உருட்டிக்கொண்டிருந்தாள். "ஷாகிரா இந்தாம்மா லெட்டர்" தபாற்காரனின் குரல் கேட்டு, ஆவலாய் ஓடிச்சென்று அது மனாஸிரின் கையெழுத்தெனக் கண்டு படபடப்பாய் பிரித்தாள். விழிகள் சடசடவென அடித்துக் கொண்டன. உள்ளத்தின் துடிப்பை நிறுத்த முடியவில்லை.

"**அன்புள்ளவளுக்கு....** மடல் ஆரம்பித்து தொடர்பில்லாமல் தொடர்ந்தது. ஷாகிராவுக்கு ஒன்றும் புரியவில்லை. நிதானமாய் மறுபடியும் படித்தாள். படிக்கப் படிக்க தன் காலின் கீழிருக்கும் பூமி நழுவி, தான் பாதாளத்தில் விழுவதைப் போல் இருந்தது அவளுக்கு. இதயம் தீப்பிடித்து எரிந்தது. மனாஸிர் தன் வெளிநாட்டில் இருக்கும் தன் மனைவிக்கு எழுதிய கடிதம் அது. 'திருமணம் முடித்து ஒரு குழந்தைக்கு தகப்பனான அவனையா நான் இதுவரை மனதில் பூஜித்தேன்? அவசரத்தில் மனாஸிர் கடிதத்தை மாற்றி அனுப்பியதால் நான் தப்பித்தேன்.' வெளியூரில் வேலை செய்யும் சிலர் அங்கேயே திருமணம் முடித்து, சொந்த ஊருக்கு வரும்போதெல்லாம் தன் லீலைகளை நடத்த காதலிகளை தேடிப் பிடித்து, அவர்களின் மனதில் ஆசைகளை விதைத்து ஆடும் நாடகங்களுக்கு ஷாகிராவைப் போல் பலர் பலியாவதுண்டு. ஷாகிராவால் இத்தோல்வியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அழுதாள்-துயரங்களுக்கு அதுதானே வடிகால். அழுது முடிந்ததும் மனம் பூவாய் இலேசாகியது. அக்கடிதத்தை கிழித்து குப்பையில் போட்டாள்.

"உம்மா" கிணற்றடியில் இருந்த ஷாகிராவின் தாய் மகளின் குரல் கேட்டு, வெளியே வந்தாள். "என்னபுள்ள?"

"உம்மா எனக்கு நீங்க விரும்பின மாப்பிள்ளையை பேசுங்க." சொல்லிவிட்டு பொங்கி வந்த அழுகையோடு அறை நோக்கி ஓடினாள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்ட

# இலக்கிய நயம்





# இரண்டில் ஒன்றை விடு!

இன்று காலையில் பொய்த்த மழையில் நனைந்துபோன நந்தவனத்து மரங்களும், அந்த மரங்களில் சிரித்துக்கொண்டிருந்த மலர்களும் மாலையின் இளவெப்ப வெய்யிலில் குளிர்காய்ந்துகொண்டிருந்தன.

இராஜேந்திரனின் குன்று மார்பில் தலைசாய்ந்திருந்தாள் நாகதேவி.

நாகதேவி மீனவப் பெண். இராஜேந்திரன் இளவரசன்.

ஏணிவைத்துப் பார்த்தாலும் எட்டாத உயரம். எட்டி எட்டிப் பார்த்தாலும் தொடமுடியாத உயரம். மூச்சிறைக்க ஓடினாலும் சேரமுடியாத தூரம்.

பெற்றவர்கள் தடுத்தனர். காதல் வேண்டாம். அரசகுல விரோதம் நம் குடி மறுக்கும். செங்கோல் கொடுங்கோலாக மாறி உன் சிரசறுக்கும் என்று குறுக்கே நின்றனர்.

உயரம் பார்த்தா காதல் வந்தது?

உள்ளம் அறிந்துதானே காதல் மலர்ந்தது. கடக்க முடியாத தூரத்தையும் காதல் துடுப்பு வலித்து கடந்துவிடுவோம். வாழ்வில் ஒன்று கலந்துவிடுவோம் என்றனர் காதலர் இருவரும்.

"வேண்டாம் அம்மா வேண்டாம். அந்தப்புரத்தில் உன்னை பணிப் பெண்ணாக இருக்கத்தான் அரச வம்சம் அனுமதிக்கும். பட்டத்துராணியாக பாதம் பதிக்க ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது."

என்று கண்ணீர்விட்டுச் சொன்னாள் நாகதேவியின் தாயார்.

"நாடாளும் ராணியாகவா நான் ஆசைப்படுகிறேன்? இல்லையம்மா இல்லை. மஞ்சத்து வாழ்க்கை எனக்கு வேண்டாம். அவர் நெஞ்சத்தில் இடமிருக்கிறது: அதுவே போதும்."

"நீ நேசிக்கும் நெஞ்சத்துக்கு சொந்தக் காரன் வாழ்வது மஞ்சத்தில்தானேயம்மா. பஞ்சணை வாசிகளுக்கும் கஞ்சிக்கு ஏங்கும் ஏழைகளுக்கும் எட்டாப் பொருத்தமடி என் செல்லமே."

"அவர் நல்லவ்ரம்மா."

"நல்லவராக இருக்கலாம் மகளே. அரசவம்சத்தின் எதிர்ப்பை முறியடித்து உன் கரம் பிடிக்கும் வல்லவராக முடியாதே."

"அவர் தந்தை கொடியவரல்ல."

"கொடியவரல்ல என்பது சரிதான் மகளே. ஆனால் சூடியுள்ள முடியும், சூழ்ந்திருக்கும் சுற்றமும் அரச கௌரவம் சொல்லி அவர் மதியை மறைக்கலாமல்லவா? மன்னவர் குலத்தில் மீனவப் பெண் மருமகளாக வருவதா என்று கோபம் கொண்டு கொடுவாள் உயர்த்தலாம் அல்லவா?"

தாயார் தடுத்துப் பார்த்தாள். வாதித்தும் பார்த்தாள். நாகதேவி தன் முடிவில் மாறாமல் இருந்தாள்.

எனினும் இடையிடையே அச்சமும் மனதில் கொண்டாள். பெற்றவள் சொன்ன வார்த்தைகள் பலித்துவிடுமோ என்று நினைத்து கலங்கிக்கொண்டாள்.

இப்போது இராஜேந்திரன் மார்பில் தலை சாய்த்தபடியிருந்தும் அதைத்தான் நினைத்துப் பார்த்தாள்.

"என்ன யோசிக்கிறாய் நாகதேவி? நாழிகையோ ஆகிக்கொண்டிருக்கிறது. நாலு வார்த்தைகூட பேசவில்லை நீ!"

"பயமாக இருக்கிறது பிரபு"

இராஜேந்திரன் நகைத்தான். அவள் முடி கோதிவிட்டான். குனிந்து உச்சந்தலையில் உதடுகளால் தொட்டான்.

"ஏன் பயம் நா்கதேவி?"

என்று ஆதரவான குரலில் கேட்டான்.

"வானத்து நிலவில் வாஞ்சை கொள்ளும் பிஞ்சுக் குழந்தையாக, நாளை அந்த நிலவு வந்து உள்ளங்கையில் உட்கார்ந்து கொள்ளும் என்று நம்பித் தூங்கும் பிஞ்சு மனப் பிள்ளையாக நானும்..."

சொல்லி முடிக்கவிடாமல் அவள் இதழ்களை தன் கரத்தால் மூடித்தடுத்தான் இராஜேந்திரன்.

"அண்ணாந்து பார்க்கும் உயரத்திலா நான் இருக்கிறேன்? உன் அருகில் அல்லவா இருக்கிறேன். நிலவைக்கூட மேகம் மூடலாம் நாகதேவி. என் நினைவில் உள்ள உன் முகத்தை இந்த உலகம் ஒன்றாய் திரண்டு எதிர்த்து வந்தாலும் மூட முடியாதே. கடல் பெருகி வந்து கரையை உடைக்கலாம். ஆனால் அரச ஆதிக்க கடல் திரண்டு வரினும் நம் காதல் உறவு உடையாது. நம்பு நாகதேவி. நம்பு."

"நம்புகிறேன். பிரபு நம்புகிறேன். எனினும் உள்ளத்தின் ஒரு மூலையில் அஞ்சுகிறேன்."

இராஜேந்திரன் தன் மார்பில் கிடந்த அவள் முகம் தொட்டு தன் முகம் எதிரே உயர்த்தினான். அவள் முகம் பார்த்து பேசினான்,

"உன் விழிகள் கண்டு நான்தான் அஞ்சவேண்டும். உன் கொஞ்சு மொழி கேட்டு கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து போகுமோ என் மனம் என்று நான்தான் பயம்கொள்ளவேண்டும். முறைப்பது போல நிமிர்ந்திருக்கும் மார்பெழில்கள் மோதி என் மார்பு கிழிந்துவிடுமோ என்று நான் அன்றோர் நடுங்க வேண்டும்?"

நாகதேவி விழிகளால் சிரித்தாள். இதழ்களால் மகிழ்வு காட்டினாள்.

"புகழும் கலையில் பொல்லாத திறமை தான் உங்களுக்கு!"

"புத்தகம் நீதானே! இன்னும் கற்றுக் கொள்ள விட்டுத்தந்தாய் என்று வைத்துக் கொள், என் திறமை எட்டுத்திக்கும் வியக்கும் வண்ணம் உயர்ந்துவிடும்."

குறும்பாக சிரித்து, அவள் புருவத்தை விரல்களால் வருடிப்பார்த்துவிட்டு,

"நாகதேவி இத்தனை மென்மையான வில் எப்படியெல்லாம் எதிரேயிருப்பவர்களை கொடுமைப்படுத்துகிறது பார்த்தாயா? தொட்டுப் பார்த்தால் மெத்தென்று இருக்கிறது. தூர நின்று பார்த்தால் மனதில் குத்தி தைக்கிறது."

"நல்ல கற்பனை."

நாகதேவி கேலி செய்து நகைத்தாள்,

"ஜாக்கிரதை வணிகர்கள் கண்டால் அள்ளிப்போய் விடுவார்கள்!"

இராஜேந்திரன் அவள் இதழ்களை நோக்கியபடி சொல்ல, விழிகள் விரித்து நாகதேவி கேட்டாள்,

"என்ன சொல்கிறீர்கள்?"

"வணிகர்கள் அள்ளிப் போய்விடுவார்கள் என்கிறேன்."

"அதுதான் எதை என்கிறேன்?"

"நீ கொட்டும் முத்துக்களை."

நாகதேவி போலியாய் முறைப்புக்காட்டி, தன் இடதுகரம் மடித்து அவன் மார்பில் குத்தினாள்.

"அப்பப்பா என்ன பலம்! என் கரம்தான் வலிக்கிறது."

என்று குத்திய கரத்தை உதறிக் கொண்டாள்.

"எங்கே வலிக்கிறது?"

கரம் பற்றி அவள் புறங்கையில் உதடுகளால் ஒற்றினான். நாகதேவி தடுக்காமல் இருந்த துணிச்சலில் உதடுகள் ஊர்ந்து தோள்தொட்டு, தோளின் வழியாக முன்புறமாய் நகர, நாகதேவி தடுப்பதுபோல் நடித்தபடி- ஆனால் தடுக்காமல் சிலிர்ப்பாய் முகம் உயர்த்தி வானம் பார்த்து விழிகள் மூடினாள்.

இராஜேந்திரனின் இடதுகரம் நாகதேவி யின் இடை பற்றி அழுத்தியது. அழுத்திய விரல்களை தன் விரல்களால் மூடினாள் நாகதேவி. விரல்களும் பேசும். நாகதேவியின் விரல்கள் சொன்ன செய்தியை இராஜேந்திர னின் விரல்கள் புரிந்து துணிந்து நகர,

நாகதேவி வெட்கத்தில் முகம் சிவந்தாள்.

வெட்கம் தடுக்கிறது. மனமோ இவர் செயல் விரும்பி நாடுகிறது.

ஒரு மனம் இரண்டாகி வெட்கம் ஒரு புறம் துளைக்கிறது. விருப்பம் மறுபுறம் வதைக்கிறது.

இப்போது நாகதேவி தன் மனதிடம் ஒரு மனுப்போட்டாள். அந்த மனுவிலே திருவள்ளுவரின் குறளைத்தான் குறித்துக் கொடுத்தாள்.

மனமே ஒன்றில் காமத்தை விட்டுவிடு- அல்லது நாணத்தை விட்டுவிடு. இரண்டையும் ஒன்றாய் தாங்கியிருக்க முடியாது என்னால்! அதுதான் மனதுக்கு போட்ட மனுவில் அவள் மனதால் நினைத்த குறளின் பொருள்

**"காமம் விடு ஒன்றோ நாண்விடு-**
**நன்னெஞ்சே**
**யானோ பொறேன் இவ் விரண்டு."**

குறள் 1247-அதிகாரம்-125

**தருவது ரசிகன்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-54

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 |
| | ■ | 3 | 4 | | | |
| 5 | | | | | ■ | |
| | ■ | ■ | | ■ | 6 | |
| 7 | 8 | | ■ | 9 | ■ | ■ |
| ■ | | ■ | 10 | | | |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. இது கார்ல் மாக்ஸ் எழுதிய நூலின் பெயர்.
3. இது அதிகம் பேருக்குத் தெரியக் கூடாது.
5. நன்றாக அமைந்தால் இதுவும் ஒரு பல்கலைக்கழகம்தான்.
6. பெண்ணின் விழியை இதற்கு ஒப்பிடுவதுண்டு.
7. பிரபலமான மதத் தலைவர் ஒருவர் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
10. மிக நீண்ட தூரத்திற்கு இது ஒத்து வராது.
11. நம் நாட்டு மக்களின் விருப்பமும் இதுவே.
12. சில நேரங்களில் சொல்லால் அடித்து விடுவார்.

### மேலிருந்து கீழ்

1. நகைக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாம்.
2. உயிர்போன பின் உடலை எரித்தால் இது ஒரு பிடிதான் மிஞ்சும்.
4. இதுவும் விளையாட்டுத்தான்.
8. திறமை உள்ளவர்களைத் தேடிவரும்.
9. குழந்தைகளுக்கும் பிடிக்கும், பெரியவர்களுக்கும் பிடிக்கும்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 25.06.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-54
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-52க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சு | 2 ர | ங் | க | ம் | ■ | 3 போ |
| டு | வி | ■ | 4 த | னி | 5 யா | ர் |
| 6 கா | க் | கா | ■ | ■ | த் | வை |
| டு | கை | ■ | 7 அ | க | தி | ■ |
| ■ | ■ | 8 ப | ல் | ■ | ரை | 9 க |
| 10 சி | ல | ம் | ப | ம் | ■ | ன |
| 11 ம | ர | ண | ம் | ■ | 12 ஆ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.52இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. திருமதி. சு. தனலக்ஷ்மி திருகோணமலை.
2. வி. உலகநாதன் கொழும்பு-5.
3. செல்வி. ஸபானா ஆஸ்மி அனுராதபுரம்.
4. ஆர். சாரதா மாத்தளை.
5. எம்.எம். அஜ்மல் கொழும்பு-14.
6. எஸ். ராமதாஸ் வவுனியா.
7. ஏ.எம். இஸ்மாயில் குருநாகல்.
8. வி.கோபாலகிருஷ்ணன் மட்டக்களப்பு.
9. க. முத்துக்குமார் இரத்தினபுரி.
10. எம்.எம். ஹலீம் கொழும்பு-9.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா! பெண் என்பவள் மனிதனுக்கு பலவீனமா-பலமா?

எஸ். நாராயணன்-கண்டி.

பலம்தான். பெண்ணின் வயிற்றில் இருந்து பிறந்த பயன்தானே இப்படி ஒரு பலமான கேள்வி கேட்க வைத்திருக்கிறது. என்ன நாராயணா! எங்காவது தவறான இடத்தில் விழுந்து பட்ட காயம்தானா இப்படியொரு கேள்விக்கு காரணம்?

□□

அடித்த பந்து திரும்பி வந்துதான் ஆகும் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள்!

எ.சிவகுமார்-கொழும்பு-11.

வெட்ட வெளியில் நின்று அடித்த பந்து திரும்பிவராதய்யா-வராது. அதனால் உதாரணம் சொல்ல முடியாது.

□□

சினிமா மோகம் குறைய ஒரு வழி என்ன?

கே.மணிமொழி-பண்டாரவளை.

சினிமாவைப் பற்றியே யோசித்து இப்படியான கேள்விகள் கேட்காமல் இருப்பதும் ஒரு வழி.

□□

தற்கால இளம் சந்ததி சிறு வயதிலேயே அனைத்தையும் அறிந்து விடுகிறதே. நல்லது தானா?

வீ.பால்ராஜ்-நீர்கொழும்பு.

பிஞ்சிலேயே பழுத்துவிடுகிறார்கள் என்கிறீர்கள். அதொன்றுமில்லை - வேகமாக புகை போகும் சூழல். ஆனாலும் தானாக கனியும்போதுதான் சுவையிருக்கும்.

□□

### அடித்த பந்து திரும்பி வராமல் இருக்க?

அரசியல்வாதிகள் எப்போது திருந்துவார்கள்?

கு.உருத்திரகுமார்-ஹட்டன்.

வாய்ப்பே இல்லை.

□□

வாழ்க்கையில் முன்னேற என்ன செய்யலாம்?

என். நளீம்-கல்முனை.

பின்னோக்கி செல்லாமல் இருக்க வேண்டும்.

□□

சமீபத்தில் இலங்கைத் தொலைக்காட்சியில் பார்த்த சிங்களத் திரைப்படம் ஒன்று 'மறுபடியும்' படச் சாயலில் இருந்ததே?

ஆர்.இஸ்மாயில்-புதிய காத்தான்குடி.

இலங்கை எழுத்தாளர் செ.கணேசலிங்கன் தான் பாலு மகேந்திராவுக்கு ஆலோசனை வழங்கிவருகிறார். ஒருவேளை தான் முன்னர் இரசித்த சிங்களப் படத்தின் பாதிப்பில் அவர்..

□□

பெண்கள் மத்தியில் இருந்து அதிக எழுத்தாளர்கள் உருவாகாத காரணம் என்ன?

எம்.மகராஜன்-திருகோணமலை.

தப்பு மகராஜ் தப்பு. தினமுரசை ஒழுங்காக வாசியுங்கள்.

□□

விழிப்புணர்ச்சியை வளர்க்க என்ன செய்யலாம்?

செல்வி.அ.விஜயா-நுவரெலியா.

அளவுக்கு மீறி தூங்க விடாமல் தொல்லை கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

□□

விரைவாக பணக்காரனாக மாற ஆசை. சுலபமான ஒரு வழி சொல்லமுடியுமா?

எல். நவநீதன்-கொழும்பு-09.

வெகு விரைவாக பணத்தை திரட்டுங்கள். உங்கள் வேகத்தை பார்த்தால் விரைவில் சிறைக்குப் போகும் சகுனம் தெரிகிறது.

□□

காதல் கவிஞர்களை உருவாக்குகின்றதா? கவிஞர்கள் காதலை உருவாக்குகிறார்களா?

தேவ் ஆனந்த்-மாத்தளை.

பூவில் விழுந்த வண்டுக்குத்தானே தேனின் சுவை தெரியும். காதல் கடலில் விழுந்த வர்களுக்குத்தானே அதன் இன்பமும்-துன்பமும் எழுத முடியும்.

□□

சிந்தியா! பயணம் செய்யும்போது பூனை குறுக்கே வருவது கூடாதா?

எஸ்.கணபதி-கொழும்பு-08.

இல்லை. ஆனால் புலி குறுக்கே வந்தால் தான் ஆபத்து.

□□

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இவ்வாரம் (19.06.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 34

**காலத்தின் குரல்:** அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் அவற்றுக்கேற்ற வேகத்திலும் மார்க்கத்திலும் இடம் பெறுகின்றன. அதேபோல் அரசியல் நாடகத்தில் பங்குபெறும் நாயகர்கள் தங்களுக்கேற்ற வேடங்களையும் பாகங்களையும் எடுத்துக் கொள்ளுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அரசியல் அபிலாசைகளின் மாறுபட்ட தன்மைகள் ஒன்றோடொன்று மோத நேர்ந்தால் எல்லாமே பாழாகி விடவும் நேரிடும். அத்தகைய மாற்றம் இதுவரை இடம் பெறாமையினால் அதனை எதிர்பார்த்துக் காத்து நிற்கிறேன். திருதராட்டினரும் அரசியல் சூழ்நிலையினில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார். தன்னுடைய சரிந்து போன அரசியல் நிலையினை மீண்டும் உச்சிக்கு உயர்த்த நாட்டம் கொண்டுள்ளார்.

-காட்சி தொடக்கம்-

திருதராட்டினர் அரண்மனை

**காந்தா:** தங்கள் கவலைக்குக் காரணம் என்ன பிரபு?

**திருத:** நான் கவலையிலாழ்ந்துள்ளேன் என்பதை எவ்வாறு அறிந்தாய் அன்பே?

**காந்:** தாங்கள் ஆழ்ந்த சிந்தனையில் இல்லாவிட்டால் நான் வரும் பாத ஒலி கொண்டே உடனே என்னை அழைத்திருப்பீர்களே!

**திருத:** இருக்கையில் இருந்துகொள் காந்தாரி. பிள்ளைகளைப் பெற்றால் கவலை இருக்கத்தானே செய்யும்! துரியோதனனின் திருமணம் பற்றித்தான் எனக்கு இப்போது கவலையெல்லாம். பாஞ்சால நாட்டு இளவரசி திரௌபதிக்கு சுயம்வரம் நடக்கப்போகிறதாம். நம்மகன் துரியோதனன் திரௌபதியை மணம் முடித்தால் அஸ்தினாபுரியும், பாஞ்சால நாடும் நல்லுறவு பூண்டுவிடுமல்லவா...?

**காந்:** அந்த மகாதேவன் விரும்பினால் திரௌபதி அஸ்தினாபுரியின் மருமகளாக மாட்டாளா?

-காட்சி மாற்றம்-

கானகத்தில் பாண்டவர்கள்- இரவு நேரம்- தீக்கு முன்புறம் இருக்கும்போது ரிஷிகள் வருகின்றனர்.

**குந்தி:** பிராமணோமத்தமர்களே! எங்களுடன் இருந்து உணவுண்டு செல்லுங்கள்.

**ரிஷி:** தேவி! தாங்கள் பிராமணப் பெண் போல் தோன்றவில்லை. சத்திரியர்களின் தொடர்பு தங்களுக்கு இருந்திருக்க வேண்டும்! இருப்பினும் தங்கள் அழைப்பினை ஏற்றுக் கொள்ளுகிறோம்.

குந்தி உணவு பரிமாறுகிறாள்.

**ரிஷி:** நீங்கள் உங்கள் புத்திரர்களுடன் கம்பில்யா நரகருக்குப் போகவில்லையா?

**குந்தி:** ஏன்! கம்பில்யா நகரில் என்ன விசேடம்?

**ரிஷி:** பாஞ்சால நாட்டரசன் துருபதனின் மகள் திரௌபதியின் சுயம்வரம் நடைபெறப் போகிறது. எல்லா நாட்டு அரச குமாரர்களும் அங்கு செல்கின்றார்கள்.

**குந்தி:** பாஞ்சால நாட்டரசன் துருபதனுக்கு சுயம்வரத்துக்கு ஏற்ற வயதில் மகள் இருக்கிறாளா?

**ரிஷி:** அவள் ஓர் அற்புதமான பெண்.

**அர்ச்:** அதெப்படி?

**ரிஷி:** உண்டபின் முழுக்கதையும் சொல்கிறேன். பாஞ்சால நாட்டு மன்னனின் உள்ளத்தில் ஒரு பெரிய வடு இருக்கிறது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள் போலும்.

ரிஷிமார் உணவு உண்டபின் கதையை ரிஷி தொடர்கிறார்.

**ரிஷி:** திரௌபதியின் பிறப்புக்கும் துருபதனின் நீங்காத உளக் காயத்துக்கும் நெருக்கமான தொடர்புண்டு.

**அர்ச்:** அவருடைய உளக் காயத்துக்கான காரணம் என்னவோ...?

**ரிஷி:** துரோணாச்சாரியாரைப் பற்றி அறிவீர்களா?

**யுதிஷ்:** நன்றாக அறிவோம். அவருக்கு ஈடான வீரர் தேவலோகத்திலும் இல்லையே! துரோணரும் துருபதனும் குருகுலத்தில் ஒன்றாக படித்த-நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள். தனது இராச்சியத்தில் பாதியை துரோணருக்கு தருவதாக அப்போது துருபத மன்னர் கூறினாராம். பின்னர் ஒரு தடவை ஆச்சாரியார் துருபதனிடம் போனபோது துருபதன் போதுமான மதிப்பை அளிக்காதமையினால் கோபமுற்றிருக்கிறார்.

**ரிஷி:** துருபதனிடம் இராச்சியத்தில் பாதியைக் கேட்டு துரோணர் போகவில்லையே!

**யுதிஷ்:** ஆமாம்.... அதனையும் அறிவோம்.

**ரிஷி:** அந்தணனுக்கு அகந்தை ஆகாது. அதனாலேதான் அவர்கள் ஐயம் பெற்று உண்டு வாழ வேண்டியவர்களாகவுள்ளனர். ஆனால் துரோணர் தான் ஒரு அரசனுக்குச் சமமானவர் என்று ஏன் எண்ணத் தலைப்பட்டாரோ தெரியவில்லை. தனது பெருமையை விட்டுக்கொடுக்க முடியாத சத்திரியனான துருபதனால் தனக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாகக் கருதிய துரோணர் தனது மாணாக்கர்களான பாண்டு புத்திரர்கள் மூலம் துருபதனைப் பழிதீர்த்துக் கொண்டார். பாஞ்சால நாட்டை வென்று தன் தகைமையை வெளிக் காட்டுவதற்காக பாதி இராச்சியத்தை துருபதனுக்கு மீண்டும் கொடுத்தார். இதனால் துரோணாச்சாரியார் மீது பழிதீர்க்க துருபதன் வஞ்சம் கொண்டான். துரோணாச்சாரியாரை பழிவாங்க ஒரு மகனைப் பெற ஆசைப்பட்டார். இதற்கான ஒரு யாகத்தை நடத்துவதற்கென முனிவர் ஒருவரின் உதவியை துருபதன் நாடினான்.

-காட்சி பின்னோக்கு-

கானகத்தில் தனது பரிவாரங்களுடன் துருபதன் வரும்போது ஓர் ஆசிரமத்தை அடைகிறான்.

**துருப:** முனி புங்கவரே! அடியேன் வணக்கம். என்னை வாழ்த்துங்கள்.

**முனிவர்:** உனது கோரிக்கையினை என்னால் வழங்க முடியாதமையினால் என்னால் உன்னை வாழ்த்த முடியாது.

**துருப:** எனக்கு ஒரு மகன் வேண்டும்.

**முனி:** ஒரு அந்தணனைக் கொல்வதற்கு ஆயுதம் போன்ற ஒரு மகனைப் பெற விரும்புகிறாய். இது ஒரு கோரிக்கையல்ல. ஒரு சாபத்தைக் கோருகிறாய். ஆனால் நான் உன்னை சபிக்கப் போவதில்லை.

**துருப:** துரோணர் எனக்குச் செய்த தீங்கால் நான் பட்ட துயரைத்தீர்க்க அவரைப் பழிவாங்க விளைகிறேன்.

**முனி:** வாழ்க்கை பவித்திரமானது. பழி தீர்க்கும் எண்ணம் அழிவுக்கே அடிகோலும். இந்த விடயத்தில் என்னால் ஆகப்போவது எதுவுமில்லை. எனது சகோதரர் பிறிதோரிடத்தில் தவம் செய்கிறார். அவர் நல்லது கெட்டது பார்க்க மாட்டார். அவரிடம் போய் உன் கோரிக்கையை முன் வைத்துப்பார்!



-காட்சி மாற்றம்-

(பின்னோக்கு தொடர்ச்சி)

மர நிழலில் நிஷ்டையிலிருக்கும் யாஜ முனிவரை துருபதன் அணுகுகிறான்.

**துருப:** வணக்கம் முனி புங்கவரே! புத்திர காமேட்டியாகம் ஒன்றினை நடத்த வேண்டி தங்கள் உதவி கோரி வந்துள்ளேன். துரோணரை அழிக்க ஒரு மகன் வேண்டுகிறேன்.

**முனி:** பியாஸ முனிவனா என்னிடம் உம்மை அனுப்பி வைத்தான்? எது சரி எது பிழை என்பதை எவராலும் நிர்ணயிக்க முடியாது. துரோணரை ஒழித்துக்கட்டுவதற்கு உமது புத்திரனால் முடியும் என்ற விதி இருக்குமானால் நிச்சயமாக ஒரு புத்திரனை நீ அடைவாய். அதற்காக நான் உமக்கு உதவுவேன். ஆனால் உமது தலைவிதி என்னால் எழுதப்படவில்லை. இறைவன் தவறு செய்ய மாட்டான். துரோணரின் முடிவும் உமது விதியும் அவனால் நிர்ணயிக்கப்பட்டவை என்றால், உமது எண்ணம் கைகூட உமக்கு உதவுவதில் நான் தயங்கப் போவதில்லை.

-காட்சி மாற்றம்-

(பின்னோக்கு தொடர்ச்சி)

யாக குண்டத்தின் முன் முனிவர் மந்திரங்களை ஓதுகிறார்.

**முனி:** எங்கே! ராணியை அழைத்து வாருங்கள்.

**துருப:** போய் ராணியை அழைத்து வாருங்கள்!

**முனி:** எங்கே! ராணி வந்துவிட்டாரா?

**காவலன்:** வணக்கம் மகாராஜா! மகாராணி குளித்துக்கொண்டிருக்கிறார்.

**முனி:** அரசி குளித்துவிட்டு வரும்வரை சுப வேளை காத்திருக்கப் போவதில்லை.

- முனிவர் யாக குண்டத்தில் சமித்துக்களை போடுகிறார்.
- இளம் குமரன்-திஷ்டத்துய்மன் யாக குண்டத்திலிருந்து வெளி வந்து துருபதன் மற்றும் முனிவர் முன் விழுந்து வணங்குகிறான்.
- தொடர்ந்து அழகிய இளம் பெண்- திரௌபதி தீக்குள்ளிருந்து வெளிவந்து இருவரையும் வணங்குகிறாள்.

-பின்னோக்கு முடிகிறது-

**ரிஷி:** இவ்வாறு ஓமகுண்டத்தில் பிறந்த திஷ்டத்துய்மனும் திரௌபதியும் பாஞ்சால நாட்டில் வளர்கின்றனர். திரௌபதிக்கு சுயம்வரம் நடக்கப் போகிறது. தேவி! உங்கள் புத்திரர்களுடன் நீங்களும் அங்கு போகலாம். உங்கள் பரம்பரை முழுவதுக்கும் வேண்டிய திரவியம் பெறலாம்.

**பீமன்:** இளவரசி நல்ல அழகியாக இருப்பாள் போலும்!

**சகா:** அண்ணா! திரௌபதியின் அழகினை உண்ண முடியாது.

**அர்ச்:** அம்மா! சுயம்வரம் என்றால் மிக அழகாக இருக்கும் அல்லவா?

**யுதிஷ்:** ஆமாம் மிகவும் அழகான விழாதான்.

**ரிஷி:** இதுபோன்ற சுயம்வர விழா இதுவரை நடந்ததில்லை. இனிமேலும் நடக்கப் போவதில்லை. பாரத நாட்டிலுள்ள சகல அரசர்களும் பங்கு பற்றுகிறார்கள். துவாரகையிலிருந்து யாதவரும் வருகின்றனராம்.

**அர்ச்:** உண்மையாகவா...? அப்போ நாங்களும் அங்கு போக வேண்டும்.

**குந்தி:** ஆமாம் மகன். அந்த அரசிளங் குமாரியை நானும் பார்க்க விரும்புகிறேன்.

-காட்சி மாற்றம்-

பாஞ்சால நாட்டில் திரௌபதியின் சுயம்வர மண்டபம்- கிருஷ்ணர் பலராமனுடன் வருகிறார்.

**திஷ்ட:** வாருங்கள் ஆசனங்களில் அமருங்கள். நிகழ்ச்சியை ஆரம்பிக்கலாமா அப்பா...?

**துருப:** மகனே! அர்ச்சுனனை மனதில் நினைத்தே இந்தப் பொறியினை அமைத்தேன். இன்று திரௌபதி ஏந்தி வரும் மாலைக்கு சரியான பொருத்தமான மணாளன் கிடைக்கப் போவதில்லை என்றே அஞ்ச வேண்டியிருக்கிறது.

**திஷ்ட:** அப்பா! அவ்வாறு கருத வேண்டாம். சபா மண்டபத்தில் மாவீரர்கள் திரண்டிருக்கிறார்கள். துரோணாச்சாரியாரின் மாணாக்கர்களும் வந்துள்ளனரே!

**துருப:** சரி திரௌபதியை அழைத்துவா..!

**சபையில் ஒருவர்:** இளவரசியை அழைத்து வரத்தான் இளவரசர் போகிறார் போலும்!

**அடுத்தவர்:** மன்னர்களெல்லாம் தங்கள் முடிகளை சரி செய்வதைப் பார்த்தாயா?

**துரியோ:** (அஸ்வத்தாமனிடம்) குரு புத்திரரே! தாங்கள் போட்டியில் கலந்து கொள்வீர்களா?

**அஸ்வ:** இப்போட்டியில் நான் எவ்வாறு பங்கேற்க முடியும்? அவள் என் குருவழியில் சகோதரியாயிற்றே!

**துரியோ:** அவ்வாறானால் எனக்கும் அவள் ஒருவகையில் சகோதரி முறைதான்.

**அஸ்வ:** நெருக்கமான இரத்த உறவல்ல என்பதனால் தாங்கள் சுயம்வரத்தில் கலந்துகொள்ளலாம். தாங்கள் வெற்றி பெற்றால் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்.

**துரியோ:** வெற்றி பெற்றால்...என்று ஏன் சந்தேகப்பட வேண்டும்? குரு புத்திரரே! நானே வெற்றியீட்டுவேன்.

□□□

**அறிவிப்பாளர்:** சபையோர்களே! பாஞ்சால நாட்டின் இளவரசி திரௌபதி வந்து கொண்டிருக்கிறார்...!

அண்ணன் திஷ்டத்துய்மன் மணக்கோலத்தில் திரௌபதியை மன்னர்கள், இளவரசர்கள் வீற்றிருக்கும் அவைக்கு அழைத்து வருகிறான். துரியோதனன், சகுனி, சிசுபாலன், ஜராசந்தன் ஆகியோரைப் பார்த்தபின் கிருஷ்ணனைக் கண்டு வணக்கம் செலுத்தியபின் அமர்கிறாள்.

- திஷ்டத்துய்மன் அவையோரை வணங்கி சுயம்வர நிபந்தனைகளை வெளியிடுகிறான்.

**திஷ்ட:** எனது தந்தை-கம்பிலிய நாட்டு மாமன்னரின் சார்பில் மாட்சிமை தங்கிய உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். எனது சகோதரி திரௌபதியை வீரர்களாகிய உங்களுக்கு பெருமையுடன் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

இதே சமயத்தில் பிராமணர் வேடத்தில் பாண்டவர்கள் பிரவேசித்து பொதுமக்கள் மத்தியில் இடம்பிடிக்கின்றனர்.

**பலராமன்:** (பீமனைக் கண்டதும் கிருஷ்ணனிடம்) அதோ அங்கு நிற்கிறானே! அவன் நல்ல சாப்பாட்டு ராமன் போல் தெரிகிறதே!

**கிருஷ்:** அவன் ஓர் பிராமணனல்ல அண்ணா!

அர்ச்சுனன் கிருஷ்ணனைப் பார்த்து அடக்கமாக மரியாதை செலுத்த கிருஷ்ணனும் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்கிறான்.

**பலரா:** கிருஷ்ணா! ஏன் அவன் உனக்கு மரியாதை செய்கிறான்?

**கிருஷ்:** அதனை அவனிடமல்லவா கேட்க வேண்டும்!

**பலரா:** எப்போதும் நீ நேரடியான பதிலைச் சொல்வதில்லையே! அவனை நீ அறிவாயா?

**கிருஷ்:** நேரடியாக நீங்களும் என்னிடம் கேள்வி கேட்பதில்லையே? அவனை உங்களுக்கும் தெரியும். முன்புறம் நிற்பவர் யுதிஷ்டிரர். சாப்பாட்டு ராமன் என்று சொன்னீர்களே! அவன் பீமன்.

**பலரா:** அப்போ அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரும் உள்ளனரா?

**கிருஷ்:** ஆமாம்! அதைத்தான் கூறவந்தேன்.

**பலரா:** உனக்கு எவரைப் பார்த்தாலும் அரக்கு மாளிகையில் தீயுடன் சங்கமமாகிவிட்ட அந்த அப்பாவிகளைப் போலத்தான் தோன்றும்...!

**கிருஷ்:** ஹஹ்.....ஹஹ்...ஹா....!

**திஷ்ட:** திரௌபதியின் சுயம்வரத்துக்கென என் தந்தை விதித்துள்ள நிபந்தனையைக் கூறுகிறேன். மேலே பார்த்தீர்களானால் ஒரு மீனின் உருவம் சுழல்கிறது. கீழே எண்ணை நிரப்பப்பட்ட தொட்டியில் மீனின் பிம்பம் தெரிகிறது. கீழேயுள்ள மீனின் பிம்பத்தைப் பார்த்து, மேலே சுழலும் மீனின் கண்ணைக் குறிபார்த்து அம்பினை எய்யவேண்டும். இப்போட்டியில் வெற்றி பெறும் வீரனுக்கு என் தங்கை மாலை சூடுவாள். வில்லும் ஐந்து அம்புகளும் உள்ளன. உங்கள் ஆற்றலை நிரூபிக்கும்படி வீரர்களாகிய உங்களை அழைக்கிறேன்.

திரௌபதி மாலையை ஏந்தி அரச குமாரர்களை நோட்டமிடுகிறாள். துரியோதனனை களத்தில் இறங்கும்படி கர்ணன் சைகை செய்கிறான். சகுனி எழுந்து துருபதனுக்கு வணக்கம் செலுத்துகிறான். பின்னர் வில்லிருக்குமிடம் செல்கிறான்.

**பலரா:** கிருஷ்ணா...! அந்தச் சொத்திப் பயலைப் பார்த்தாயா...?

**கிருஷ்:** நானும் கவனிக்கிறேன்!

துரியோதனன் மீன்பொறியையும் எண்ணைத் தொட்டியில் தெரியும் பிம்பத்தையும் மாறிமாறிப் பார்த்த பின் வில்லிருக்குமிடம் வருகிறான்.

**சகுனி:** மருமகனே! வில்லை எடு..!

துரியோதனனால் அந்த வில்லைத் தூக்க முடியவில்லை. கர்ணன் அதிர்ச்சியடைகிறான்.

**கிருஷ்:** பார்த்தீர்களா அண்ணா! வீண் பெருமை சுத்த வீரனுக்கேற்றதல்ல என்ற உண்மையினை ஆச்சாரியார் தமது மாணாக்கர்களுக்கு புகட்டவில்லைப்போலும்!

துரியோதனன் பலமுறை முயன்றும் வில்லினைத் தூக்க முடியவில்லை.

**சகுனி:** விடாதே...! தூக்கு...!

துரியோதனனால் முடியாதுபோக அவமானத்துடன் இருக்கைக்குச் செல்கிறான். ஜராசந்தனும் மற்றும் இரு அரச குமாரர்களும் முயற்சி செய்தும் வில்லினை அவர்களால் அசைக்கக்கூட முடியவில்லை. திஷ்டத்துய்மன் வேதனை அடைகிறான். சிசுபாலனும் தோல்வி கண்டு திரும்ப திரௌபதி நகைக்கிறாள். கிருஷ்ணனும் நோட்டமிடுகிறார். பாண்டவர்களும் எல்லா நிகழ்ச்சிகளையும் பார்க்கின்றனர். துருபதன் வேதனையுடன் தலைகுனிகிறான்.

**சகுனி:** இப்போது மனம் வருந்திப் பயன் என்ன? அஸ்தினாபுரத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்திவிட்டாய்.

**கர்ணன்:** கர்ணன் இருக்கும்போது அவ்வாறு எதுவும் ஏற்படப்போவதில்லை மாமா!

கர்ணன் எழுந்து துருபதனுக்கு மரியாதை செலுத்திவிட்டு யாக வில்லை வணங்கியபின் வில்லை ஏந்தி நாணைப் பூட்ட முயற்சிக்கிறான். மக்கள் "வாழ்க அங்கதேசத்துக்கதிபன் கர்ணன்" என்று வாழ்த்துகின்றனர். கிருஷ்ணனுட்பட சகலரும் கர்ணனை நோக்குகின்றனர். அதேவேளை திரௌபதியின் குரல் கணீரென்று ஒலிக்கிறது.

**திரௌ:** நிறுத்துங்கள்!

எல்லாரும் அதிர்ச்சியடைகின்றனர்.

**திரௌ:** ஒரு தேரோட்டியின் மகனுக்கு நான் மாலை சூட மாட்டேன்.

**கர்ணன்:** அவ்வாறானால் உன் கைப்பூமாலையிலுள்ள பூக்கள் உதிர்ந்து சருகாக வேண்டியதுதான்!

கர்ணன் நாணைக் கழற்றிவிட்டு வருத்தத்துடன் வில்லை மீண்டும் வணங்கியபின் இருக்கையில் அமர்கிறான்.

**துரியோ:** துருபத மாமன்னரே! ரிஷி மூலம், நதி மூலம் எவரும் பார்ப்பதில்லை. அவ்வாறே வீரனின் வரலாறும் விசாரிக்கப்படுவதில்லை. எனது நண்பன் இந்தப் பெரும் சபையில் அவமானப் படுத்தப்பட்டுவிட்டான். சுயம்வரத்தில் கலந்து கொள்வோருக்கான விதி முறைகள் இருந்திருக்குமானால் முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**திஷ்ட:** அஸ்தினாபுர இளவரசர் உச்சஸ்தாயியில் பேசி எமது விருந்தோம்பும் பண்பினை அவமதிக்கிறார். அங்க தேச அதிபதி கர்ணனும் எமது அழைப்பை ஏற்று வந்த விருந்தினரே! அவரும் துரோணாச்சாரியாரின் மாணாக்கரான தாங்களும் சுயம்வரத்துக்கான விதி முறைகளை அறிந்திருக்க வேண்டியவர்கள். சம அந்தஸ்துடையவர்களுக்குள் தான் உறவு நிலைபெறும். தெய்வ அனுக்கிரகம் பெற்ற என் தங்கை ஒரு தேரோட்டியின் மகனை வரிக்க முடியாதென்றால் அதற்கு மறுவார்த்தை கிடையாது. கர்ணன் கூறியது சரியெனவே தோன்றுகிறது. இத்தனை மாவீரர்கள் மத்தியில் சுயம்வர நிபந்தனையை நிறைவேற்ற முடியாவிட்டால் என்ன செய்வது? அர்ச்சுனனுடன் வில் வீரமும் வீழ்ந்து விட்டது என்றே தோன்றுகின்றது.

அர்ச்சுனன் மற்றும் சகோதரர்களின் உருவம் காட்டப்படுகிறது.

**திஷ்ட:** பாரத நாட்டிலேயே வேறு வில் வீரன் இல்லையா? இந்தச் சுயம்வர நிபந்தனையை நிலைநாட்ட எந்த வீரனாலும் முடியாதா?

அரசர்கள் அனைவரும் தலைகுனிகின்றனர். அந்தண வேடத்திலிருந்த அர்ச்சுனன் யுதிஷ்டிரனை நோக்க அவர் சம்மதம் அளிக்கிறார். கிருஷ்ணரின் சைகையும் கிடைக்கிறது. வில்லினை வணங்கிவிட்டு இலக்கினை அர்ச்சுனன் பார்க்கிறான்.

**துரியோ:** இந்த வில் பிராமணனுக்குரியதல்லவே! வீர சத்திரியர்களால் முடியாத இக்காரியத்தை இந்த பிராமணன் நினைத்துப் பார்க்கத்தான் முடியுமா?

இவ்வார்த்தைகளைக் கேட்ட பீமன் துரியோதனனைத் தாக்கத் துடிக்கிறான். யுதிஷ்டிரன் தடுக்கிறான். அர்ச்சுனன் வில் அம்புகளை எடுக்க விரைகிறான்.

**துரியோ:** இவன் அங்க அமைப்புக்கள் இவன் ஒரு பிராமணனல்ல என்றல்லவோ காட்டுகின்றன.

**இளவரசர் 1:** அவனுடைய தோற்றத்தைப் பார்! ஒரு யானையைப் போலிருக்கிறான். அவன் புயங்கள்-விம்மியுள்ள தோள்கள்...!

**இளவ 2:** இவன் வெற்றி பெறுவான் போல் தெரிகிறது.

- அர்ச்சுனன் வில் இருக்குமிடம் செல்ல, துருபதன் சைகை கொடுக்கிறான். வில்லினை வணங்கி விட்டு கையில் எடுக்கும் லாகவம் கண்டு சபையோர் திகைக்கின்றனர். "பிராமண இளைஞன் வாழ்க" என்ற வாழ்த்தொலி கிளம்புகிறது.
- வில்லினை ஏந்திய வண்ணம் இலக்கான மீனையும் பிம்பத்தையும் மாறிமாறிப் பார்த்த பின்னர் நாணையும் ஏற்றுகிறான். சபையோர் மெய்மறந்து இக்காட்சியைக் காண்கின்றனர்.
- நாணினைக் தட்டியதும் அவை முழுவதும் அதன் எதிரொலி கேட்கிறது.

<u>பின்னணிப்பாடல்:</u>

வாய்ப்பான வேளையொன்று வந்துதித்தது-வந்த
வேகமதில் வீரனவன் தோளைத் தொட்டது
ஆய்ந்தறிந்தோன் கையினிலே வில்லை ஏந்தினான்
அவையனைத்தும் அதிர்ச்சியுற நாணையேற்றினான்.

இன்னும் வரும்.

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி நூலகத்திட்டம்


அருள் ஜுவலர்ஸ்



4363431

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11



## அடுத்த வாரிசு!



போட்டிகளின்போது சிறந்த புகைப்படமும் வெளிவர வேண்டும். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் புகைப் படங்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். படமும் கதை சொல்லிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

படத்தில் பயில்வான் போன்று அட்டகாச உடம்போடு இருப்பவர் 'றக்பி' விளையாட்டு வீரர். தனது செல்ல மகனின் வெள்ளைச் சிரிப்பை இரசித்து மகிழும்காட்சி இது.

பத்திரிகைப் போட்டியின் போது இந்த காட்சியை எடுத்த 'த மெயில் ஒன் சண்டே' சஞ்சிகையின் நிருபர் ஜியோஃப் வில்கின்சன் என்னும் படப்பிடிப்பாளர் இதன்மூலம் விருது பெற்றுவிட்டார்.

Kala JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11


## தருவது வி யோ-டெ

யானையின் தந்தத்துக்கு மட்டும்தானா மவுசு? பசுவின் கொம்புக்கும் பதிகிராக்கிதான். ஸ்கொட்லாந்தில் உள்ள 'கிரிஸ்' ஏலவிற்பனை நிலையத்தில் பசுவொட்டின் கொம்போடு கூடிய தலையை 300 பவுண் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள்.

வெட்டப்பட்டு பதனமாக பாடம் பண்ணப்பட்டு விற்கப்பட்டுவிட்டது. வாகனத்திற்கு கொண்டுவரும் போது தலை சற்று சரிய சாரதிக்கு முதலில் திகைப்பு. பின்னர் விசாரித்து செத்த பின்னும் சாந்தமான பசுவிற்கு போகவில்லை குறும்பு.

விரட்டிவிட்டது பாருங்கள் கொம்பால்!

## கொம்பு நீட்டியொரு குறும்பு




தினமுரசு வாரமலர்

கட்டுரைக்கான சிறந்த படப்பிடிப்பாளர் என்னும் விருதை இந்தப் புகைப்படம் வாங்கிக்கொடுத்துவிட்டது.

எதையும் ஆர்வத் தோடும், புதிய கோணத் தோடும் செய்யும் போது அதன் சிறப்பே தனிதான்.

## ஊருக்கு அழகு தேர் உலாக் காட்சி!



திருகோணமலையில் கடைசியாக எடுக்கப் பட்ட புள்ளிவிபரம் அதிர்ச்சி தருகிறது. சிங்களவர் 34.8 வீதமும், தமிழர்கள் 33.8 வீதமும் முஸ்லிம்கள் 30.4 வீதமும் வாக்காளர்களாக உள்ளனர். வருகின்ற தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர் பிரிந்து நின்றால் நஷ்டம்தான்.

அரசியல் விரோதங்களும் குத்துவெட்டுக்களும் ஒருபுறம் இருக்க, திருமலை மெல்ல மெல்ல தமிழ் பேசும் மக்களிடம் இருந்து விலகிப்போகிறது.

குடியேற்ற திட்டங்களால் பறிபோகும் திருமலை மண்ணில் தீந்தமிழ் கடவுள் திருமுருகன் தனது இரு துணைவியர் சகிதம் சித்திரத்தேரில் பவனிவரும் காட்சி. திருமலை காப்பதாக தேர்தல் காலங்களில் உரத்து முழக்கமிடுவோர் ஒன்றுபட்டு கடமை செய்ய கந்தவேளின் அருள் கேட்கிறார்களோ அவர் பக்தர்கள்? திருமலை அருள்மிகு முத்துக்குமாரசாமி ஆலய தேர்பவனிக் காட்சி இது. தேர் உலாக் காட்சி ஊருக்கு அழகு. தேரின் அழகும் கம்பீரமும் பக்தர்கள் நெஞ்சில் பரவசம் ஊட்டும்.

(படஉதவி- திருமலை நிருபர்)

## பலப்பல ரகமா இருக்குது காரு

கார் உற்பத்தி நிறுவனங்கள் கடும்போட்டியில் புதிய ரக கார்களை உற்பத்திசெய்து குவிக்கின்றன. வெளிநாடுகளில் புதியரக கார்களுக்கு ஏகப்பட்ட மரியாதை. ஏற்கனவே உள்ள காரை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு புதியரக காரில் ஜாலியாக கொவரைத் தூக்கிவிட்டுக் கொண்டு உலாவர ஆசை. கார் விற்பனையாளர்களுக்கும் குசிதான்.

படத்தில் உள்ள சுவீடன் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள புதிய மோட்டார்வண்டி. பெற்றோல் செலவு கிடையவே கிடையாது. மின்கலம் மூலம் 50 மைல் செல்லக் கூடியது. பின்னர் தானாகவே ஏற்படும் உள்ளொளி வெப்பத்தினால் மேலும் 150 மைல் செலவில்லாமல் சீறிப்போகும். கொலொன் 2000 என்று பெயரிட்டுள்ளார்கள். இதன்வேகம் மணிக்கு 70 மைலாகும். சுவீடனில் விற்பனைக்கு வந்துவிட்டது. விலை 27,500 அமெரிக்க டொலர்.



## வெள்ளம் மூட முன்னர் உள்ளம் திறந்து....



இந்த ஆண்டு 'பிரிட்டிஷ் பத்திரிகை புகைப்பட கலைஞர்' விருதுக்கான போட்டிக்கு வந்து குவிந்துள்ள ஆறாயிரம் படங்களில் இதுவும் ஒன்று-

வெள்ளம் தலைக்கு வரப்போகும் விபரீத நேரத்தில் தொலைபேசியில் யாருடன் பேசுகிறார்?

அவசர உதவிப் பிரிவுக்கு அல்லது அன்புள்ள காதலியின் வீட்டுக்கு.

காதலியோடு என்றால் இவர் என்ன பேசியிருப்பார்?

யோசியுங்கள். சுவாரசியமான கற்பனைகள் வரவேற்கப்படுகின்றன.

ஒரு தபாலட்டையில் 10 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அனுப்பி வையுங்கள். சிறந்த பத்து கற்பனைகளுக்கு இடம் தரப்படும். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.06.94

அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு வாரமலர்
த.பெ.இ-1772
கொழும்பு.

## பாறையில் அமர்ந்த பாவை



தன் காதலனின் அணைப்பில இந்த அழகி அமர்ந்திருப்பது எதன்மீது என்று ஊகிக்க முடிகிறதா? கண்ணாமணியால் செய்யப்பட்ட பாறை போன்ற இருக்கையில்தான் சொகுசாக இருப்பது போல் சிரித்துக்கொண்டிருக்கிறார்.

அவர் சிரித்துக்கொண்டிருந்தாலும் இருக்கை உடைந்து எங்கே விழுந்துவிடுவாரோ என்ற பயத்தில் நெஞ்சனை கொடுத்து தாங்கிக் கொண்டிருக்கிறார் காதலன்.

என்னே காரிசனை!